
ஜூன் 21 - 27, 2004 24 பக்கங்கள் 16.00
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI
සුඩර් ඔළි
வார மலர்

# போரா? சமாதானமா?



# உச்ச நிலை அடைந்திருக்கும் எதிர்க்கட்சியின் செயற்பாடுகள்

நாடாளுமன்ற அமர்வு கடந்த 8ஆம் திகதி பெரும் களேபரத்தின் மத்தியில் கூடிக் கலைந்த பின்பு, தனது பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான அனைத்து வாய்ப்புக்களையும் அரசு இழந்த நிலையில் மிகவும் குழப்பமான ஒரு நிலைக்குள் ஜனாதிபதி தள்ளப்பட்டிருக்கின்றார்.

கடந்த ரணில் அரசினது ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளை அம்பலப்படுத்துவதன் மூலம் தனது அரசை தக்க வைப்பதற்காக ஜனாதிபதி எடுத்த முயற்சிகள் எவையும் பெரிதாக எடுபடவில்லை.

புதிய அரசு பதிவிக்கு வந்ததில் இருந்து நாட்டின் ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கும் வகையில் நிகழ்ந்த அனைத்து வன்முறைச் சம்பவங்களுக்கும் ஜனாதிபதி பதில் கூறியாக வேண்டும் என எதிர்க்கட்சி உறுதிப்பட தெரிவித்துவிட்டது.

அதுமட்டுமன்றி, நாட்டில் நிகழ்ந்த அசம்பாவிதங்களைக்காரணம் காட்டி, ஜனாதிபதி மீது குற்றப் பிரேரணை ஒன்றை கொண்டுவரப் போவதாகவும் எதிர்க்கட்சி அறிவித்திருக்கிறது.

அரசின் இந்த அடாவடித்தனங்களுக்கெதிராக கட்சி வேறுபாடுகளை மறந்து அனைவரும் இந்த அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்கு தம் பங்களிப்பை வழங்க வேண்டுமெனவும் எதிர்க்கட்சி அறைகூவல் விடுத்திருக்கிறது.

### தமிழ்த்தரப்பின் அரசுக்கெதிரான முன்னெடுப்புகள்

சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்ட நிலையில், விடுதலைப்புலிகள் வடக்கு கிழக்கின் அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்திப்பொன்றுக்காக அழைத்திருந்தார்கள்.

தமிழ்க்கைதிகளின் விடுதலை, யுத்த காலத்தின்போது காணாமற்போனோர் தொடர்பான விவகாரம், பேச்சுக்களை அரசு இடைநிறுத்திக்கொண்டுள்ள பிரச்சினைகள் உள்ளடங்கலாக அரசுக்கு எவ்வாறு அழுத்தங்களைக் கொடுப்பது என்பது தொடர்பான கலந்துரையாடலுக்காக இந்தக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இனிவருங்காலத்தில் அரசின் அமைச்சர்கள் வடக்கிற்கு வரும்போது, அவர்களுடன் சந்திப்பினை ஏற்படுத்திக்கொள்வதில்லை என்ற தீர்மானத்தையும் தமிழ்த்தரப்பு இந்தச்சந்திப்பில் எடுத்துக்கொண்டுள்ளதாக தெரிகிறது.

கூடவே, ஜே.வி.பியின் சமாதானத்துக்கெதிரான செயற்பாடுகள் அனைத்துக்கும் ஜனாதிபதியே பொறுப்பு எனக்கூறியுள்ள தமிழ்க்கூட்டமைப்பினர், வடக்கு கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலுக்கான அழைப்பினையும் ரத்துச் செய்திருக்கிறார்கள்.

இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமும், இலங்கையின் சிறுபான்மை மொழி, மத குழுக்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய முயற்சிகளுக்கு இந்தியாவின் ஒத்துழைப்பு கிடைக்கும் என்று கூறியிருக்கிறார்.

மறுபுறத்தில், விடுதலைப்புலிகளும், கிழக்கில் நடைபெறும் கொலைகளைக்கட்டுப்படுத்த இராணுவத்துக்கு முடியாதிருப்பதால்,இக் கொலைகளின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதற்கு இராணுவத்தின் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் ஆயுதங்களுடன் நடமாடுவதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள்.

### மோசடி அம்பலமானதில் எதிர்க்கட்சிகள் கொந்தளிப்பு

கடந்த அரசின் காலத்தின்போது அதன் அமைச்சர்கள் பணம் செலுத்தாது பெற்றுக்கொண்ட 102 வாகனங்களுக்கான 103 மில்லியன் ரூபா பணத்தை எதிர்க்கட்சியினரிடமிருந்து அறவிடும்படி ஜனாதிபதி சுங்கத்திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார்.

அத்துடன், கொழும்பு – கட்டுநாயக்கா வேகப்பாதை அமைப்பதற்கான திட்டத்தில் 1000 கோடி ரூபாவை சுருட்டுவதற்கு ரணிலின் ஆட்சிக்காலத்தில் முயற்சிக்கப்பட்டதாகவும் ஜனாதிபதி குற்றம் சாட்டியுள்ளார்.

பிந்தியதாக, எதிர்க்கட்சினர் அரசைக் குழப்ப முயன்றால் தேர்தல் ஒன்றைச் சந்திக்க வேண்டிவரும் என அரசு விடுத்த எச்சரிக்கைக்குப் பதிலடியாக, சமகால நெருக்கடி நிலைமையைத் தெளிவுபடுத்தி, ஜனாதிபதிக்கெதிராக குற்றப்பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து அவரைப் பதவி விலக்கப் போவதாக எதிர்க்கட்சியினர் அறிவித்திருக்கிறார்கள்.

பதிலுக்கு ஜனாதிபதியும்,ரணிலின் கட்சியினர் மோசடிகள் மூலம் சுருட்டிக் கொண்ட பணத்தை அவர்களிடம் இருந்து மீளவும் பெற்றுக்கொள்வதற்கான புதிய சட்ட மூலம் ஒன்றை நாடாளுமன்றில் சட்டமாக்கி அதன் மூலம் மோசடிப்பணத்தை அறவிடப்போவதாக அறிவித்ததில் இருந்து அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையிலான மோதல்கள் உச்சக்கட்டத்துக்கு வந்திருக்கின்றன.



### ஜனாதிபதியின் தற்பாதுகாப்புக்கான முயற்சிகள்

பொதுத் தேர்தல் நடைபெற்ற பின்பு நடைபெற்றுள்ள மூன்று நாடாளுமன்ற அமர்வுகளும் வரலாற்றில் இதுவரை இடம்பெறாத அளவுக்கு கேலிக்குரியதாகவும் கீழ்த்தரமாகவும் நடந்து முடிந்ததன் பின்னர் தமது கட்சிகளுக்கேற்படப்போகும் ஆபத்தை அரசு நன்கு உணர்ந்து கொண்டுள்ளதாகத் தெரிகின்றது.

தனது அரசு தொடர்ந்து நீடிப்பது பற்றிய ஐயுறவான நிலைமைகளின் மத்தியில் அரசு கவிழ்ந்தால், அல்லது யுத்த சூழல் என்று ஏற்பட்டால் என்ன செய்வது என்பது பற்றிய அச்சங்களாலும் ஜனாதிபதி மிகவும் குழம்பிப்போயுள்ளார்.

இதற்கான முன்ஏற்பாடாக, ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த இலங்கை – இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தை அமுலுக்குக் கொண்டுவருவதன் மூலம், இராணுவப் பயிற்சி, ஆயுதவிநியோகம் மற்றும் கரையோரப்பாதுகாப்பினை இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்வதிலும் ஜனாதிபதி மிகவும் ஆர்வமாக உள்ளார்.

இப்போது கம்போடியா நாட்டுடனும் இராணுவ புலனாய்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்காக இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உட்பட குழு ஒன்றை ஜனாதிபதி கம்போடியாவுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

### அரசுக்கெதிரான எதிர்க்கட்சியின் பிரயத்தனங்கள்

தங்களுக்கு ஏற்ற சந்தர்ப்பம் ஒன்றை எதிர்பார்த்திருந்த எதிர்க்கட்சியினர், கடந்த 8 ஆம் திகதி நாடாளுமன்றச் சச்சரவுகளுக்குப் பின்பு உஷாரடைந்துவிட்டனர் என்று தெரிகிறது.

ரணிலுக்கெதிராக ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ள மோசடிகளுக்குப்பின்பு இனியும் பேசாதிருந்தால் தமது இருப்பும் மோசமாகிவிடும் என்பதை உணர்ந்து கொண்டுள்ள ரணில், பதிலுக்கு தானும் வரிந்துகட்டிக்கொண்டு ஜனாதிபதிக்கெதிராக போர் புரியத்தயாராகி விட்டார்.

நாடாளுமன்றக் கூட்டத்தின்போது ஹெல உறுமய எம்பிக்களுக்கெதிரான தாக்குதல்களில் அரசு தரப்பு நேரடியாக இறங்கி விட்டதன்பின்பு இனி, ஹெல உறுமயவும் எதிர்க்கட்சியுடன் சேர்ந்து ஜனாதிபதிக்கெதிரான முயற்சிகளுக்கெதிராக இறங்கப் போவதாக அறிவித்துவிட்டது.

### ஜனாதிபதி – தமிழ் கூட்டமைப்பு சந்திப்பு குறித்த முரண்பாடான தகவல்கள்

கடந்த 10 ஆம் திகதி இடம் பெற்ற ஜனாதிபதியுடனான சந்திப்பு குறித்து தமிழ் கூட்டமைப்பினர் வெளியிட்ட சாதகமான கருத்துக்களுக்குபின்பு ஜனாதிபதி செயலகம் கடந்த 12 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கை மாறுபாடானதாக வெளிவந்துள்ளது.

விடுதலைப்புலிகளின் நிபந்தனைகளின் அடிப்படையில் பேச ஜனாதிபதி தயாரில்லை என்றும், பேச்சுக்களுக்கான நிகழ்ச்சிநிரல் தொடர்பாக எதையும் தாம் வெளியிடவில்லை என்றும் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும், அடுத்த சுற்றுப்பேச்சுக்கள் தொடர்பாக தாம் தமிழ் தரப்புடன் ஆராய்ந்து கொண்டிருப்பதாகவும், அது அறிவித்துள்ளது.

இதன் உண்மை நிலை என்னஎன்பது சரியாக வெளிவராத நிலையில், ஜூலை 10 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபை சபைத் தேர்தல் முடிவுகள் தமக்குப் பாதகமாக அமைந்துவிடக்கூடாது என்பதில் ஆளும் தரப்பு மிகவும் அக்கறையுடன் இருப்பதாக தெரிகிறது.

பிந்தியதாக ஜே.வி.பியினர், புலிகளின் யோசனைகளுக்கு அமைய அரசு பேச்சுக்களை தொடர்ந்தால், அரசிலிருந்து வெளியேறப்போவதாக எச்சரித்திருக்கிறார்கள்.

கடந்த 8 ஆம் திகதி தமது காலியான இடத்திற்குப் புதிதாக ஒருவரை நியமிக்க ஹெல உறுமய எடுத்த முயற்சிகளுக்குப் பதிலடியாக ஆளும் தரப்பினர் ஹெல உறுமய மீது மேற் கொண்ட தாக்குதல்களுக்கு பௌத்த அமைப்புக்களும் ஆதரவாக செயற்படுவதாகவே தெரிகிறது.

இது தொடர்பாக பௌத்த அமைப்புக்கள் விடுத்துள்ள அறிக்கையில், மாவை சேனாதிராஜா எம்.பி இடைக்கால நிர்வாக சபை குறித்து பேசிய போது ஹெல உறுமய கட்சியினர் மௌனம் சாதித்ததாகவும், இறுதியாக நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வைக்குழப்பியவர்கள் ஹெல உறுமயவினர் தான் என்றும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வரலாற்றிலேயே முதல்தடவையாக பிக்குகள் பலபேர் சேர்ந்து ஒரு பிக்குவை கடத்திய நிகழ்வும் இப்போதுதான் நடந்திருப்பதாகவும், ஹெல உறுமயவினர் நீதிமன்ற உத்தரவையும் மீறி பதவிப்பிரமாணம் செய்ய முயன்றதால்தான் இந்தச் சச்சரவு ஏற்பட்டதென்றும், மேற்படி பௌத்த அமைப்பு தனது கண்டனங்களை வெளியிட்டுள்ளது.

இதனிடையே நாகரீகமற்ற முறையில் நாடாளுமன்றில் நடந்து கொண்டதற்காக அரசு தரப்பின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க விருப்பதாக ஜனாதிபதி கூறுமளவுக்கு நிலைமைகள் மோசமாகிப் போயுள்ளன.

போதாக்குறைக்கு, அரசுதரப்பின் தாக்குதலால் பாதிப்புக்குள்ளான தேரரை, நீதிமன்றத்துக்கு சமூகமளிக்கும்படி அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் தடை உத்தரவை மீறினார் என்ற குற்றச்சாட்டு அவர்மேல் சுமத்தப்பட்டுள்ளது.

### விடுதலைப்புகளுக்கு எதிரான அமைப்புக்களுக்குள் மோதல்கள்

ஜே.வி.பி – ஹெல உறுமய மற்றும் ஜனாதிபதியின் கட்சி என்பவற்றுக்கிடையில் புலிகளுக்கு ஆதரவாக நடந்து கொண்டமை தொடர்பாக பரஸ்பரக்குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

புலிகளுக்கு நாட்டை தாரைவார்க்கப் போவதாக ஆளும் கட்சியினர் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக்கொண்டு மோதல்களில் ஈடுபடுவது, இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்றில் மிகவும் புதிரான சம்பவங்களாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

நிலமைகளின் போக்கினை பார்க்கும் போது விடுதலைப்புலிகளின் பெயரைச் சொல்லி சிங்கள தேசத்துக்குள்ளேயே பெரும் போராட்டம் வெடித்தாலும் ஆச்சரியப்பட தேவையில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

அரசின் போராட்டம் இனி சிங்கள தேசியவாத கட்சிகளுடனா? இல்லை விடுதலைப் புலிகளுடனா? என்பது அனேகமாக ஜூலை 10 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களுக்குப் பின்பு தெரிந்து விடும்.

– சாலையூரான் –

## வாசகர் இதயம் பேசுகிறது

*எம்.விஜயன் – நீர்கொழும்பு*

சுடர்ஒளியே! நீதாங்கி வருகின்ற அனைத்து அம்சங்களும் சூப்பர் – அதிலும் பித்தன் பதில்கள் சூப்பரோ சூப்பர். கவிதைப்புனல் எங்களை கலக்குகின்றது. அரசியல் அம்சங்களும் அற்புதம். உனது சேவை தொடர எங்கள் வாழ்த்துக்கள்.

*கௌசி – ஸ்லாவி*

என் இனிய வணக்கம். நீண்ட நாளாக அங்கலாய்ப்புடன் இருந்த எனக்கு ஒரு மாத காலத்தில் என் ஓவியத்தை காத்திருக்க வைத்து பிரசுரித்தமைக்கு நன்றிகள்.

2003 ஆம் ஆண்டு பரீட்சை முடிவுபெற்று உயர்தர வகுப்பில் கல்வி கற்கப்போகும் எனக்கு ஒரு சந்தர்ப்பம் தந்தமைக்கும், பள்ளி மாணவர்களின் ஆசைகளை நிராசையாக்காது அனைவருக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தமைக்கும் ஆசிரியர்களுக்கும் சுடர் ஒளியே உனக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

*க.காயா – உடுப்பிட்டி*

என்னை அதிசயிக்கவைத்த இதழே! நீ சுமக்கும் வார்த்தை வடிவங்கள் வாரா வாரம் எனது கண்களில் குடிபுகுகின்றன. எதிர்பார்த்த திகதியில் உன் வருகைஇல்லை என்றால் ஏங்கியே பதறிப்போகிறேன்.

நான் உனது வாசகன் மட்டுமல்ல பற்பல ஆக்கங்களைஉன்னூடாகபடைத்தபடைப்பாளி.

உன்னால் நான் வளர்கிறேன். இது உண்மை. இதுபோல் இன்னும் உனது வருகையும் எனது படைப்பும் வளரவேண்டுமென இறைவனை வேண்டிக்கொள்கிறேன். அதே நேரம் என் பொன்னான ஒளிச்சுடரே நீ வாழ்கவென்று வாழ்த்துகிறேன்.

*த.கலைவாணி – குப்பிளான்*

சுடரே நீஎன்று இலங்கையில் பிறந்தாயோ அந்த நாள் தொடக்கம் வாரா வாரம் உனது ஒவ்வொரு பிறப்புக்களையும்நான் நல்வரவாக எண்ணிக் கொண்டிருக்கிறேன். அது மட்டுமின்றி உன் கவிதைப்புனல் தொடக்கம் கடைசிப்பக்கம் வரை யாவுமே அழகே.. அழகு..




உனக்காக நான்கோடி வணக்கம் கூறினாலும் யாவும் உனக்கீடாகாது.

அவ்வளவுக்குத் தகுதியான இதழே. உனது வரவு மென்மேலும் வளர்ந்து உலகெங்கும் ஒளிச்சுடர் பெற வேண்டும்.

உன்னிடத்தில் என் வேண்டுகோள். ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிகபடியான அரசியல் கட்டுரைகளைத் தவிர்த்து சமூகவிழுமியங்களை கவனிப்பாயா?




## குமாரி குற்றாலம் போகிறார்

''எல்லாத்துக்கும் ஒரு கொடுப்பனவு இருக்க வேண்டும். இல்லாட்டி குமாரிக்கு குற்றாலம் போக முடியுமா? அது அதுக்கு குடுத்து வைச்சி இருக்கனும்'' என்றார் அந்த பாவும் ஹிஸ்ஸும் ஆனவர்.

''என்ன வாப்பா திடீரெண்டு குத்தாளம் மத்தாளம் எண்டு வாரீங்க. ஒங்களுக்கும் சான்ஸ்பட்டதோ'' என்றார் நண்பர்.

''நீங்க ஒரு பக்கம் சார் அந்தப் பாவி மனுஷி எங்க இருந்து வந்தாளோ தெரியல. ஊட்டுலயும் பிரச்சினை. நாட்டிலையும் பிரச்சினை. ஒரே வம்பாப் போச்சி'' என்றார் ஹிஸ்ஸானவர்.

''அப்படி என்ன ஊட்டுல குழப்பம் வந்திச்சி?'' எனக் குடைந்தார் நண்பர்.

''இங்க பாருங்க போன கிழமை ஒரு முக்கியமான கூட்டம். ராவு தொடங்கி விடியக் காலம்பர மட்டும் நடந்திச்சி. தூக்கக் கலக்கத்தில விடியக்கொள்ள ஊட்டுக்குப் போனா மனிசி போட்டாளே ஒரு போடு...''

''விடியக்காலம்பர என்ன வாப்பா அப்படிப் போட்டுட்டாங்க?'' என்றார் நண்பர்.

''கிட்ட வாங்க சார் மெதுவா சொல்றன். என்ன,ராவுபூரா அந்தகுமாரியோட கும்மாளம் அடிச்சிப் போட்டு இப்பத்தான் வரக் கெடச்சிதோ என்று கேட்டுப்புட்டா.''

''என்ன வாப்பா நோனாவுக்கு இப்ப ஒங்கட மேல கொஞ்சம் கசமுசாதான் போல''

''சீச்சீ அப்படி எல்லாம் என்ட நோனா சந்தேகப்படமாட்டா. ஆனா காலையிலயே இப்படி ஜோக் அடிச்சி என்னைக் குழப்பிப் போட்டா'' என்றார் ஹிஸ்ஸாக.

''அது சரி ஏதோ விடிய விடிய கூட்டம் எண்டு சொன்னமாதிரி இருக்கு. அப்படி என்ன விசேஷம்.''

''ஓ... அதைக் கேக்குறீங்களா? நம்ப ஆளுங்க ரெண்டு பேரு அந்த குமாரியை வச்சி கட்சியையே கோலம் பண்ணிப்புட்டாங்க இல்லியா அது சம்பந்தமாத்தான்.''

''அதுதான் முடிந்த கதையாச்சே கட்சியில இருந்து நீக்கியாச்சே.''

''அதோட நிக்கலயே. இப்ப திரும்பி வந்து ஒட்டிக் கொள்ள துடிக்கிறாங்க. தூது மேல தூது அனுப்புறாங்க. அவுங்களோட அப்பீல் பற்றித்தான் ஆராய்ச்சி.''

''அப்படியா இழுத்துப் போட வேண்டியதுதானே.''

''நம்ப தலைவர் கூட அப்படித்தான் பெருந்தன்மையா மன்னிச்சி சேர்த்துக்குவோம் எண்டு சொல்லிப் போட்டார்.''

''அப்புறம் என்ன, மன்னிக்கிறது கடவுளின் குணம் இல்லியா?''

''ஒங்களுக்கு தெரியாதுங்கசார். நம்ப ஆளுங்க ஆண்டவனுக்கே தண்ணி காட்டிப்புடுவாங்க.''

''அப்ப என்னதான் செய்யிறதா உத்தேசம்?'' என்று மீண்டும் சீண்டினார் நண்பர்.

''உத்தேசம் எண்ட பொரவுதான் அந்த புனித தேசம் நினைவு வருது. இந்த ஆளுங்க இன்டைக்கு ஒன்னு சொல்லுவாங்க நாளைக்கு ஒன்னு சொல்லுவாங்க. அவுங்கள நம்ப ஏலாது. அதனால புனித மக்காவுல வைச்சி சத்தியம் பண்ண வேண்டும். உண்மையாகவே மனம் திருந்த வேனும் எண்டு ஒரு சாரார் பிடிவாதமா இருக்காங்க. கட்சியே இவுங்கள அங்க அழைச்சிப் போறதாவும் கதை. ஆனால் இவுங்க வாயை வச்சிக் கொண்டு சும்மா இருக்காததால மன்னிப்பே இல்லை என்று முடிவு பண்ணிப் போட்டாங்க.''

''நீங்க என்ன சொல்றிங்க எண்டு வெளங்கலியே! இதுக்கும் குமாரி குத்தாளம் போறதுக்கும் என்ன சம்பந்தம்'' என்றார் நண்பர்.

''அதுவா நிறைய இருக்கு. அது எல்லாம் அந்த குமாரியால வந்த யோகம்தானே'' என்று கூறிவிட்டு மெதுவாக நழுவிவிட்டார் ஹிஸ்ஸானவர்.

## பாலும் புளித்ததடி கண்ணம்மா அது பழங்கதை ஆனதடி

''உன்னை ஒன்று கேட்பேன் உண்மை சொல்ல வேண்டும். என்னைப் பாடச் சொன்னால் என்ன பாடத் தோன்றும்'' என்று பாடிக் கொண்டே கன்டீனில் இருந்து வெளிப்பட்டார் வினோதமானவர்.

''என்ன கையில் பத்திரிகையை வைத்துக் கொண்டு பழையபாடலுடன் கிளம்பிவிட்டீர். என்ன அந்த நாள் ஞாபகம் வந்து விட்டதோ?'' என்று இகழ்ந்தார் நண்பர்.

''ஓ... வாங்க சார்! நீங்களா எப்படிச் சுகம்'' என்றார் வினோதர்.

''ஐயா கதையை மாற்றாதீர்கள். பழைய பாட்டுக்கான காரணத்தை சொல்ல வேண்டும்'' என மடக்கினார் நண்பர்.

''இல்லை நம்ப புன்னகை மன்னர் அரைத்த மாவை அரைப்பது போல் பழைய பாடலை மீண்டும் மீண்டும் பாடிக் கொண்டிருக்கிறார். அதைப் பார்த்ததும்தான் எனக்கும் பழைய பாடல் நினைவுக்கு வந்து விட்டது'' என்றார் வினோதமானவர்.

''அப்படியா சங்கதி. என்னதான் அப்படிக் கூறி விட்டார்?''

''இங்கே பாருங்கோ! தேர்தல் நடந்து இரண்டு மாதங்கள் ஓடிவிட்டன. மந்திரிமாரும் கடமைகளை ஆரம்பித்து விட்டனர். இந்தப் புன்னகை மன்னர் மீண்டும் மீண்டும் தேர்தல் செல்லுபடியாகாது. வட பகுதியில் மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும்.'' என்ற பல்லவியைப் பாடுகிறார். அதோடு மூன்று தேர்தல் கண்காணிப்புக் குழுக்களும் தனது கருத்தை ஊர்ஜிதப்படுத்தி உள்ளன என்றும் சப்பைக்கட்சி அல்லோ கட்டி இருக்கார்'' என்றார் வினோதமானவர்.

''என்ன ஐயா அந்த மனிசருக்கு வாக்குக் கேட்கவும் மக்களைச் சந்திக்கவும்தான் தடை போடப்பட்டதாகக் கூறுகின்றார். அப்படியானால் போற போக்கைப் பார்த்தா பேசக் கூடாது என்று தடை விதிக்கப்படுமோ?'' என்று சீண்டினார் நண்பர்.

''எனனசார் நீங்க, நாங்கள் ஒன்றும் தடைச் சட்டம் போடவில்லை. மக்கள் அந்தப் புன்னகை மன்னரை நிராகரித்து விட்டனர் அவ்வளவுதான்'' என்றார் வினோதமானவர்.

''நீங்கள் என்ன ஐயா மக்கள் நிராகரித்து விட்டதாகக் கூறுகின்றீர்கள். ஆனால், அரசின் ஜனரஞ்சக ஊடகங்கள் எல்லாம் புன்னகை மன்னரின் அறிக்கைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளனவே!''

''ஆமாம் சார் அது உண்மைதான். இந்த புன்னகை மன்னர் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டபோது சின்னத்தை சின்னத்தனமாக சூறையாடி விட்டார்.

பின்பு வீட்டைக் கட்டி அதில் குடியேறினோம். அப்போது என்ன செய்தார்? லண்டன் மாப்பிள்ளையை வீட்டுக்கு உரிமை கோரும்படி தூண்டினார். எல்லாவற்றிலும் மூக்குடைபட்டார். இப்போது திரும்பத் திரும்ப அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கிறார். இதை யார் பார்க்கப் போறாங்கள்'' என்று காட்டமாகவே கூறினார் வினோதமான்வர்.

''அப்படி எண்டால் வேலை வெட்டி ஏதும் இல்லாததால் வெட்டிப் பிடுங்கிக் கொண்டு அறிக்கை விடுகிறார் என்று சொல்றியலோ'' என்று நண்பர் தூண்டிலை வீச. ''ஐயய்யோ! நான் அப்படிச் சொல்லவில்லை சார். அந்த மனிதர் தான் ஏதோ உளறிக் கொட்டுது என்றால் இன்னும் கொஞ்ச நேரம் உங்களிடம் பேசினால் நானும் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டி வந்திருக்கும். எனக்கூறிக் கொண்டே கம்பிநீட்டி விட்டார் வினோதமானவர்.


தபால் மூலம் இலவச வேதபாடம்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்

எம்முடைய ஸ்தாபனத்தினால் இலவசமாக தபால் மூலம் நடாத்தப்படுகின்ற வான்மலர் வேத பாடதிட்டத்தில் நீங்கள் இணைந்து பயன்பெறலாம். வெற்றிகரமாக நிறைவு செய்யும் ஒவ்வொருவருக்கும் பரிசுப் புத்தகமும், நற்சான்றிதழும் வழங்கப்படும். இன்றே கீழ்க் காணும் முகவரியில் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

LANKA HOPE MEDIA
P.O BOX 47
NUWARA ELIYA
Tel: 052 4490142



நீங்க கொம்ப்யூட்டர் Accountant ஆகணுமா?

Batch Starts on June 30th

Tally படிங்க

Authorised Tally Academy

CSC Computer Education

No : 200, 2nd Floor,
George R de Silva Mawatha,
Kotahena. Colombo 13.
Tel : 4613225, 2587099



ஊடகமே உலகம்
(வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை)
ஊடக டிப்ளோமா கற்கை நெறி

DIPLOMA IN MASS MEDIA
இக்கற்கைநெறியை மேற்கொண்டு Dip. In. M.M. (Sri Lanka)

DIPLOMA IN BROADCASTING
இக்கற்கைநெறியை மேற்கொண்டு Dip. In. B.C. (Sri Lanka)

சான்றிதழை பெற்றுக்கொள்ளுங்கள்

தபால் மூலம்

6 மாத கால பாடநெறி

தொடர்பு: (011) 4512830

MMIC 50, 2nd Floor, "Colombo Plaza" Galle Road, Wellawatta, Colombo - 06.
Mass Media Institute of Ceylon (Pvt) Ltd.,



மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஒடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...
ஜுன் 24 - 28 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

கல்முனையில்..
ஜூன் 05, 06, ஆம் திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பாமசி கல்முனை
Tel No. 067 2229329
Hot Line: 0777 569205

வவுனியாவில்...
ஜுன் 11, 12, ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...
ஜூன் 15 - 20வரை
A.S.N. கற்றுவாவிடுதி
392/A. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.



உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

எப்பேர்ப்பட்ட வியாதியானாலும் சரி, உடனே என்னை வந்து சந்தியுங்கள்



K. சிவசுப்பிரமணியம்
M.I.H.Ind-S.M.P.

எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, கால தாமதம் செய்யாமல் கீழ்க் கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத்தளர்ச்சி வீரியக்குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

RAJA BAJEEKARANA (Rasayana) LEGIUM
ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்
(முஸ்லிம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)



சாலாமிசிரி, பாதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துத் தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுதுணையானது. ஸ்திரி, புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி, தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, சுறுசுறுப்பையும், தேகாந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச் சூடு தணியும், மூலச்சூட்டைப் போக்கும், இருமல், மார்பு, இடுப்பு வலி, கால், கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட்பிரஷர் உள்ளவர்களுக்கும் சிறுவர், சிறுமியருக்கும் சிறந்தது.

நாட்பட்ட பீனிசம், இளைப்பு, இருமல், மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம். பத்தியமில்லை.

500 gram 300/-, 250 gram 150/-
வி.பி.பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் வைத்தியரைச் சந்திக்கலாம்.

Ayur Dr. K. Sivasubramaniam, முருகானந்தா வைத்தியசாலை
G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட், மீன்கடை மேல் (நிலமாடி)
கொழும்பு – 11. Tel: 2384645.

# சுடர் ஒளி

ஜூன் 21 – 27, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com


## ஆபத்தான சமிக்ஞைகள்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் யுத்த நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. அதேசமயம் ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டு ஒரு வருடம் கழிந்து விட்டது.

தற்பொழுது யுத்த நிறுத்தம் மட்டுமே அமுலில் இருந்த வருகின்றது. மன்னாரில் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள், கிழக்குத் தாக்குதல்கள் புலிகளைச் சீண்டி சமாதான சூழலை முற்றாகக் குழப்பும் நடவடிக்கைகளாக இருந்து வருகின்ற போதிலும் யுத்த நிறுத்தம் இன்னும் கடைபிடிக்கப் பட்டே வருகிறது. புலிகள் பொறுமை காத்து வருகிறார்கள்.

அரச தரப்பினரின் ஆத்திரமூட்டும் நடவடிக்கையின் மத்தியில் யுத்த நிறுத்தம் அமுலில் இருந்து வருகின்ற போதும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்கள் வெகு தூரத்திலேயே இருக்கின்றன.

இடைநிறுத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்காக புலிகள் நான்கு அடிப்படை விடயங்களைத் தெரிவித்திருந்தனர்.

இந்த அடிப்படை விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி நேரத்துக் நேரம் ஒன்று கூறி வருகின்றார். தெளிவாக எதனையும் கூற பின்னடித்து வருகிறார்.

கடைசியாக லண்டனுக்குப் புறப்பட முன்னர் நாட்டு மக்களுக்கு அரச தொலைக்காட்சி மூலம் ஆற்றிய உரையிலும் இந்த அடிப்படை விடயங்கள் குறித்து திட்டவட்டமாக அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

நான்கு அடிப்படைவிடயங்களில் ஒன்றான வடக்கு – கிழக்கு தன்னாட்சி அதிகார சபை தொடர்பான பேச்சுக்களும் இறுதித் தீர்வுக்கான விடயங்கள் தொடர்பான பேச்சுக்களும் ஒரே சமயமே நடைபெறும் என்ற அவரின் நிலைப்பாட்டிலும் மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அப்படி இருக்க புலிகளுடன் பேச்சு, அதே சமயம் ஏனைய கட்சிகளுடனும் ஆலோசனை என்ற புதிய குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார் ஜனாதிபதி.

இப்படியான நிலையிலேயே புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நிலைமை எவ்வளவு மோசமான கட்டத்தை அடைந்து கொண்டிருக்கின்றது என்பதை தெளிவுபடுத்தி இருக்கின்றார்.

கடந்த புதன்கிழமை நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்காருடனான சந்திப்புக்குப் பின்னர் தமிழ்ச் செல்வன் கருத்துத் தெரிவிக்கையில், அமைதி நிலையையும் சமாதான முன்னெடுப்புக்களையும் குழப்பி விடுதலைப்புலிகளைச் சீண்டி ஆத்திரமூட்டும் பல நடவடிக்கைகளில் அரசும் அரச படைகளும் ஈடுபட்டு வருகின்றன என்று குற்றஞ்சாட்டி இருக்கிறார். இப்படியான நிலைமை தொடர்ந்தால் விடுதலைப்புலிகள் இனிமேலும் பொறுமை காப்பது கடினம் என்றும் தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து அரசின் சமாதான விரோதப் போக்குக்கு எதிராக குடாநாட்டில் கண்டனப் பேரணியும் இடம் பெற்றிருக்கின்றது. சுமார் ஒரு லட்சம் மக்கள் வரை திரண்டு அரசின் மீதான தமது அதிருப்தியை வெளிக்காட்டி உள்ளனர். ஐந்து அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜரும் கையளிக்கப்பட்டிருக்கின்றது. தமிழ்ச்செல்வனின் கருத்து, யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற அரசுக்கு எதிரான கண்டனப் பேரணி எல்லாம் ஓர் அச்ச உணர்வையே ஏற்படுத்துகின்றன.

ஆகவே புலிகளினால் தெரிவிக்கப்பட்ட நான்கு அடிப்படை விடயங்களையும் அப்படியே ஏற்றுக் கொண்டு சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதே தற்பொழுது அரசுக்கு உள்ள ஒரே மார்க்கம்.

அரசு தொடர்ந்து இழுத்தடிக்கும் போக்கைக் கடைப்பிடிக்குமானால் தமிழ் மக்களின் அபிலாஷைகளை அடைய சரியான சந்தர்ப்பத்தில், சரியான நேரத்தில் புலிகள் முடிவு எடுக்க வேண்டி நேரிடும்.

# போரா? சமாதானமா?

மீண்டும் தமது சமாதானப் பணிகளை தொடர்வதற்காக நோர்வே தரப்பினர் கடந்த 16 ஆம் திகதி 9 ஆவது தடவையாகவும் இலங்கை வந்து சென்றுள்ளனர்.

ஏப்ரல் 18 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது நாடாளுமன்ற அமர்வின்போது, சபாநாயகர் தெரிவில் ஆளும் தரப்பின் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க முடியாமற் போன அன்றைய தினமே தனது அரசின் எதிர்காலம் குறித்த அவநம்பிக்கையில் ஜனாதிபதி தடுமாறுபவராக மாறிவிட்டார்.

அந்த தடுமாற்றத்தின் உச்சமே நேரத்துக்கு நேரம் நாட்டின் முக்கிய தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினையில் அவரது நிலைப்பாடு மாறிக்கொண்டிருக்கிறது. மீண்டும் போர்ச் சூழ்நிலை உருவாகுமோ என்ற அச்சத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

கடந்த 17 ஆம் திகதியன்று எதிர்க்கட்சியினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் மாநாட்டில், சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக உறுதியான நிலைப்பாட்டை ஜனாதிபதி கொண்டிருக்காமை காரணமாக மீண்டும் யுத்தம் ஏற்படக் கூடிய அபாய சூழல் தோன்யிருப்பதாக எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ராஜித சேனாரத்ன தெரிவித்திருக்கின்றார்.

இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட பேரணியில் அரசின் தவறான செயற்பாடுகளைக் கண்டிக்கும் கோஷங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.



இடம் பெயர்ந்த மக்கள் மீளவும் குடியமரும் விடயத்தில் அரசு பாராமுகமாக இருக்கின்ற நிலமைகள் மற்றும் நாட்டுப்பற்றாளர்கள் கொல்லப்படும் சம்பவங்கள், மலையகத் தமிழ் மக்கள் மீதான தக்குதல்கள் உட்பட அரசின் சமாதானத்தின் மீதான போலியான முகத்திரையை அம்பலப்படுத்தும் வகையில் இப்பேரணி தனது எதிர்ப்பை அரசுக்கெதிராக வெளிப்படுத்தியிருந்தது.

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவான அடுத்த நாளே ஜனாதிபதி இந்தியாவுக்கு அமைச்சர் கதிர்காமரை அனுப்பினார். நோர்வே அரசிடம் சமாதானப் பேச்சுக்கான அழைப்பையும் விடுத்தார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது தென்னிலங்கையில் வாக்குகளைப் பெறுவதற்காக விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவது குறித்து ஜனாதிபதி பிரஸ்தாபித்திருந்தார். ஆனால், தேர்தலில் வெற்றி பெற்று சபாநாயகர் தெரிவில் அரசு தோல்வி அடையும் வரை சமாதானப் பேச்சுக்களை நடத்துவது குறித்து அவர் எதுவுமே தெரிவிக்கவில்லை. எதிர்க்கட்சியில் உள்ள தீவிரவாதிகளான ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவைப் பெறுவதிலும் ஆளும் கூட்டமைப்பில் உள்ள பிரதான பங்காளியான ஜே.வி.பி.யுடன் ஆரம்பித்திலேயே முரண்படுவதைத் தவிர்ப்பதற்கும் ஜனாதிபதி இந்த உத்தியைக் கையாண்டிருக்கலாம்.

ஆனால், இறுதியாக நடைபெற்ற நாடாளுமன்ற சச்சரவுகள், பௌத்தபிக்குவான எம்பிக்களையே அரச தரப்பினர் பந்தாடும் அளவுக்கு நிலமைகள் மோசமாகிய பின்பு, அவ்வாறு தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்போவதாக ஜனாதிபதியே அறிவிக்குமளவுக்கு நிலமைகள் போய் விட்டிருந்தன.

உதவி வழங்கும் நாடுகள் வாக்குறுதி அளித்த 4, 500 கோடி ரூபாவைப் பெற்றுக் கொள்வதற்கும் நாடாளுமன்றத்தில் தமிழ் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்று பெரும்பான்மையைத் தக்கவைப்பதற்கும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டது.

நிரந்தர யுத்தநிறுத்தத்தை நோக்கிய அக்கறையுடனான சமாதான முயற்சிகள் என்பதற்குப்பதிலாக தனது இருப்பை பேணிக் கொள்வதற்கும், நாடாளுமன்றதின் ஆயுட்பலத்தை தக்கவைத்துக் கொள்வதற்குமென சமாதானப் பேச்சுக்களை ஆயுதமாக பயன்படுத்த ஜனாதிபதி எடுத்த முயற்சிகள் மிக முக்கியமான மூன்று சந்தர்ப்பங்களில் அவரால் மீறப்பட்டிருக்கின்றன.

பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பான முதல் விஜயத்தின் போது வன்னியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்த நோர்வே தரப்பினரிடம் தொடரப் போகும் பேச்சுக்கள் முன்னர் விடப்பட்ட இடத்தில் இருந்து ஆரம்பிக்கப் பட வேண்டும் என விடுதலைப்புலிகளால் கோரிக்கை விடப்பட்டிருந்தது.

அந்த விஜயத்தின் போதே தன்னாட்சி அலகின் அவசியம் பற்றி தமிழ் கூட்டமைப்பினர் நோர்வே சமாதானக் குழுவினரிடம் வலியுறுத்தி இருந்தனர்.

இந்தியா சென்றிருந்த கதிர்காமர் விடுதலைப்புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்வதாக அறிவித்ததில் இருந்து தென்னிலங்கை சிறுபான்மைக் கட்சிகளிடம் இருந்து வந்த எதிர்ப்பலைகள், எதிர்காலப் பேச்சுக்களின் நெருக்கடியை முன்னறிவிப்பவையாக இருந்தன.

நோர்வேயுடனான இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களுக்காக வன்னிக்கு சென்றிருந்த அன்டன் பாலசிங்கமும் கிளிநொச்சியில் நடத்திய பேச்சுக்களின் போது சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான விடுதலைப்புலிகளின் நான்கு அடிப்படை விடயங்களையும் நோர்வே தரப்பிடம் முன்வைத்திருந்தார்.

எதிர்காலப் பேச்சுக்களில் ஏற்படக் கூடிய இடையூறுகளைக் கவனத்தில் கொண்டு இந்தக் கோரிக்கைகளை விடுதலைப்புலிகள் முன்வைத்திருந்தனர்.

கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அவர்களின் முகாம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசின் மீதான நம்பிக்கையில் ஏற்பட்ட தளம்பல்கள் மற்றும் ஜே.வி.பியின் எதிர்ப்பிரசாரங்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக சில திட்டவட்டமான முடிவுகளை அறிவிக்க வேண்டிய நிலைமை புலிகளுக்கு இருந்தது.

புலிகளின் நிலைப்பாட்டை ஜனாதிபதியிடம் எடுத்துச் சென்ற நோர்வே தரப்பினர் அதுபற்றி கொழும்பில் தெரியப்படுத்தியும் இருந்தனர்.

புலிகளால் விடுக்கப்பட்ட நான்கு அடிப்படை விடயங்களையும் ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளதை உறுதிப்படுத்தவும், அதன் அடிப்படையில் பேச்சுக்களை தொடர்வதற்கும் நோர்வேயின் மூன்றாவது வன்னி விஜயத்தின் போது விடுதலைப்புலிகள் வினவியிருந்தனர்.

ஜனாதிபதியின் பதில் சாதகமாக இருந்ததாகவே நோர்வே தரப்பு கிளிநொச்சி சந்திப்பின் போது தெரிவித்திருந்தது.

பேச்சுக்கள் முடிவடைந்து அடுத்த நாள் அன்டன் பாலசிங்கம் வன்னியிலிருந்து கொழும்பு புறப்பட்டபோது விமான நிலையத்தில் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்த நோர்வே தரப்பினர் ஜனாதிபதியின் நிலைப்பாடு மாற்றம் அடைந்திருப்பதை தெரிவித்தனர்.

புலிகளின் நான்கு அடிப்படை விடயங்களையும் அப்படியே ஏற்றுக் கொள்வதாக முதலில் தெரிவித்த ஜனாதிபதி அவற்றில் பிரதானமான வடக்கு – கிழக்கு தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான தனது முன்னைய உறுதி மொழிகளில் பல்டி அடித்தார்.

அதாவது தன்னாட்சி அதிகாரசபை குறித்து முதலில் பேச்சு நடத்தி அதனை அமுல் செய்து கொண்டு அடிப்படை விடயங்கள் குறித்துப் பேசலாம் என்று முதலில் ஒப்புக் கொண்ட ஜனாதிபதி பின்னர் தன்னாட்சி அதிகார சபை பற்றிய பேச்சுக்களையும் அடிப்படை விடயங்கள் தொடர்பான பேச்சுக்களையும் ஒரே சமயத்தில் நடத்தலாம் என்றார்.

இரண்டாவதாக, கடந்த மாதம் 2 ஆம் திகதி பிரசல்ஸ்ஸில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் நிதி வழங்கல் தொடர்பான சாதகமான அறிவிப்புக்காக மீண்டும் பேச்சுக்களை தொடர்வதற்கு வசதியாக விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளுக்கு தான் இணங்குவதாக ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

ஆனால், இந்த அறிவிப்புக்கு மேலாக ஜே.வி.பி உட்பட தென்னிலங்கை சிறுபான்மை கட்சிகளின் கொந்தளிப்புகள் மிகவும் உச்சநிலையில் இருந்தமை காரணமாக பேச்சுக்களில் இடைக்கால நிர்வாகம் தொடர்பான பேச்சுக்களுக்கு முன்னுரிமை அளிப்பதில் தயக்கங் காட்டுபவராக இருந்தார்.

இறுதியாக தமிழ் எம்.பிக்கள் தரப்புடன் ஜனாதிபதி நடத்திய சந்திப்பின் போது தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான பேச்சுக்களுக்கு சாதகமான முடிவை ஜனாதிபதி வெளியிட்டதாக தமிழ் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்திருந்த போதும், கடந்த 12 ஆம் திகதிய ஜனாதிபதி செயலகத்தின் அறிக்கை ஜனாதிபதியின் சாதகமான அறிவிப்புக்கள் அனைத்தையும் மறுதலிப்பதாகவே இருந்தது.

நிலைமைகளை தொகுத்து நோக்கும் போது சமாதானப் பேச்சுக்கள் குறித்து புலிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதாக அறிவிப்பதும், பின்பு மறுதலிப்பதுமாக மூன்று சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி நேர்மையீனமாக நடந்து கொண்டிருக்கிறார்.

இப்போது நான்காவது தடவையாகவும் சமாதான பேச்சுக்கள் விடயத்தில் விடுதலைப்புலிகளை ஏமாற்றுவதற்கான முயற்சியில் ஜனாதிபதி இறங்கியுள்ளார்.

கடந்த 18 ஆம் திகதியன்று ஜனாதிபதியினது சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜெயந்த தனபால மூலம், சமாதானப் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயார் செய்யும்படி நோர்வே தூதுவர் ஊடாக நோர்வேயின் அனுசரனையாளர்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டிருக்கிறது.

அதன்படி நோர்வே தூதுவர் கடந்த 16 ஆம் திகதி கிளிநொச்சி சென்றிருக்கிறார். இந்தச் சந்திப்பின் பிறகு கிளிநொச்சியில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக லண்டனில் அன்ரன் பாலசிங்கமும் விதார் ஹெல்கிசனும் சந்தித்து சமாதான முயற்சிகள் தொடர்பாக நீண்ட நேரம் உரையாடியிருக்கிறார்கள்.

ஜனாதிபதி ஒப்புதலளிக்கும் விடயங்களுக்கு ஜே.வி.பி. மறுதலிக்கின்ற நிலைமைகள், அரசால் திட்டமிட்டே மேற்கொள்ளப்படுவதாக பல தரப்புக்களிலும் சந்தேகங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

நாடாளுமன்றின் நான்காவது அமர்வின் போது ஹெல உறுமயவின் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள், பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான அரசின் கோழைத்தனமான முயற்சிகள் பலனளிக்காத நிலையில் ஆளும் தரப்பு மோசமாக நிலைகுலைந்து போய் இருக்கிறது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான செயற்பாடுகள் மூலம், சர்வதேச சமூகத்திடமிருந்து நிதி வாங்கி நெருக்கடிகளை சிறிதளவாவது குறைக்கலாம் என்ற ஜனாதிபதியின் முயற்சிகளும் பலிதமாகாமல் போய்விட்டன.

பேச்சுக்களை தொடர்வதன் ஊடாக தமிழ் தரப்பின் சிறுபான்மைக் கட்சிகளின் ஒத்துழைப்புக்களாவது அரசின் பெரும்பான்மையை நிலைநாட்ட உதவும் என்ற எதிர்பார்ப்பில் மேற்கொண்ட முயற்சிகளும் ஜனாதிபதிக்கு கை கொடுக்கவில்லை.

பதிலுக்கு பங்காளிகளான தென்னிலங்கை சிறுபான்மைக் கட்சிகளுடன் அடிதடிக்குள் இறங்கி நிலைமைகளைச் சமாளிக்க வேண்டிய இக்கட்டான நிலைக்குள் ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கொண்டு சென்று விட்டிருக்கிறார்.

இப்போது அவரின் பிரயத்தனங்கள் யாவும் சாண் ஏற முழம் சறுக்கும் நிலைமைகளாகவே இருக்கின்றன.

விடுதலைப்புலிகளைச் சீற்றமடையச் செய்து வரும் கிழக்கு நிலவரங்கள், சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் ஏற்பட்டுள்ள தடங்கல் ஆகியவை தற்போதைய அமைதி நிலை நீடிக்குமா என்பதை கேள்விக்குள்ளக்கியிருக்கின்றன. புலிகள் எவ்வளவு காலத்துக்குப் பொறுமை காப்பார்கள்?

– சாலையூரான் –

# விட்டில் பூச்சிகள்

— ஆத்மா. —

கதிரவனின் குறும்புக் கூத்தினால் மேல்வானத்தாள் செங்கொழுந்தாயிருந்தாள். தென்றல் தேவனின் வருடலில் பூமித்தாய் குளிர்ந்து போயிருந்தாள். இயற்கையன்னை தினந்தோறும் அரங்கேற்றும் இந்த அழகிய காலைக்காட்சியின் அன்றாட ரசிகையான நித்யா வழமைபோல முற்றத்து மரக்குற்றியில் அமர்ந்திருந்தாள்.

''அக்கா'' என்ற அழைப்பு செவியில் விழவே திரும்பிப் பார்த்தாள் நித்யா. ''கோயில் பிரசாதம்'' என்று அவளிடம் கொடுத்துவிட்டு வீட்டுக்குள் நுழைந்தான், அவளது அன்புத் தம்பி வித்யன். அவனைப் பார்த்தபோது நித்தியாவின் நெஞ்சினில் சொல்ல முடியாத அளவுக்கு வேதனை பரவியது. தனது சிறுபிள்ளைத்தனமான செயற்பாடுகளாலும் வேடிக்கையான பேச்சினாலும் எலலோரையும் குதூகலப் படுத்தும் தனது தம்பி இப்பொழுது மௌனமே மொழியாக, சோகமே உருவாக நிற்பதை காணப்பொறுக்காத அவள் கண்களில் நீர் திரையிட்டது. முடிந்து போன அந்தக் கசப்பான நிகழ்வை அவள் மனம் ஒருமுறை தூசு தட்டிப் பார்த்தது.

இரண்டாயிரத்திரெண்டு புரட்டாதி மாதம் அவளென்ன அவளது குடும்பமே மறக்கமுடியாத மாதம்தான். யார் கண் வைத்தார்களோ? எப்பொழுதுமே கலகலத்துக்கொண்டிருக்கும் அவர்களது வாழ்வில் விதி விளையாடக் கங்கணம் கட்டியது. அந்தப் பொல்லாத விதி ஒரு பெண்ணுருவில் அவர்களின் இன்பமயமான வாழ்க்கைக்குள் புகுந்தது.

அடக்கமே உருவானது போன்று கண்கள் நிலம் பார்க்க நடைபயின்று வரும் அந்தப்பெண்ணினால் வித்யனின் வாழ்வு இவ்வளவுதூரம் திசைமாற்றப்படுமென பெற்றோர் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை.

அவ்வளவு தூரம் மாறிவிட்டான் வித்யன். ''நான் என்னவும் செய்வன். எப்படி எண்டாலும் நான் மூன்று ஏ (சுடர் ஒளி சிறுகதை) எடுத்தால் காணும் தானே?'' என்று பெற்றவர்களையே எதிர்த்துக் கதைக்கத் தொடங்கினான்.

பெற்றோரும் நித்யாவும், வித்தியனின் இந்த அதிரடி மாற்றத்தால் நிலை குலைந்து போயினர். ஆண்டவன் சோதனையோ யார் கொடுத்த போதனையோ என்று நொந்தவாறு நித்யா தனது தம்பியை அவதானிக்க முற்பட்டபோதுதான் அவளுக்கு அந்த கசப்பான உண்மை புரிந்தது. வாலிபத்தின் வாசலில் தெரியாத ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற கிறுக்கு உணர்ச்சியின் கிளர்ச்சியால் வந்ததை காதல் என்று எண்ணிக் கனவு கண்டு கொண்டிருந்தனர் அந்தப் பெண்ணும் வித்தியனும். இதை ஜீரணிக்க முடியாது தொய்ந்து போயினர் பெற்றோர்.

பதினெட்டு வயதென்பது காதல் செய்யும் வயதா? வந்து போகும் வான் வில்லுணர்வை காதலென்று கொச்சைப் படுத்தலாமா?

பெற்ற மனங்கள் பித்தல்லவா? அன்னையும் தந்தையும் வித்தியனுக்கு எவ்வளவோ எடுத்துக் கூறினர். ''தம்பி! முதல்ல படிப்பை முடி. ஒரு வேலையில சேர்ந்து உன்ர காலில் நின்று கொண்டு நீ என்னவும் செய்யப்பா. நாங்கள் கேட்க மாட்டோம். இப்ப படிப்பைக் குழப்பிப் போடாதையடா.'' என நிதானத்துடன் தந்தையும், ''உதால பின்னர் வரப் போவதை கொஞ்சமாவது யோசிச்சுப் பாரடா. அம்மா அப்பா பிள்ளைகளுக்கு நல்லதைத்தான் சொல்லுவினம். தயவு செய்து உந்தப் பைத்தியக்கார வேலையை விட்டுவிடு'' என்று கண்டிப்புடன் அம்மாவும் கூறியதெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கின் ஒலியாகப் போய்விட தனது விரசமான எண்ணங்களுக்குள் மூழ்கிப் போனான் வித்தியன்.

சரி, பெண் பிள்ளைதானே சொல்லுக் கேட்கும் என்றால் எங்கே அது சொல்வதைக் கேட்காது? பெண் பிள்ளையே இப்படியென்றால் ஆண்பிள்ளை எம் மாத்திரம்? வித்தியனை இவர்கள் என்ன சொல்லித்திருத்த முடியும்?



அந்தப் பெண்ணின் தாயோ பாசத்தின் உச்சியில்! ''நான் ஏதும் கூறினால் என்ன மகள் என்னை விட்டுப்பிரிந்து விடுவாள். அவளைப் பிரிவது என்னால் முடியாத காரியம்'' எனக் கூறி மெல்ல நழுவிவிட்டார். பெண்களைப் பற்றி யாரும் குறை சொன்னால் பொறுக்க முடியாத நித்யா, இதன் பிறகு இந்தப் புதுமையான பெண்மையையும் தாய்ப்பாசத்தையும் எண்ணி மனங்கூசிப் போனாள். பாரதியார் நல்லகாலம் இந்தக் கொடுமைகளைக் காணாமல் மறைந்து போனார்.

வித்தியனால் வீட்டில் அடிக்கடி தோன்றும் அனர்த்தங்களை சகித்தவாறே குடும்பத்தினர் வாழ்ந்தனர். அன்னையும், தந்தையும் மகனைப் படுகுழியில் இருந்து மீட்க சளைக்காது அவனுடன் போராடினர். காலச்சக்கரம் நகர நகர இறுதியில் வித்தியனுக்கு பரீட்சையும் வந்தது. சில மாதங்களின் பின்னர் பரீட்சை முடிவும் வெளியாகியது. அது வித்தியனின் வாழ்வில் இன்னொரு திருப்பத்தையும் ஏற்படுத்தியது.

தனக்குப் பின் நின்றவர்களெல்லாம் பல்கலைக்கழகம் ஏக, ஏன் தன்னைக் காதலித்த அந்தப் பெண் கூட பல்கலைக்கழகம் செல்ல, தனிமரமானான் வித்தியன். அவள் வீட்டிலோ கொண்டாட்டம். இவன் வீட்டிலோ சோககீதம். அந்தப்பெண் அந்தசந்தோஷத்திலோ என்னவோ வித்தியனிடமும் ''என்னைத் தயவு செய்து மறந்து விடுங்கள்'' எனக் கூறியும் விட்டாள்.

ஒன்றில்லாவிடில் இன்னொன்று உள்ளதென்று இருந்தவன் இரண்டுமில்லாமல் போக செய்வதறியாது தடுமாறிப் போனான். குடும்பத்தினரை முகம் நோக்கி எதிர்கொள்ள முடியாத நிலை. தன்னுள் தானே நடந்தவற்றையெல்லாம் எண்ணிக் குறுகிப் போனான். வெளியில் போகவும் முடியாமல், வீட்டினுள் இருக்கவும் முடியாமல் தவித்தான். மௌனமே மொழியாக சோகமே உருவாகத் தன்னுள்ளே அடங்கிப் போனான்.

வித்தியன் மீதிருந்த மிகுந்த பாசத்தினால் நடந்தவற்றையெல்லாம் தீராத துன்பத்துடன் பார்த்திருந்த குடும்பத்தினர், அவனை அரவணைத்துக் கொண்டனர். அவனது உள்ளக்காயங்களுக்கு பெற்றோரும் நித்யாவும் அன்பினால் மருந்திட்டனர். அந்த அன்பான குடும்பம் அவனுக்கு விடியலைக் காட்டியது. ''நடந்ததை ஒரு கெட்ட கனவாக மறந்து விடடா'' என்று தந்தையும், ''மனிதன் தவறு செய்வது இயல்புதானடா. இது உனக்கு முதலும் கடைசியாகவுமிருக்கட்டும். நடக்கவேண்டியதைப் பார். நாங்களிருக்கிறம் தானே. துன்பமெண்டாலும் இன்பமெண்டாலும் எல்லாம் எங்களுக்குத்தான்'' என்று அன்னையும், ''வித்தி! நீ இளைஞன் நீ சாதிக்க வேண்டியது உலகில் எத்தனையோ இருக்கு. ஆண்பிள்ளை ஒரு நாளும் மனமுடையக் கூடாது'' என்று நித்தியாவும் வித்தியனை நல்வழிப்படுத்தினர்.

வித்தியன் இப்பொழுதெல்லாம் ''நான் படிக்க வேண்டும். சமூகத்தில் ஒரு நல்ல நிலைக்கு வந்து என் அன்பான குடும்பத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும்'' என்று அக்கறையுடன் படிக்கின்றான். எனினும் அவன் பழைய வித்தியனல்லவே. அவன் மனதிலுள்ள ரணங்கள் அவனது வாழ்க்கையின் இறுதிவரை அவனை இம்சை செய்யும். அந்த ரணங்கள் இலேசில் ஆறக்கூடியவையல்லவே. இந்த வேதனை தேவைதானா?

வித்தியனைப் போல இப்படி விட்டில் பூச்சிகளான இளைஞர்கள் எத்தனையோ? என்று மனதினுள் எழுந்த கேள்வியால் ஒரு கணம் நித்தியாவின் மனம் சொல்லவொண்ணா வேதனையினுள் ஆழ்ந்து போனது. மிகுந்த பிரயத்தனத்துடன் எண்ணச்சுழலுள் இருந்து மீண்டாள் நித்தியா.

வீடு இருட்டிக் கிடந்தது. விளக்கேற்ற வேண்டும் என்ற எண்ணம் தோன்ற நித்தியா வீட்டினுள் விரைந்தாள்.

தடம் மாறிச் செல்லும் இளைஞர்களே! தமிழர் எம் இருண்டு போன வாழ்விற்கு விளக்கேற்ற வேண்டிய நீங்கள், உங்கள் வாழ்விற்கே பிறர் விளக்கேற்றி வைக்க வேண்டிய தேவையை இனியும் ஏற்படுத்தாதீர்கள்.

(யாவும் கற்பனை)

# தோல்விகள் நிரந்தரமானவை அல்ல...!

''வாழ்க்கை என்பது போர்க்களம். வாழ்ந்துதான் பார்க்கணும். போர்க்களம் மாறலாம் போர்கள் தான் மாறுமோ? நாம் எல்லோரும் சந்தோஷமாக வாழ்கின்றோமா எனும் வினாவை நம்மை நாமே கேட்போமாயின், 'இல்லை!' என்றே அநேகர் பதில் தரக்கூடும்.

எந்தவொரு நபருக்கும் ஏதோ ஒரு பிரச்சினை உண்டு. இந்தப் பிரச்சனைகளுக்கெல்லாம் காரணம் எமது உள்ளமே. 'உள்ளது போதும்!' என்ற பக்குவ மனப்பாங்கு எம்மில் எத்தனை பேருக்கு உண்டு.

பிரெஞ்சுப் பேரறிஞர் வால்டேர் அவர்கள் ''நாம் உண்மையில் வாழ்வதே இல்லை! வாழ்வோம் எனும் நம்பிக்கையில் தான் வாழ்கின்றோம்'' என்கிறார்.

முற்றிலும் உண்மையான வார்த்தை இது. பெயருக்காக வாழ்கின்றோமே அன்றி நாம் எம்மைக் கண்டு கொள்வதே இல்லை.

அயல் வீட்டிலே எப்போதும் சந்தோஷமாக இருக்கிறார்களே, ஏன் எனது வீட்டில் அந்த அமைதி, சந்தோஷமில்லை என்று ஒருவர் கேட்டார்.

வெளிப்பகட்டைப் பார்த்து ஏன் மயங்குகின்றீர்கள். உங்களுக்கு அருமையான கணவன் அமைந்திருக்கின்றாரா? விசுவாசமான மனைவி கிடைத்திருக்கிறாளா? நல்ல பண்பான குழந்தைகள் உண்டா? இவைகள் போதும் ஒரு மனிதனுடைய சந்தோஷமான வாழ்விற்கு! இவற்றை அமைத்துத் தந்த இறைவனுக்கு நீங்கள் நன்றி கூற வேண்டும்.

அவற்றை விடுத்து; அடுத்தவர்களைப் பார்த்து அவர்களைப் போல் நாங்கள் வசதியாய் இல்லையே என்று உங்களையே நீங்கள் குடைந்து கொள்ளாதீர்கள்.

அடுத்தவர்களைப் பார்த்து விமர்சிக்கின்றோமே அன்றிஎம்மை நாம் ஒருபோதும் பார்த்துக்கொள்வதில்லை.

நாம் எல்லாம் ஏதோ யோக்கியர்கள் போலவும், ஏனையோர் அயோக்கியர் போலவும் நினைத்துக்கொண்டு; மற்றவர்களை வசை கூறித் துன்புறுத்தியிருப்போம். இல்லாதது, பொல்லாதது சொல்லியிருப்போம்.

அவ்வாறு எம்மால் காயம்பட்ட உள்ளங்களுக்காய் நாம் உணர்ந்து மனம் வருந்தியிருக்கின்றோமா?



எம்மை நாமே காத்துக்கொண்டு ஜாக்கிரதையாகவிருக்க பயிற்சி செய்து கொண்டால் மெல்ல மெல்ல உள்ளம் மலரும். எமது அகத்தின் அழகு பிரகாசமாக முகத்தில் தெரியும். எமது முகம் மற்றவர்களிடத்திலிருந்து எமக்கு மரியாதையைப் பெற்றுத்தரும்.

எமது கடுகடுப்பான முகத்தோற்றத்திற்கு காரணம் ஆசைகள் நிறைவேறவில்லை, முன் எடுக்கின்ற காரியம் எல்லாவற்றிலும் தோல்வி என்று கூறுகின்றீர்களா? தோல்விகள் நிரந்தரமானவை அல்ல அவைகள் வெற்றியின் படிக்கற்கள்.


வருகின்ற தோல்விகளை, இழப்புக்களை காலில் போட்டு மிதித்துவிடுங்கள் அவைகள் மறைந்தேபோகும்.

'முயற்சி திருவினையாக்கும்' என்னால் முடியும், முடியுமானவரை முயற்சிப்பேன் என்று தீர்மானம் செய்யுங்கள். வெற்றியின் வாசலில் நீங்கள் நிற்பீர்கள்.

உள்ளங் கையில் நெல்லிக் கனியாய், உங்கள் கையில் வெற்றிக் கனி காண்பீர்கள்.

– பாபு –

## சஹாரா பாலைவனம் உல்லாச புரியாகிறது



சஹாரா பாலைவனம் என்றால் எவருமே அங்கு செல்வதற்குப் பயப்படுவார்கள். ஆனால், அல்ஜீரியாவின் உல்லாசப் பிரயாண முகவரான கடாசெனி சஹாரா பாலைவனத்தில் இவ்வாறு உல்லாசமாக நடந்து வருகிறார். காரணம் சஹாராவை ஒரு உல்லாசபகுதியாக மாற்றும் திட்டத்தை இவர் வகுத்திருக்கிறார். வெற்றுக் கால்களுடன் பாலை வனத்தின் செம்மஞ்சள் நிற மண்ணில் நடப்பது மிகவும் ரம்மியமானது என்கிறார் இவர்.

## ஹவாய் மன்னருக்கு கால் அளவு மாலை

இந்தியாவில் தேர்தல் காலமென்றால் தலைவர்களுக்கு கழுத்திலிருந்து காலை முட்டும் அளவுக்கு மாலை போட்டு மகிழ்வார்கள் தொண்டர்கள். ஹவாய் தீவின் மன்னரின் சிலைக்கு அவ்வாறு கால் அளவு மாலை சூடி மகிழ்கின்றார்கள் அந்த நாட்டு மக்கள். அதுவும் மூலிகை இலைகள், இஞ்சி, மஞ்சள், மலர்கள் ஆகியவற்றில் மாலை தொடுத்து மன்னர் சிலைக்கு அணிவித்து மகிழ்கின்றார்கள் அவர்கள்.



மசாலா மிக்ஸ்

## போதைக் கடத்தலை முறியடிக்கத் தீவிரம்



போதைப் பொருட்கள் படைபெருப்பதால் எத்தனையோ நாடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக பர்மா நெடுஞ்சாலை வழியாகத்தான் ஆசியாவின் போதைப்பொருட்கள் கடத்தப்படுகின்றன. இந்த வீதியில் போதைக் கடத்தலை முறியடிக்க பொலிஸார் தீவிரம் காட்டுகிறார்கள். நன்கு பழக்கப்படுத்தப்பட்ட நாய்கள், வாகனங்களைப் முகர்ந்து பார்த்து போதைப் பொருட்களைக் கண்டு பிடித்து விடுகின்றன.

## மோட்டார் சைக்கிள் வீட்டில் தயாரானது



கார் ரேஸ் மூலம் சாதனை செய்பவர்கள் ஒருபுறம் இருக்க. மோட்டார் சைக்கிள் ரேஸ் கியூபாவில் ஒரு குடிசைத் தொழிலாகிவிட்டது. பாரம் குறைந்த மோட்டார் சைக்கிள்கள் வீட்டிலேயே தயாராகின்றன. பாரம் குறைந்த பாகங்களுடன் சைக்கிள் தயாரித்து பிளாஸ்டிக் போத்தலில் எரிபொருள் நிரப்பி ரேஸ் ஓடி ஜெயிக்கிறார்கள் கியூபாவிலுள்ள கிராமத்து இளைஞர்கள்.

## கப்பம் வசூலிப்பதற்கு இப்படி ஒரு எச்சரிக்கை



கொலம்பியாவின் சில பகுதிகளில் துப்பாக்கி ஏந்திய கொள்ளைக்காரர்களின் கொட்டம் அதிகரித்திருக்கிறது. எல்லைப் புறத்திலுள்ள விவசாயப்பண்ணைகளில் கொள்ளையடிப்பதுதான் அவர்களின் வேலை. பண்ணையாளர்களைக் கடத்திச் சென்று கப்பம் வசூலிப்பதில் ஆர்வமுள்ளவர்கள் அவர்கள். ஒரு பண்ணையில் கப்பம் வசூலிப்பதற்காக கொள்ளையர்கள் கோழி ஒன்றின் உடலைச் சிதைத்து இவ்வாறு முள்வேலியில் தொங்கவிட்டு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

## ஒளிந்திருக்கும் முகம் எது?




ஜூன் 14, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை சாயாசிங். சரியான விடையைக்கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு:

1. இ.கயல்விழி, வைரவப்புளியங்குளம், வவுனியா. 2.ற.வைதேவகி, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். 3.மு.வான்விழி, புத்தளம் வீதி, நீர்கொழும்பு. 4. ம.காந்தன், கண்டி வீதி, கிளிநொச்சி. 5.அ.அன்ரன், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்தவாரம் ஒளிந்திருக்கும் இந்த உருவம் யாருடையது?

இவர் சுப்பர் ஸ்ராருடைய படத்தில் அவருக்கு எதிரியாக நடித்ததன் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமாகிய இவர் தொடர்ந்து பல படங்களில் நடித்து வருகிறார்.



இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டுபிடித்து. அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி கீழ்வரும் எங்கள் புதிய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# மிதிவெடி அபாயம் முடிவுக்கு வருமா?

மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பது போன்று இன்றைய சமாதானச் சூழ்நிலையிலும் தமிழ் மக்களுக்கு ஏற்படும் அழிவு முடிவுக்கு வரும்போல் தெரியவில்லை.

மீளக்குடியமரும் மக்கள் மட்டும் இதற்கு விதிவிலக்கானவர்களா? தமது சொந்த மண்ணில் நிம்மதியாக வாழ வேண்டும் என்று ஒவ்வொருவரும் முயற்சி செய்துகொண்டு இருக்கிறார்கள்.

ஆனாலும் அதற்கு இராணுவம், பாதுகாப்பு வலயம் என்று தொடர்ந்து கெடுபிடிகளை விதித்துக்கொண்டு இருக்கிறது. இதனால் மக்கள் வெறுப்படைந்துபோய் இருக்கும் அதேசமயம், விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலாவது நிம்மதியாக வாழ முடிகிறதா என்றால் அதுவும் கேள்விக்குரிய ஒன்றாகவே உள்ளது.

இராணுவ நடவடிக்கையின்போது இராணுவத்தால் திட்டமிட்டு புதைக்கப்பட்ட வெடிபொருட்களால்மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகிறார்கள். இந்த வெடிபொருட்களின் அச்சம் காரணமாக இன்றும் கூட பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் அகதி முகாங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

## இது பெரும் வேதனைக்குரிய நிகழ்வாகும்

பல அமைப்புக்கள் இன்று வடக்கு கிழக்கு பிரதேசத்தில் வெடி பொருட்களினை அகற்றி வருகின்ற போதிலும் அவற்றின் செயற்பாடுகள் ஆமைவேகத்தில் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வடக்கு கிழக்கு பிரதேசத்தில் சுமார் 11 லட்சம் வெடிபொருட்கள் இன்னும் அகற்றப்படாமல் இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தால் புதைக்கப்பட்ட வெடிபொருட்கள் சம்பந்தமான வரைபடங்கள் கிடைக்காமற்போனமையும் வெடிபொருள் அகற்றும் நடவடிக்கை தாமதமடைவதற்கு ஒரு காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணத்தால் மக்கள் தமது சொந்த மண்ணில் குடியேறச் செல்கின்றபோது பலவிதமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துவருகின்றனர். உயிர் இழப்புகளும், அவயங்களை இழப்பதும் தொடர்ந்தும் இடம்பெற்றுவருகின்றன.

2000 ஆண்டுக்கு பின்னர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மட்டும் இராணுவ நடவடிக்கையின்போது புதைக்கப்பட்ட வெடிபொருட்களால் வன்னிப்பகுதியில் இடம்பெற்ற 120 வெடி விபத்துக்களில் இதுவரை 29பேர் இறந்துள்ளனர். 233 பேர் காயம் அடைந்துள்ளனர். இராணுவத்தால் திட்டமிட்டு புதைக்கப்பட்ட வெடிபொருட்களால் தொடர்ச்சியாக மக்கள் பாதிப்புக்குள்ளாகி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

வவுனியா, மன்னார் மாவட்டத்தில் 40 பேர் வெடிபொருட்களில் சிக்கிதமது உடல் அவயங்களை இழந்துள்ளனர்.

மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்ந்தால் மட்டும் மீள் குடியமரும் நிதி வழங்கப்படும் என அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் கூறிவருகின்றன.

இதனால் மிதிவெடிகள் அகற்றப்படாத பிரதேசங்களில் தமது கொடுப்பனவுக்காக மக்கள் குடியமர்ந்து வருகின்றனர்.

மிதிவெடிகள் பாதிப்புக்கு கடந்த ஆண்டை விட இவ்வாண்டு கூடுதலான மக்கள் உட்பட்டுள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிறைவேற்றுப்புபொறுப்பாளர் கே.பி.ரெஜி தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அழுத்தங்களை மக்கள் மீது அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் மேற்கொண்டுவரும் செயற்பாடானது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.



தமிழர் தாயக பகுதி மக்களுக்கு பொருந்தாதசெயற்பாடுகளில் இந்த நிறுவனங்கள் தொடர்ந்து செயற்படுமாயின் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கும் மனித உரிமைகள் அமைப்புக்கும் முறையிட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிவரும் என்றும் தெரிவித்துள்ளார்.

இராணுவ நடவடிக்கையின்போது புதைக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் குடியேறுவதையோ நிலத்தைப் பயன்படுத்துவதையோ தவிர்க்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார். சில இடங்களில் மக்களும் வெடிபொருட்களை அகற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். அது ஆபத்தான ஒன்று என்றும் அந்த செயற்பாடுகளை மக்கள் முற்றாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். ஆக, மொத்தத்தில் இந்த அரச, அரச சாரா நிறுவனங்களும் கூட இந்த மக்களின் மரணத்துக்குப்பின்னால் நிற்கிறனவா என்ற கேள்வியும் இங்கே எழுகின்றது.

எவ்.எஸ்.டி நிறுவனத்தால் மன்னார், வவுனியா பிரதேசத்தில் 135,887 சதுர மீட்டர் பரப்பளவு தூரம் மிதிவெடிகள் பரிசோதிக்கப்பட்டு இருப்பதாகவும் இணைப்பாளர் பாலா தெரிவித்துள்ளார்.

அத்துடன், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் 196 கிராமங்கள் பரிசோதனைக்காக இனம் காணப்பட்டு இருப்பதாகவும் கூறியுள்ளார்.

மிதிவெடிகள் 4491, கனரக வாகன தகர்ப்பு வெடிபொருள் 8, கைக்குண்டு, செல்,பராசெல்,சிறிய ரகவெடி பொருட்கள் 4423,புரப்ரைட்டர்கள் 75, 207, மற்றும் பல வெடிபொருள்களும் மீட்கப்பட்டிருப்பதாக எவ்.எஸ்.டி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

வவுனியாவின் ஓமந்தை,தாண்டிக்குளம், மல்லவராயன் கட்டையம்பன், தலைமன்னார். பியர், பேசாலை போன்ற பிரதேசத்தில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மக்களின் வாழ்வுக்கு உறுதிப்படுத்தப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வவுனியாவின் தாண்டிக்குளம் பாடசாலையில் வெடிபொருட்கள் இருப்பது இனம் காணப்பட்டதை அடுத்து அந்தப் பாடசாலையின் செயற்பாடுகள் கடந்த வாரம் நிறுத்தப்பட்டு வெடிபொருட்கள் அகற்றப்படும் நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.

இங்கு முன்னர் இராணுவ முகாம் ஒன்று இருந்தமை குறிப்பிடத்தக்கது. விடுதலைப் புலிகளால் தாண்டிக்குளம் பகுதி தாக்குதலுக்கு உள்ளான போது இங்கு இருந்த வெடிபொருட்களை இராணுவம் மண்ணுக்குள் புதைத்துச்சென்றிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

வவுனியாதாண்டிக்குளம் பாடசாலையில் இராணுவத்தால் கைவிட்டு செல்லப்பட்டதாகக்கருதப்படும் வெடிபொருட்களை எவ்.எஸ்.டி. நிறுவனம் அகற்றுகிறது.



இதனை விட வவுனியாவில் இலங்கை இராணுவத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மற்றும் இந்தியா,ஜப்பான் ஆகிய நாடுகளின்கண்ணிவெடிகள் அகற்றும் பிரிவினர் வவுனியாவில் தமது பணிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை குடாநாட்டில் கடந்த ஐந்து வருடத்தில் மட்டும் 4 இலட்சத்து 48ஆயிரத்து 674 வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளன. அந்த வகையில், தீவகத்தில் 199, யாழ்ப்பாணத்தில் 8174, நல்லூரில் 7 931, தென்மராட்சியில் 30,ஆயிரத்து248,வடமராட்சியில் 10 250, வடமராட்சி கிழக்கில் 3 லட்சத்து 50 768 வலிகாமம் தெற்கில் 365,வலிகாமம் தென்மேற்கில் 466 வெடிபொருட்கள் 1999இல் இருந்து மீட்கப்பட்டுள்ளன என்று மிதிவெடிகள் செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை யாழ் மாவட்டத்தில் இராணுவத்தால் புதைக்கப்பட்ட வெடிபொருள்கள் முழுவதையும் அகற்றி முடிப்பதற்கு குறைந்தது 5 ஆண்டுகள் தேவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

-மகாமுனி-


WWW.WTRUK.COM

தாய் மண்ணே வணக்கம்........ தமிழ் மண்ணே வணக்கம்........

தாயகத்தில் இருந்து தரணி எங்கும் ஒலிக்கும் ஒரே வானொலி....

உலகத்தமிழர் வானொலி

World Tamilar Radio

24 Hours Online Radio

www.wtruk.com

இணையத்தளத்தினூடாக

இலங்கைச் செய்திகளை

உடனுக்குடன் வழங்கும்

உங்கள் வானொலி






add hiwtr@hotmail.com in your MSN Messenger to request songs

??? Sneha Talk

Listen WTR

நடிகை, நடிகர்களின்

Live Talk

WWW.WTRUK.COM

# இலங்கையின் இடைக்கால நிர்வாகமும் இந்தியாவின் கடப்பாடும்

இடைக்கால நிர்வாக சபையை வடக்கு – கிழக்கில் அமைப்பதற்கு அரசு உடன்பட்டு, அது தொடர்பான பேச்சுக்களை முதலில் ஆரம்பித்து, அதனை நடைமுறைப் படுத்த இணங்கும் பட்சத்திலேயே சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது சாத்தியம் ஆகும்.

இதனை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், இடைக்கால நிர்வாகத்தின் ஊடான இயல்பு நிலையை ஏற்படுத்தல் என்ற விடயத்தை இங்கு ஆராய்வது அவசியமாக உள்ளது.

சட்டவாக்கம், ஆட்சிமுறை, மனித உரிமைகள், சமத்துவம் என்பன யாவும் அனைத்து மக்களினதும் சுயநிர்ணய உரிமைக்கு அமைவான ஏற்பாடுகள் ஆகும்.

மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக வழங்கியுள்ள பேட்டியானது புலிகளின் தன்னாட்சி அலகு தொடர்பான விடயத்தை கவனத்துக்குரியதாக்கியுள்ளது.

புலிகளை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்வது, பேச்சுக்களில் சம பங்காளிகளாக புலிகள் கலந்து கொள்வது, இடைக்கால நிர்வாகத்தின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பது என்பன பற்றி அவரது பேட்டியில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய அரசு எதிர் கொண்டுள்ள நெருக்கடியான நிலைமைகள், எந்தப் பேச்சுக்களையும் முடிவுக்குக் கொண்டு வரக் கூடிய சாத்தியத்தை இல்லாமல் செய்துள்ளன.

இறுதியாக நடைபெற்ற தேர்தலில் வடக்கு – கிழக்கிலிருந்து 22 நாடாளுமன்ற உறுப்பினர்களை தமிழ் மக்கள் தெரிவு செய்திருப்பது இடைக்கால நிர்வாகம் குறித்த கோரிக்கைக்கு மேலும் வலுச் சேர்ப்பதாக உள்ளது.

அது மட்டுமன்றி, சர்வதேச சமூகத்தின் கவனமும் இதன் மீது திரும்பியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஐக்கியதேசிய முன்னணி அரசுடன் இதுவரை ஆறு தடவைகள் பேச்சுக்களை நடத்தியும் எந்தவித முன்னேற்றமும் எட்டப்படவில்லை.

கடந்த இரண்டு தசாப்த காலமாக நடைபெற்ற போரில் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு – கிழக்குப் பிரதேசத்தில் புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், மற்றும் நீண்டகாலப் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு இடைக்கால நிர்வாகம் மிக இன்றியமையாத ஒன்றாக உள்ளது.

இதுவரை காலமும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் ஆளும் தரப்பினால் மதிக்கப்படாது கிழித் தெறியப்பட்டதுடன், தமிழ் மக்கள் மீது வன்முறைகளும் தூண்டி விடப்பட்டன.

இந்த நிலையில், கடந்த நான்கு தசாப்த காலத்தில் தமிழ் தரப்புக்கு ஏற்பட்ட அனுபவத்தினை கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட அரசமைப்பு சீர்திருத்தங்களும் பயனற்ற நிலையில்தான் போயுள்ளன.

இதன் பின்னரே, தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறையாக ஆயுதப் போராட்டத்திற்கு புலிகள் நிர்ப்பந்திக்கப்பட்டனர்..

அதேவேளையில் ஒரு தலைப்பட்சமாக போர் நிறுத்தத்தை பிரகடனப்படுத்தி, நெடுஞ்சாலைகளைத் திறந்து, வர்த்தகத்திற்கும் மக்களது சுதந்திரமான நடமாட்டத்திற்கும் அனுசரணை வழங்கி, இயல்பு நிலை சூழலை ஏற்படுத்தி பேச்சுவார்த்தைக்கான பாதையை ஆரம்பித்து வைத்தவர்களும் அவர்களே.

வடக்கு – கிழக்கின் பெரும்பான்மையான பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டிலும், நியாயாதிக்கத்திலும் செயன்முறை வாய்ந்த நிலையில் செயற்படுகின்றன.

இதனைக் கருத்திற்கொண்டு, பேச்சுவார்த்தை மூலமான இறுதித் தீர்வை அடைவதற்கும் அதனை அமுல்படுத்துவதற்கும் நீண்ட காலம் எடுக்கும் என்பதைனாலேயே இடைக்கால நிர்வாகத்தை கோரி நிற்பதாக புலிகள் தெளிவாக தமது ஆலோசனைகளில் தெரிவித்துள்ளனர்.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையானது வடக்கு – கிழக்கிலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கிய அதிகார சபை என்றும் அதில் முஸ்லிம் சமூகமும் தமது பங்கை உருவாக்கம் செய்வதில் கலந்து கொள்வதற்கு உரிமை உண்டு எனவும் கூறப்பட்டுள்ளது.

இடைக்கால நிர்வாக அமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள், இலங்கை அரசாங்க உறுப்பினர்கள், வடக்கு – கிழக்கு முஸ்லிம் உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டிருப்பதோடு சிங்கள சமூகத்தைப் பிரதிபலிக்கும் உறுப்பினர்களையும் கொண்டிருக்கும்.

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான விதந்துரைப்பில் மதச்சார்பின்மை, பாகுபாட்டுக்கெதிரானதடை, இலஞ்ச ஊழலைத் தடுத்தல், அனைத்து சமூகங்களினது பாதுகாப்பு, இடைக்கால நிர்வாக சபையின் நியாயாதிக்கம், அதிகாரங்களை வகை பிரித்தல், நிதி, கடன் பெறுவதற்கும் உதவி பெறுவதற்குமான அதிகாரம், நிதிக்கணக்கீடு கணக்காய்வு செய்தல், மாவட்டக்குழு நியமித்தல், நிர்வாகம், காணி நிர்வாகம், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் மீள்குடியமர்வு, கடல் மற்றும் கரையோர வளங்கள், இயற்கை வளங்கள், நீர்ப்பயன்பாடு, ஒப்பந்தங்களும் குத்தகைகளும், பிணக்குகள் தீர்த்தல், செயற்படும்காலம் ஆகியன வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை ஆராய்ந்து முதலில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைப்பது முக்கியமானதும் அவசியமானதும் ஆகும்.

## இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் கடப்பாடு.

இலங்கை இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படுகிறது. இந்தியாவுடன் மிகநீண்ட கலை, கலாசார, மொழித்தொடர்பாடு கொண்டது. இதனை தாய், சேய் முறையில் இந்தியாவின் தொப்புள் கொடியில் மலர்ந்தது என்பார்கள். சங்க கால இலக்கியம் முதல் சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் ஆகிய நூல்களில் இலங்கையின் தொன்மையும் மகிமையும் விளக்கப்பட்டுள்ளது.

சேது சமுத்திரத்தாலும், தாமிரபணி ஆற்றாலும் பாக்கு நீரிணையாலும் பிரிக்கப்பட்டபோதும் இலங்கையும் இந்தியாவும் ஒரே நிலமாக இருந்தமையும் கடல்கோள்களே இதனைப் பிரித்தன என்பதையும் லெமூரியாக் கண்டம் பற்றிய ஆராய்ச்சிகள் இன்றும் பறை சாற்றுகின்றன.

இதேவேளையில் இலங்கையில் ஐந்து தசாப்தகாலமாக அந்நியர் ஆட்சி வழங்கிய அநியாய தீர்வினால் அல்லலுற்றுத் தவிக்கும் இவ்வேளையிலே, தாய் நாடு சேய் நாட்டை புறக்கணிக்கும் நிலைமை ஏற்பட்டு, தாயே சேயைத் தாக்கும் பரிதாப நிகழ்வு நிகழ்ந்த நாடாகவும் இருந்து வருகிறது.

தற்போது இந்திய காங்கிரஸ் கட்சி தலைமையிலான ஜனநாயக முற்போக்கு அரசாங்கம் புதிய அரசை அமைத்து உள்ளது. வெளிவிவகார அமைச்சர் கலாநிதி நட்வார்சிங் சமஷ்டி முறை ஒன்றில் இலங்கையின் சுயாதிபத்தியம், ஆட்புல ஒருமைப்பாடு, ஐக்கியத்தை பேண முடியும் என்றும் இலங்கை மக்களின் சகல தரப்பினரிரையும் திருப்திபடுத்தக்கூடிய பேச்சுவார்த்தை மூலமான இணக்கத்தீர்வுவொன்று காணப்படும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டிருக்கின்றோம் எனக் கூறியுள்ளார்.

முன்னைய பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்தின் நிலையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இன்றைய அரசாங்கத்தின் நிலைபாட்டை சற்றுத் தெளிவாக விளங்கக்கூடியதாக இருக்கின்றது.

சமஷ்டி முறையொன்றில் இலங்கையில் சுயாதிபத்தியம், ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் ஐக்கியம் பேணப்பட வேண்டும் என்பதில் இந்தியா பற்றுறுதி கொண்டு இருப்பதாகவும் நட்வர்சிங் கூறியுள்ளார். இந்தியாவின் புதிய அரசு தனது ''பொதுவான குறைந்தபட்ச வேலைத்திட்டம்'' எனும் கொள்கை விளக்கத்தில் ''இலங்கை வாழும் தமிழர்கள் மற்றும் மதரீதியான சிறுபான்மையினங்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடியதும் ஐக்கிய, ஆட்புல ஒருமைப் பாட்டை பேணக்கூடியதுமான சமாதானப் பேச்சு வார்த்தைகளை அரசாங்கம் ஆதரிக்கும் என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே இந்தியா, இலங்கை இனப் பிரச்சினையில் கடந்த காலங்களில் விட்ட தவறை உணர்ந்து இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவரும் சுய நிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

*பேராசிரியர்*
*பொன். சக்திவேல்*

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சக்தி செய்திகள் | அன்பு மடல் |
| 7.05 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | அன்பு மடல்/பாடல்கள் 7.20 | காலைக்கதிர் |
| 7.30 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சங்கீதமேடை | காலைக்கதிர் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நேரம் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | கிட்ஸ் மூவி | சிறுவர் நேரம் |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | குட்டி சுட்டி | ஸ்டார் சமையல் |
| 9.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கீதங்கள் | இசைத் தென்றல் | திரைவானம் | டொப் 10 மூவிஸ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மறக்க முடியுமா | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | சுப்பர் சீன்ஸ் | திரை விமர்சனம் | மீண்டும் சிரிப்பு | பிரபலங்கள் ரசித்தவை | ரிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள் (எம்.ரீவி) | செய்திகள் (எம்.ரீவி) | செய்திகள் (எம்.ரீவி) | செய்திகள் (எம்.ரீவி) | செய்திகள் (எம்.ரீவி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார்ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை. | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.00 | (றொமான்ஸ்) | (அக்சன்) | (கொமடி) | (கிளசிக்) | மங்கை | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | கில்லி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஜீ பூம்பா |
| 4.30 | கார்ட்டூன் நிகழ்ச்சி | கி–மேன் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஒப்போடு |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் சீன்ஸ் | என்றும் கலாட்டா | கொமடி நிகழ்ச்சி | வேலன் |
| 5.30 | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இப்படிக்கு நீங்கள் அன்பு மடல் 5.45 | அன்பு மடல் 5.45 |
| 6.00 | களம் | இளைய கானம் | ஒப்போடு | பாடல்கள்/இளந்தளிர் | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட் | TO BE CONFIRMED | மின்னல் |
| 6.30 | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | TO BE CONFIRMED | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | அலைய்ஸ் | ''24'' |
| 7.30 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | (அக்சன் சீரியல்) | அக்ஷன் சீரியல் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | ருத்ர வீணை | இளைய கானம் |



# சுடரின் கல்வி வழிகாட்டி



## உங்கள் உறுதியான எதிர்காலத்துக்கு WinSYS நெட்வேக்ஸ் நிறுவனம்

மாணவர்களே!

உங்கள் க.பொ.த (உ/த) பரீட்சை முடிவடைந்து விட்டது. பெறுபேறுகளை எதிர்பார்த்து இருக்கிறீர்கள். உங்கள் பரீட்சை முடிவுகள் கைக்குக் கிடைக்கும் வரை நீங்கள் எந்த முயற்சியும் இன்றி இருக்கப் போவதில்லை.

உங்களுக்காக Winsys Networks (Pvt) Ltd. நிறுவனத்தினராகிய நாங்கள், எதிர்காலத்தில் சிறந்த ஒரு கணினி தொழில்நுட்பவியலாளராக உங்களை வளர்த்தெடுக்க சிறந்த திட்டங்களை முன்வைக்கிறோம்.

கணினித் துறைசார்ந்த எமது பாடநெறிகளை பூர்த்தி செய்வதன் மூலம், உள் நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டிலும் சிறந்த தொழில்வாய்ப்பை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

எமது கற்கைநெறிகளை நீங்கள் பூர்த்தி செய்வதன் மூலம் உயர்கல்விக்கான வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதுடன் குறுகிய காலத்தில் நீங்களும் ஒரு Computer Network Engineer ஆகவோ, அல்லது Network System Engineer ஆகவோ உயர்நிலையை அடைவதற்கான உறுதிப்பாட்டை அளிக்கிறோம்.

கணினித் துறையில் ஓர் உயர் தொழில்நுட்பவியளாளராக உங்களை வளர்த்தெடுப்பதை குறியாகக் கொண்டு, Hard wate & Net Working பாடநெறிகளை Cisco, Micro Soft, Linux ஆகிய நிறுவனங்கள் உங்களுக்கு முறையாக தொகுத்துத் தந்துள்ளன.

உங்கள் வெற்றிப் பாதையை 100% உத்தரவாதப்படுத்தும் நோக்கில், ஆங்கிலப் பாட நெறியில் முழுமையான தேர்ச்சியை நீங்கள் பெற ஆங்கிலத்தில் ஆளுமையுடன் கூடிய பயிற்சி நெறிகள், மற்றும் செயன்முறை பயிற்சியை விருத்தி செய்வதற்கான பகுதி நேர, முழுநேர வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிறந்த பயிற்சியாளர்களை உங்களுக்குத் தருவிப்பதற்காக அனுபவம் வாய்ந்த வெளிநாட்டுப் பயிற்சியாளர்களால் உங்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

பயிற்சியின் முடிவில், சர்வதேச ரீதியில் தரப்படுத்தப்பட்ட Micro Soft, Cisco, Hnux ஆகிய நிறுவனங்களின் சான்றிதழ்கள் உங்களுக்கு வழங்கப்பட இருக்கின்றன.

அதுமட்டுமன்றி கனடா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உங்கள் உயர் கல்வியைத் தொடர்வதற்கும் தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கும், இந்தச் சான்றிதழ்கள் பெரிதும் உதவும் என்பதை நீங்கள் உறுதியாக நம்பலாம்.

Winsys Network உங்களுக்கு ஆங்கிலக் கல்வியுடன் கூடிய உறுதியான உதிர்காலத்தை அதற்கான உறுதியான பாதையை உங்களுக்கு காட்டுவதாக இருக்கிறது.

உங்களது நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு 3500/= ரூபாவுடன் Diploma Computer Hardware / Advanced Net Working பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

அத்துடன் Micro Soft - 2003 நிறுவனத்தினால், MCP, MCSA, MCSE ஆகிய பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

Winsys Net Works பாடநெறிகள் ஊடாக, உங்களது எதிர்காலத்தினை நீங்கள் உறுதிப்படுத்தக் கூடியதாக இருப்பதுடன், சிறந்த ஆளுமை விருத்தி மற்றும் ஆற்றல் கொண்ட ஒருவராக உங்களை மாற்றியமைப்பதிலும் நாம் அக்கறையுடன் செயற்படுகின்றோம். இவைகள்தான் உங்களது தொழில் மற்றும் வெளிநாட்டு உயர்கல்விக்கு உறுதுணையாக இருக்கப் போகின்றன என்பதை நீங்கள் மறக்க வேண்டாம்.

எமது நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட பாடத்திட்டங்கள், கைத்தொழில் மற்றும் பயிற்சிக்கும் அபிவிருத்திக்குமான அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன் மூன்றாம் நிலைக் கல்விக்கான தொழிற்கல்விப் பயிற்சி அமைச்சினது அங்கீகாரத்தையும் எமது நிறுவனம் பெற்றுள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

## பெங்களூர் NICT கணினி நிறுவனத்தால் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

அமெரிக்காவில் உள்ள Palpap Soft ware Inc. (USA) இன் இணைந்த நிறுவனமான பெங்களூரில் இயங்கிவரும் பிரபல கணினி நிறுவனமான தேசிய கணினி தொழிநுட்ப நிறுவனத்தினால் (National Institute of Computer Technology) வழங்கப்படும் சான்றிதழ்களை இலங்கை மாணவர்களுக்கு வழங்குவதற்கான பூரண அங்கீகாரத்தை வெள்ளவத்தை ஜனா கணினி நிறுவனம் (Jana Computer Technologists) பெற்றுள்ளது.

இலங்கை மாணவர்கள் பெருமளவு பணச் செலவில் பெங்களூர் சென்று பயில வேண்டிய கற்கை நெறிகளை இலங்கையில் குறைந்த செலவில் கற்று உரிய சான்றிதழை பெறுவதற்கு Jana Computer Technologists வசதிகளை மேற்கொண்டுள்ளது.

பயிற்சி நெறிகள் Jana Computer Technologists இனால் நடத்தப்படும். பரீட்சைக்கான வினாத்தாள்கள் Bangalore, NICT இனால்வழங் கப்பட்டு பரீட்சைகள் Jana Computer Technologisis நிறுவனத்தால் நடத்தப்படும். சித்திபெறும் மாணவர்களுக்கு உரிய சான்றிதழ்கள் Bangalore, NICT யால் வழங்கப்படும்.

மேற்படி நிறுவனத்தால் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

1. Post Graduation Diploma in Computer Application
2. Diploma in Software Engineering
3. Diploma in Windows Application
4. Diploma in office Management
5. Diploma in Advanced Accountancy
6. Diploma in Desktop Publishing
7. E.Commerce, Web Designing Course
8. Diploma in Hardware Technology
9. Diploma in Network Administration
10. A Complete Course for Beginners in computer NICT

பாடநூல்களை பெற்றுக் கொள்ள விரும்பும் மாணவர்கள் உரிய கட்டணம் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

இது தவிர பெங்களூர் சென்று கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்கான உரிய ஒழுங்குகள் Jana Computer Technologists இனால் செய்து கொடுக்கப்படும்.


## அன்பின் பெற்றோர்களே!!

A/L பரீட்சை முடிவடைந்து விட்டது !!

100% உறுதிப்படுத்தப்பட்ட எதிர்காலத்தை நோக்கிய பயணத்தை உங்கள் பிள்ளைகளுக்கு எப்படி வழங்கப் போகிறீர்கள்?

- பரீட்சை முடிவடைந்து விட்டது. இனி எந்த அடித்தளத்தை நோக்கி உங்களின் பிள்ளைகளை நகர்த்தப்போகிறீர்கள்?
- ஏதோ ஒரு கற்கை நெறியினைப்பயில்வதா அல்லது உறுதிப்படுத்தப்பட்ட ஓர் சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உறுதியானஇ சர்வதேச அடித்தளமொன்றினை நோக்கி தொடர்வதா?

இதோ!!! இலவசம்

**WINSYS Networks** வழங்கும் இலவசக்கல்வி வழிகாட்டி ஊடாக உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை தீர்மானியுங்கள்

அழையுங்கள் தொலைபேசி!!! 011 2504023, 0112552819.

- Diploma in Information systems, Managment, Computer, Communications Skills, Personality Development English Psychologycal studies. Duration 4 month full time. (Gateway to success full career)
- Diploma in Computer Hardware & Advanced Networking 3,500/- only.
- MCP, MCSA, MCSE All in.: 40,000.00 only
- CCNA 640-801 15,000.00 only
- CCNP / MODULE 20,000.00 only.
- Linux Systems & Network Administrations Leading to RED HAT CERTIFICATIONS (RHCE). 15,000.00 only.

**We thank the students who came for an exhibition, which held from the 10th of june to the 13th of june at all SLECC. We all so thank you for making exhibit a success.**

Piccaso

WinSYS

**WinSYS Networks (Pvt) Ltd**

HI-TECH TRAINING & CONSULTING

No. 31, 42nd Lane Wellawatte, Colombo-06.

Tel: 011-2504023, 2552819, www.winsysnet works.com, Mail: info@winsysnetworks.com



# SPECIAL OFFER

## Jana Computer Technologists

**Pay only 1500/=** To follow any of the following courses...

| | |
|---|---|
| Computer Hardware | Web Designing |
| Page Maker 7.0 | C ++ |
| Corel DRAW 11 | Internet & E-mail |
| Photoshop 7.0 | Macromedia Flash 6 |
| C Language | MS Office XP 2002 |
| Java | Accpac |
| Visual Basic 6.0 | Information |
| C ## | Technology |

First 50 Enrollments Only

Vaild up to 30-06-2004

**Advanced Computer Courses**

| | |
|---|---|
| * Diploma in Computer Hardware. | 10,000/= |
| * Dip. In Network Administration. | 12,000/= |
| * BIT Programming Courses. | 12,000/= |
| * Diploma in Desktop Publishing. | 4,500/= |


500/= Discount on full payments

**BIT**

Classes Semester 1,2,3,4,5,6 New Batches Commencing on 20th of June 2004

Flash
Premier
3D Studio Max
Maya

Graphic Packages 18,500/=



IELTS (Express course)


Business English

By: K.P. Arun (University Lecturer)

No.: 385, - 1/1A, Galle Road, Colombo -06. Tel No.: (011) 2 554153

No.: 4A, Ramakrishna Terrace, Colombo -06. Tel No.: 071 4 804469

## நெட் குறும்பு



வயிற்றிலே வரையப் பட்டுள்ள இந்த ஓவியத் தைப் பாருங்கள்... தமிழ் சினிமாவில் தொப்பு ளில் பம்பரம் விட்டார் கள், ஓம்லட் போட்டார் கள். ஆனால், இந்த நபர் தனது தொப்புளை என்ன வாக மாற்றி ஓவியம் வரைந்து இருக்கிறார் பாருங்கள். ஆனாலும் இவருக்கு லொள்ளு கூடத்தான்.

## சத்தம் இல்லாத சிரிப்பு




## ஓவியரின் கற்பனையில்



நிர்வாணமாக்கிப் பார்ப்பதில் அமெரிக்கர் களுக்கு அப்படி என்னதான் ஆசையோ தெரி யாது. ஈராக்கில் கைதிகளின் உடைகளை உரிந்து விட்டு வக்கிரமாக ரசித்தது உலகெல் லாம் தெரிந்த விஷயம். இதனால் சூடாகியோ என்னவோ அமெரிக்க அதிபர் புஷ்ஷை நிர்வாண மாக்கிப் பார்க்க யாரோ ஒருவருக்கு ஆசை பிறந்து விட்டது. அதுவும் எப்படி? பெண் உருவத்தில் நிர்வா ணமாக்கிப் பார்க்க. இதன் மூலம் பழிவாங்கி விட்ட தாகநினைப்புப் போலும் அவருக்கு. உங்களுக்கு எப்படி இருக்கிறது?

### ஜோக்




நெஞ்சுவலியால் தனது தோழி மிகவும் கஷ்டப்படுவதாக கேள்விப்பட்டு அவளை சுகம் விசாரிக்க வந்தாள் ஒருத்தி. அங்கே தனது தோழி நெஞ்சு வலிக்கு எந்த டாக்டரி டமும் சிகிச்சை பெறாததை அடுத்து அவளை தங்கள் குடும்ப டாக் டரிடம் கூட்டிச் செல்லத் தீர்மா னித்தாள்.

ஆனால், தோழியோ தான் நெஞ்சுவலி யுடன் இறந்தாலும் பரவாயில்லை அந்த டாக்டரிடம் வரவே மாட்டேன் என்று அடம் பிடித்தாள். அவளுக்கோ எதுவும் விளங்க வில்லை. ஏன் அந்த டாக்டரிடம் சிகிச்சைக்கு செல்ல தோழி தயங்குகிறாள்... என்று ஆற அமர விசாரித்தாள்.

மிகுந்த தயக்கத்தின் பின் தோழி தனது நிலைமையை விளக்கினாள். எனக்கு ஏற் கனவே வயிற்று வலி ஏற்பட்டது. அப்போது அந்த டாக்டரிடம் சென்று காட்டினேன். அவர் வயிற்றை அமுக்கிப் பார்த்தார். இப்போது நெஞ்சு வலி என்று அவரிடம் சென்றால்... என்று இழுத்தாள் தோழி.

## நெட் போட்டோ



இது பச்சைத் துரோகம் அல்லவா?

## நெட் குழப்பம்



அருகேயுள்ள படத்தைப் பார்த்தால் பழையகால வீடொன்று பெரிய முற்றத்துடன் தெரி கிறது. அந்த வீட்டின் முன்னால் சிறுவர்கள் சிலர் விளையாடிக் கொண் டிருப்பதும் தெரிகி றது. அருகே ஒரு சிறுவன் உயரமான இடத்தில் இருக்க ஒரு சிறுமி கீழ்ப் புறமாக நின்று உரை யாடிக் கொண்டிருப்பது போலவும் தெரிகிறது.

ஆனால், படத்தின் ஓரமாகப் பார்த்தால் வேறொரு வீட்டின் நடு ஹோலில் தரை விரிப் பொன்று விரிக்கப்பட்டிருப்பது போலவும், அதே அந்த பழைய கால வீட்டின் படம் ஓவிய மாக தரைவிரிப்பில் வரையப்பட்டிருப்பது போலவும் தெரிகிறது.

அப்படியென்றால் எது உண்மை? அது தரை விரிப்பா? அல்லது உண்மையான வீடா..? பார்த்து நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

## கண்ணாமூச்சி



அருகேயுள்ள படத்தைப் பாருங்கள். அலை அலையாக உள்ள கோடுகளை குறுக்கறுத்து மேலி ருந்து கீழாக சில கோடுகள் செல்கின்றன. அந்த கோடுகள் வளைவாக இருப்பது போல் தெரிகின்றன. ஒரு அடிமட்டத்தை எடுத்து அந்த கோடுகளுக்கு அருகே பிடித்துப் பாருங்கள். அப்படி எவ்வித வளைவும் இல்லாமல் அந்த கோடுகள் எல்லாம் சமாந்தரமாக இருப்பது தெரியும்.

# பித்தன் பதில்கள்

***எம்.கும்பம் —ஹொப்டன்***

**கேள்வி:—** பித்தா! கருத்துக்கணிப்புகளை யெல்லாம் தகர்த்து எறிந்து விட்டு வெற்றி யீட்டிய சோனியா—பிரதமர் பதவியையும் விட்டு கொடுத்து விட்டாரே அது பற்றி.

**பதில்:—** எத்தனையோ நாடுகளிலெல்லாம் மக்களுக்கு—தலைமை வகிப்பதற்காக பலர் எத்தனையோ தில்லு முல்லுகளை பண்ணும் போது அந்தப் பெரிய நாட்டில் — அந்தப் பெரிய பதவியை தட்டிலே வைத்து தரும் போது அதனை தடிக்கழித்த சோனியா பாராட்டப்பட வேண்டியவர். ஆசிய நாட்டு அரசியல் வாதிகள் பலர் சோனியாவிடம் நிறையக் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியம்.



***கே.என்.சிவபரன்— கருநாட்டன்கேனி***

**கேள்வி:—** பித்தா சில நண்பர்கள் படித்து பட்டம் பெற்று பதவியில் அமர்ந்ததும் —பழைய நண்பர்கள் மீது பாராமுகமாக இருக்கிறார்களே ஏன் பித்தா!

**பதில்:—** கண்ணு! படித்து —பட்டம் பெற்ற நண்பரின் பார்வை உம்மீது படவேண்டுமென்றால் நீரும் ஒரு தகுதியான பதவியில் இருக்க வேண்டும். மாறாக நீர் ஒரு காவாலி, தறுதலை, ஊருக்கு உதவாதது, உருப்படாதது, மொள்ளமாரி, கேப்ப மாரி, முடிச்சவுக்கி, டுபுக்காக எல்லாம் இருந்தீரேயானால் பதவியில் உள்ள உமது நண்பன் பாரர்முகமாகத்தான் இருப்பான்... கண்ணு.

***க. மதன் கிளிநொச்சி***

**கேள்வி:—** Dear பித்தா! எனது அபிமான கிரிக்கெட் சுழல்பந்து வீரர் முத்தையா முரளிதரனின் முகவரியைத் தாருங்களேன்.

**பதில்:—** மவனே... [illegible] இதுக்கு முன்னாடி தூங்கிக்கினு ஈந்தியா ... முரளிதரன் அட்ரஸை மே—31— ஜூன் 6 சுடர் ஒளியில் தந்திர்தமே. பார்க்கவே— இல்லியா நீ இன்னா நயினா ..ஒழுங்கா சுடர் ஒளி படிய்யா.. அத்தய வுட்டுவுட்டு சும்மா நம்மள டபாய்காத. இன்னா.... புர்ஞ்சிதா..

***எம்.சதீஸ்குமார்—கோண்டவில்ள***

**கேள்வி:—** பித்தா! காதலிப்பவர்களுக்கு மட்டும் தான் கவிதை வரும் என்கிறார்களே உண்மையா?

**பதில்:—** அப்படியென்றால் கவிஞர்களான வாலி, வைரமுத்து, கண்ணதாசன், பாரதி தாசன் என்று பாட்டெழுதும் பாட்டனார்கள் பலர் இருக்கிறார்களே... அவர்களும் காதலிப்பவர்களா?.. என்ன?..

***யோ. தர்ஷி மல்லாவி.***

**கேள்வி:—** பெண்களே பெண்கள் மீது பொறாமைப் படுவது ஏன் பித்தா!

**பதில்:—** நான் பல இடங்களில் நேரில் பார்த்த அளவில் — என்னிடம் இருப்பது தானே அவளிடமும் இருக்கிறது. அவளுக்கென்ன கொம்பா முளைத்திருக்கிறது என்ற ரீதியிலேயே பல பெண்கள் ஒருவர் மீது ஒருவர் பொறாமைத் தீயை வளர்த்துக் கொள்கிறார்கள்.



***கி.ஆகார்—வட்டுக் கோட்டை***

**கேள்வி:—** பித்தா! பரிசளிப்பு விழா நடக்கும் போது ஏன் முதலாம் இடத்தை கடைசியாக கூப்பிடுகிறார்கள்?

**பதில்:—** ஒரு THRILL தான். போட்டி ஒன்றை எல்லாரும் பார்த்து விட்டு இவனுக்கு அல்லது இவளுக்குத்தான் முதலிடம் கிடைத்திருக்குமென நினைத்திருக்க — அவர் மூன்றாம் இடத்துக்கு கூப்பிடப்படுவார். அட இவர் மூன்றாம் இடமா ... அப்போ அவர் தான் முதலிடம் வந்திருப்பார் என குத்து மதிப்பாக கணக்கு போட்டு விட்டு பார்த்து கொண்டிருந்தால் அவர் இரண்டாம் இடத்துக்கு கூப்பிடப்படுவார். அட இவருக்கும் இரண்டாம் இடமா.. அப்போ யாரப்பா அந்த முதலிடம் பெற்றவர் என்று ஆவலுடன் பார்த்திருக்க கடைசியா கூப்பிடப்படும் முதலாம் இடம் பெற்ற நபரை பார்த்து அடப்பாவி இவருக்கா முதலிடம் என்று ஆதங்கப்படுவீர்களே .. இந்த.. இந்த.. இந்த.. THRILL க்குத்தான்.



***சங்கீதா மகேந்திரன் — யாழ்ப்பாணம்.***

**கேள்வி:—** பித்தா! பெண்களை அழவைத்து ரசிக்கும் ஆண்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்?

**பதில்:—** ஆண்களை அழவைத்து ரசிக்கும் பெண்களைப் பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்களோ அதைத்தான் நானும் நினைக்கிறேன்.

***கூ.யோகேந்திரமூர்த்தி —வடலியடைப்பு***

**கேள்வி:—** கடைசிவரை மறவாதிருக்க காதலிக்கு என்ன வாங்கி கொடுக்கலாம்.

**பதில்:—** தாலி.

***இ.வி — உருப்பிராய்***

**கேள்வி:—** ஒரு தலைக் காதலுடன் ஆறு —ஏழு வருடங்களாக காத்திருக்கும் பெண்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:—** ஏறிப்போக வேறு பஸ் கிடைக்காத காரணத்தால்— ஒரே பஸ் ஸுக்காக காத்திருக்கும் பேதைகள் .....



***து.செந்தூரான்—வத்தளை***

**கேள்வி:—** பித்தா ! கத்தியின்றி ரத்தமின்றி எனது எதிரியை பழிவாங்க வேண்டும். ஒரு ஐடியா தாருமய்யா?

**பதில்:—** இந்த கதை உமக்கு உதவுமா என்று பாரும். மரணப் படுக்கையில் கிடந்த பீற்றர்—தன் மனைவியிடம் சொன்னான் அன்பே நான் இறந்த பிறகு நீ ஜோன்சனை திருமணம் செய்து கொள்ள வேண்டும் இதுவே எனது இறுதி ஆசை என்று. பதறிப்போன மனைவி கணவனிடம் கேட்டாள் என்ன ஜோன்சனையா அவர் உங்கள் எதிரி அல்லவா? அவரையா நான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் ?... என்று. பீற்றர் சொன்னான், அன்பே எனது எதிரியான ஜோன்சனை பழிவாங்குவதற்கு இதனைவிட வேறு நல்ல வழி எதுவும் எனக்கு தோன்றவில்லை.

***வி. வேனுஜன் —நவிண்டில்***

**கேள்வி:—** பித்தா ! எனது இலட்சியம் என்னவென்றால்— என்னை கண்டவுடன் எல்லோரும் எழும்பி நிற்க வேண்டும். அந்தளவு பெரிய பதவியில் அமர வேண்டும் என்பதுதான். இதற்கு நான் என்ன செய்ய வேண்டும் ?

**பதில்:—** இதற்கு நீர் பெரியதாக ஒன்றும் செய்யத் தேவையில்லை. ஏதாவது ஒரு மிகப் பெரிய நிறுவனத்தில் குப்பை கூட்டுபவராக வேலைக்கு சேர்ந்து விட்டீரேயாகில் போதும்.

***செ.மதூசூதனன் —வாகரை***

**கேள்வி:—** பித்தா! திருமணவாழ்க்கையில் நுழைய உள்ள எனக்கு உமது புத்திமதி என்ன?

**பதில்:—** எனது அறிவுரையை விட நான் படித்த துணுக்கு ஒன்று உமக்கு பொருந்தும். எடுத்துக் கொள்ளும். இளைஞன் ஒருவன் தனது தந்தைக்கு கடிதம் ஒன்று எழுதினான். அதில் தான் திருமணம் செய்து கொள்ள எண்ணுவதாகத் தெரிவித்து, அதற்கு தந்தையின் அறிவுரையைகேட்டும் எழுதியிருந்தான் — அதற்கு தந்தை எழுதிய பதில் மடல்,

''மகனே! உனது கடிதம் கண்டு நானும் உனது தாயாரும் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தோம். இனிமையும் மகிழ்ச்சியும் நிறைந்ததுதான் திருமண வாழ்க்கை, என்பதை நீ பின்னர் அறிவாய். உன் தாயாருடன் நான் கழித்த பொன்னான காலங்களை எண்ணிப் பார்க்கிறேன். எவ்வளவு இனிமையாகவும், பெருமையாகவும் உள்ளது. விரைவில் திருமணம் செய்துகொள். எமது நல்வாழ்த்துக்கள் எப்போதும் உண்டு. இப்படிக்கு உன் அன்பு தந்தை''

பிற்குறிப்பு— இப்பொழுதுதான் உனது அம்மா அறையைவிட்டு வெளியே சென்றாள். தனியாக இருடா அறிவு கெட்ட முண்டம்.



***செ.துஷ்யந்தன்—வெள்ளவத்தை***

**கேள்வி:—** பித்தா! மனைவிக்கும் — காதலிக்கும் என்ன வித்தியாசம் ?

**பதில்:—** மனைவி— உறுதி முடித்த வீடு, — விரும்பியோ விரும்பாமலோ அந்த வீட்டில் குடியிருந்தே ஆக வேண்டும் — காதலி — அடாத்தாக பிடித்த வீடு. எந்த நேரத்திலும் பறி போகலாம்.

***பொ.சாருமதி —சல்லி***

**கேள்வி:—** பித்தா ! எனக்கு மோட்டார் சைக்கிள் பழக வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. ஆனால் எனது கணவர் விட மாட்டேன் என்கிறார். நான் சுயமாக மோட்டார் சைக்கிள் பழக வழி சொல்லித்தாருமேன் ?

**பதில்:—** அது ஒன்றும் பெரிய வேலையில்லை. மோட்டார் சைக்கிளில் ஏறி அமர்ந்து கொள்ளும். ஸ்ராட் பண்ணும். கிக்கரை உமது மாமியாராக நினைத்து கொண்டு ஒரு உலுக்கு உலுக்கும். சரி இப்போ மோட்டார் சைக்கிள் ஸ்டாட் ஆகியிருக்கும் —அடுத்த கியரை உமது கணவராக நினைத்து மெதுவாக ஒரு மிதி மிதியும். சரி கியரும் விழுந்து விட்டது. இனி அக்ஸிலேட்டரை உமது பிள்ளைகளின் காதாக நினைத்து ஒரு முறுக்கு முறுக்கும். இப்போ மோட்டார் சைக்கிள் ஓடத்தொடங்கிவிடும். அப்படியே தொடர்க.

***த. புஷ்பகரன் —வத்தளை***

**கேள்வி:—** பித்தா ! நான் திருமணம் முடித்து மனைவியின் வீட்டுக்கு வந்தவுடன் எனது மாமனார் தான் வளர்த்து வந்த அல் சேஷன் நாயை விற்றுவிட்டார். ஏனாக இருக்கும் பித்து ?

**பதில்:—** ஒரே வீட்டில் இரண்டு நாய்களை வளர்த்தால் அநியாயச் செலவு என்று நினைத்திருப்பார் போலும்.

***த.வளர்மதி—அல்வாய்***

**கேள்வி:—** ஜோக் ஒன்று தாரும் பித்தா...தா...தா...

**பதில்:—** கிராமத்தவன் ஒருவன் தன் மகளுடன் வெளியூர் செல்ல புறப்பட்டான். நானும் உங்களுடன் வருகிறேன் என்றாள் மனைவி. நீ என்னுடன் வந்தால் உன்னுடைய அண்டா வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்கமாட்டாய். என்னை ஏதாவது வம்புக்கிழுத்து சண்டை பிடிப்பாய். எனவே உன்னை அழைத்து செல்ல மாட்டேன் என்று கூறிவிட்டுப் புறப்பட்டுச் சென்றான்.

அவனும் — மகளும் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தனர். அப்போது அந்த ரயிலில் திடீரென்று திருடர்கள் நுழைந்து விட்டனர். ரயில் பயணிகளிடம் இருந்த பொருட்களை எல்லாம் திருடிச் சென்று விட்டனர்.

திருடர்கள் சென்றபின் ஐயோ நான் என்ன செய்வேன். கஷ்டப்பட்டு சேர்த்த பொருள்களை எல்லாம் திருடர்கள் கொண்டு சென்று விட்டார்களே! என்று புலம்பினான் கிராமத்தவன்.

அப்போது அவனது மகள் ''அப்பா அப்பா கவலைப் படாதீர்கள் — திருடர்களை கண்டதும் நான் புத்திசாலித்தனமாக மோதிரம், சங்கிலி, காப்பு எல்லாவற்றையும் எனது வாயில் போட்டு மறைத்துக் கொண்டேன். அதனால் எம்மிடமிருந்த விலையுயர்ந்த பொருட்களெல்லாம் காப்பாற்றப் பட்டு விட்டன. எம்மிடமிருந்த பெட்டி படுக்கைகளை மட்டும்தான் திருடர்கள் எடுத்து சென்றிருக்கிறார்கள்'' என்றாள்.

இதனை கேட்ட கிராமத்தவன் சொன்னான் ''அடடா ...உனது அம்மாவையும் அழைத்து வந்திருந்தால் திருடர்களிடமிருந்து பெட்டி — படுக்கைகளையும் காப்பாற்றி இருக்கலாமே!''

***இ.யூதாஸ்— உரும்பிராய்***

**கேள்வி:—** காதல் என்பதற்கு பலரும் — பலவிதமான கருத்துக்களை கூறுகிறார்களே — உமது கருத்தென்ன பித்தா!

**பதில்:—** காதல் என்பது உடம்பிலே வரும் சிரங்கை போன்றது என்பதே எனது கருத்து. எப்படியென்றால் சிரங்கு வந்தால் உடம்பெல்லாம் அரிக்கும். சொறிய வேண்டும் போல் இருக்கும். சொறியத் தொடங்கினால் சொர்கமே தெரியும். சொறிந்து முடிந்த பின் — அந்த இடத்திலே எரிச்சல் ஏற்பட்டு நகம் விறாண்டிய இடத்தில் இரத்தம் கசிந்து அது புண்ணாகி சீழ் வடிந்து வெந்து அவிந்து நாறத்தொடங்கி விடும். காதலும் அப்படியே ...வயது வந்தவுடன் ஒரு ஏக்கம் ஏற்படும் காதலிக்க வேண்டும் போல் இருக்கும். காதலிக்க காதலிக்க நன்றாக இருக்கும். ஆனால் அந்த காதலில் முறிவோ — பிளவோ ஏற்பட்டு விட்டால் மனமும் — மானம் — மரியாதையும் நாறத் தொங்கிவிடும்.

***து.வைகுந்தன்—நவிண்டில்***

**கேள்வி:—** பித்தா ! அப்படி போடு பாடல் இவ்வளவு சூப்பர் கிட் ஆனதன் காரணம் என்னவாக இருக்கும் ?

**பதில்:—** துள்ளும் இசை — மன்மதராசாவிற்கு பிந்திவந்த துள்ளு இசைகளில் இது தான் நம்பர் 1 ஆக இருக்கிறது. இதனை விட பாடலில் வரும் சாதாரன மக்கள் பாவிக்கும் வசனநடை அதாவது தமிழ் நாட்டில் இருவர் விவாதம் செய்து கொண்டிருந்தால் — ஒருவர் மற்றவருக்கு சரியான பதிலடி கொடுக்கும் போது அதனை அப்படி போடு அரிவாளை என்று சொல்லி பாராட்டுவதுண்டு. இது கிட்டத்தட்ட ஓ போடு என்பதைப் போன்ற சாதாரண நையாண்டிப் பேச்சு — அடுத்து மாபெரும் பேரணிகள் வைக்கும் கட்சிகளின் தொண்டர்கள் —கஷ்டப்பட்டு பேரணிக்கு ஆட்களை திரட்டிவிட்டு தங்கள் எதிர்க் கட்சியினரை பார்த்து இந்த படை போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா என்று கேட்பது வழக்கம். இவ்வாறான அன்றாட பேச்சு வழக்குத்தமிழை கொண்டு புனையப்பட்ட பாடல் வரிகள் —மன்மதராசா பாணியில் விஜயும் —த்ரிஷாவும் NON-STOP ஆக ஆடும் ஆட்டம் எல்லாமே இந்த சுப்பர் ஹிட்டுக்கான காரணங்கள்.



***கு.சுமித்ரா —தெஹிவளை***

**கேள்வி:—** பித்தா! பேரழகன் பார்த்துவிட்டீரா எப்படி படம்

**பதில்:—** கூனன் ஆக வரும்சூர்யாகொஞ்சம்கல்யாணராமன் கமலஹாசனை நினைவு படுத்துகிறார். வித்தியாசமான நடிப்பு. — படம் பரவாயில்லை. ஆனால் சின்ன கலைவாணர் என்று பட்டம் பெற்ற விவேக் எல்லா படங்களிலும் வலது குறைந்தவர்களை கிண்டல் அடிப்பது வழக்கம். ஆனால் பேரழகனில் கொஞ்சம் ஓவர்.

## பித்தனின் கேள்வி

கேள்வி:— பெண்களை ஏன் பூமிக்கு ஒப்பிடுகின்றார்கள்?

## வாசகர் பதில்கள்

***ஆ.பேபி — முழங்காவில்.***

பூமி இன்றி எந்த உயிரும் இல்லை. அதேபோல் பெண் இன்றி எந்த உயிரும் இல்லை என்பதானால்.

***புவிதா — திருநெல்வேலி கிழக்கு.***

உலகத்திலுள்ள அண்ட சராசரங்களையும் பேணிப் பாதுகாத்து இன்புறும் பூந்தோட்டம் போன்றவள் பெண்ணென்பவள் அதனால்தான்.

***வி.விஜிமயூரா — யாழ்.பல்கலைக்கழகம்.***

பூமிபோன்று பெண்களும் சீற்றம் கொள்ளும் குணம் கொண்டவர்கள் என்பதால்.

***இளவேனில் — யாழ்ப்பாணம்.***

பூமியைப்போல் தானும் சுழன்று மற்றவர்களையும் சுழட்டி, ஈர்ப்பு விசையால் கவரக்கூடியவள்.

***ஜெ.ஜெபராஜ் — கட்டுநாயக்க.***


பூமிபோன்று பெண்கள் எப்போதும் அமைதியாக இருக்க மாட்டார்கள் அதனால் தான்.

---

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான — குறும்பான — யதார்த்தமான — பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை ஜூன் 27 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.



**கேள்வி:—** ரஜனி நடிக்கவுள்ள ஜக்குபாய் படத்தில் அவர் இலங்கை சார்பாக என்ன (டயலக்) வசனம் பேசலாம்?


பதில்:— 'அண்ணன்' சொல்லுவான் ஜக்குபாய் செய்வான்.

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில்மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85,ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு— 14.

# இளைய தளபதி விஜயின் பிறந்த
## ஸ்பெ

22.06.2004



| | | |
|---|---|---|
| விஜயின் சொந்தப் பெயர் | - | ஜோசப் விஜய் |
| ரசிகர்கள் இவருக்கு வழங்கிய பெயர் | - | இளைய தளபதி |
| தந்தை பெயர் | - | எஸ்.ஏ.சந்திரசேகர் |
| தாய் பெயர் | - | ஷோபா சந்திரசேகர் |
| பிறந்த திகதி | - | 22-6-1974 |
| நடிக்க ஆரம்பித்த ஆண்டு | - | 1992 |
| திருமணம் | - | 1999, ஆவணி |
| மனைவி பெயர் | - | சங்கீதா |
| மகன் | - | சஞ்சாய் |
| நண்பர்கள் | - | சஜேய்,ஸ்ரீநாத், சஞ்ஜீவ், மனோஜ், ராஜ்குமார் |
| விருப்பமான உணவு | - | அசைவம் |
| பிடித்த உடை | - | ஜீன்ஸ் ரீசேட் |
| பிடித்த பெயர் | - | விஜய் |
| அடுத்த படம் | - | மதுர, திருப்பாச்சி |
| அதிகம் விரும்புவது | - | மகன் சஞ்சாய் |
| பிடித்த நடிகர் | - | சுப்பர் ஸ்டார் |

## விஜய் நடித்த படங்கள்

நாளைய தீர்ப்பு, செந்தூரபாண்டி, வசந்தவாசல், தேவா, செல்வா, விஷ்னு, ரசிகன், சந்திரலேகோ, மாண்புமிகு மாணவன், ராஜாவின் பார்வையிலே, பூவேஉனக்காக, லவ்டுடே, ஒன்ஸ்மோர், நேருக்கு நேர், நிலவே வா, துள்ளாத மனமும் துள்ளும், ப்ரியமுடன், காதலுக்கு மரியாதை, மின்சாரக் கண்ணா, என்றென்றும் காதல், கண் ணுக்குள் நிலவு, நினைத்தேன் வந்தாய், நெஞ்சினிலே, பத்ரி, குஷி, பிரியமானவளே, ஷாஜகான், யூத், தமிழன், வசீகரா, ப்ரண்ட்ஸ், பகவதி, புதிய கீதை, திருமலை, கில்லி.

அன்று முதல் இன்று வரை...

## ஏழைகளுக்கு உதவுவது மனத் திருப்திக்கு

கில்லியின் உச்சகட்ட வெற்றியில் உச்சி குளிர்ந்து போயிருக்கிறார் விஜய். பொதுவாக பத்திரிகையாளரிடம் பயந்து பேசுகிற விஜய் தனது ரசிகர்களுடன் பேசும்போது அவர்களுள் ஒருவராக கலந்து பேசிறார். விஜய் தந்த அப்படியோரு மிக்ஸர் பேட்டி இது.

கில்லியில் ஆக்ஷன்,காமெடி என்று ரெண்டு சைட்டிலும் அசத்திவிட்டீர்களே?

அடிதடி,காமடி இந்த ரெண்டுமே எனக்கு ரொம்ப பிடிக்கும். சொல்லப்போனால் இதுவும் ரஜினி சார் ஸ்டைல்தான். கில்லியில் ஆக்ஷன் ஒருபுறம், குடும்பத்தில் செய்கிற காமெடி மறுபுறம் என கலகலக்க வெச்சிட்டேன் என்று எக்கச்சக்கமாகப் பாராட்டிராங்க சந்தோஷமா இருக்கு.

ரஜினிக்கு அடுத்து குட்டீஸ்களோட அபிமான ஹீரோ நீங்க தான். குழந்தைகளுக்காகவே ஒரு படம் பண்ற ஐடியா இருக்கா?

நிச்சயமாக இருக்கு. ஏன்னா குழந்தைகள் என் மேல் காட்டுற அன்பை நேரடியாகவே உணர்ந்திருக்கேன். மதுர, திருப்பாச்சி படங்களுக்கு அடுத்த சிறுவருக்கான படம் பண்ற ஐடியா இருக்கு.

சக நடிகர்கள் இரட்டை வேடத்தில் பட்டை கிளப்புறாங்க! நீங்க எப்போ?

டபுள் ஆக்ட் பண்றது நிஜமாவே கஷ்டமான விடயம் தான். ஆனா எனக்கு அப்படி நடிக்க செம ஆசை தான். நம்ம நேரம்... டபுள் ஆக்ட்ல நமக்குன்னு நல்ல கதை அமைய மாட்டேங்குதே!

தாம்நாட்டைக் காப்பாத்திற வீரன் மாதிரியான கேரக்டரில் இன்னும் நடிக்கலையே? இது உங்களுக்கே நியாயமா? அப்படிப் பட்ட ரோலை கற்பனை பண்ணிப் பார்த்தாலே எனக்கு சிரிப்புத்தான் வருது! விட்டுடுங்க ப்ளீஸ்!

படங்களில் பன்ச் வசனங்கள், ஏழைகளுக்கு உ தவி என்று நீங்கள் எதையோ திட்டமிட்டு செயல்படுகிறீர்கள் போல தெரிகிறது?

நீங்க சொல்ற அந்த எதையோ பற்றியெல்லாம் எனக்கு ஐடியாவே இல்லை. பன்ச் வசனம் வைப்பது படத்துக்கு விறுவிறுப்பூட்ட. ஏழைகளுக்கு உதவுவது மனசுக்கு திருப்தி கிடைக்க. அவ்வளவுதான்.



## ஒரு பாடலுக்கு ஆடிய நடிகைகள்

| | | |
|---|---|---|
| சிம்ரன் | - | யூத் |
| கிரண் | - | கில்லி |
| ரோஜா | | நெஞ்சினிலே |
| மீனா | - | ஷாஜகான் |
| மும்தாஜ் | - | குஷி |
| காயத்திரி ரகுராம் | - | வசீகரா |
| ராதிகா சவுத்ரி | - | பிரியமானவளே |

## விஜயுடன் ஜோடிசேர்ந்த நடிகைகள்...



# ...றந்தநாள் ...ஸ்பெஷல்








- அஜித், த்ரிஷா -
'ஜி'

# ஐஸ் கண் தானம்

தன்னுடைய மரணத்துக்குப் பிறகு தன் கண்களை விஞ்ஞானிகள் ஆராய்ச்சிக்காக பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கண்களை தானம் செய்துள்ளார் நடிகை ஐஸ்வர்யாராய். இவ் விவரத்தை அவரின் இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ளது.

உலக அழகி பட்டத்தைப் பெற்றதன் மூலம் உலகின் அனைத்துப் பகுதிகளிலும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட ஐஸ்வர்யாராய். மற்ற உலக அழகிகளைப் போல் இல்லாமல், இந்திய மக்களின் உள்ளங்களில் நிலையான ஒரு இடத்தை பிடித்துள்ளார். மெல்ல மெல்ல ஹொலிவுட்டின் பக்கமும் வரைத் தொடங்கியுள்ளார்.

இந்த நிலையில், அமெரிக்காவின் 'டைம்' என்ற பத்திரிகை, உலகளவில், பல்வேறு துறைகளில் மக்களிடையே அதிக செல்வாக்கு பெற்றவர்கள் என்ற பட்டியலை தயார் செய்து 100 பேரை தேர்ந்தெடுத்ததில் இவரும் ஒருவர்.

இவரின் பெயரில் 17, 000 இணையத்தளங்கள் உள்ளன.


-ஐஸ்வர்யா-

# சினிமாவுக்கு வருகிறார் கார்த்திக் மகன்!

அரசியலைப்போலவே சினிமாவிலும் வாரிசுகளை அறிமுகப்படுத்துவது ''சகஜமப்பா'' என்ற நிலை ஆகிவிட்டது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மகன் பிரபுவில் தொடங்கி சமீபத்திய வரவுகளான தனுஷ், ஜெயம் ரவி, சிபிராஜ் என அந்தப்பட்டியல் நீண்டுகொண்டே செல்லும்.

இதில் மாறன் படத்தில் நடித்த மணிவண்ணன் மகன் நீண்ட இடைவெளி விட்டு இப்போது சிம்பு நடிக்கும் ''மன்மதன்'' படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார்.

விரைவிலேயே நடிகர் எஸ்.எஸ்.சந்திரனின் மகன் ரோஹித்தும் வெள்ளித் திரையில் வலம் வர இருக்கிறார். ஒரு முறை சொல்லி விடு என்ற படத்தில் அவர் நடித்துள்ளார்.

இந்த நிலையில் கார்த்திக்கின் மகன் கவுதமும் சினிமாவுக்கு வருகிறார். கவுதமைத் தேடி கடந்த 6 மாதங்களுக்கு முன்பே சினிமா வாய்ப்புக்கள் கதவைத் தட்ட ஆரம்பித்துவிட்டன.

கவுதமை சினிமாவில் நடிக்க வைப்பது என்று கார்த்திக் முடிவெடுத்து உள்ளார். இதனையடுத்து ஊட்டியில் படித்துக்கொண்டிருந்த கவுதம் அந்த ஊரைக் காலி செய்துவிட்டு இந்த ஆண்டு முதல் சென்னையில் படிக்கிறார்.

சினிமா வாய்ப்புக்காக கார்த்திக் இந்த வசதியை செய்து கொடுத்துள்ளார்.

இதேபோல் டைரக்டர் பாக்யராஜின் வாரிசுகளும் சினிமாவுக்குவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தனுஷுக்கு பதில் பாலா

வசூல்ராஜா எம்.பி.பி.எஸ். சில் கமலுக்கு அப்பாவாக நடிக்கபோவதாக முதலில் அமிதாப் பெயர் அடிபட்டது. அடுத்து பாலச்சந்தர் என்றார்கள் கடைசியில் இயக்குனர் கே.விஸ்வனாத் நடிக்கிறார். ஏற்கனவே கமல், பிரபு, கருனாஸ், சினேகா, பிரகாஷ்ராஜ் என்று எக்கச்சக்கமாகண பிரபலங்கள் நடிக்கிறார்கள்.

இது போதாதென்று லேட்டஸ்ட்டாக ... ஒரு பாத்திரத்தில் தனுஷ் நடிப்பதாக இருந்தது. மரணத்தை எதிர் நோக்கி காத்திருக்கும் இளைஞனுக்கு நம்பிக்கையூட்டுகிற மாதிரி கமல் ஆறுதல் சொல்லுவது. பாட்டுப்பாடி கலாட்டா பண்ணுவதென்று போகிற பாத்திரம் சின்னப் பாத்திரம் என்றாலும் பேசும்படியான பாத்திரம். என்ன நினைந்தாரோ தெரியவில்லை. தனுஷ் நடிக்க மறுத்துவிட்டார். அந்த பாத்திரத்தில் இப்போது நடிக்கஒப்புக்கொண்டிருப்பவர் நடிகர் பாலா.


- அர்ஜுன், ரீமா சென் -
'கிரி'

# கொட்டும் மழையில் சண்டைக்காட்சி

அர்ஜுன் – லைலா–சாயாசிங் நடிக்கும் 'ஜெய்சூர்யா' படத்தின் படப்பிடிப்பு பொள்ளாச்சியிலும், அதை சுற்றியுள்ள கிராமங்களிலும் நடைபெற்றது.

ஊர்த்திருவிழாக்கூட்டத்தில் அர்ஜுன்–மகாநதி சங்கர் மோதும் உச்சக்கட்ட சண்டைக் காட்சி படமானது.

பரதம், குச்சுப்புடி, மயிலாட்டம், ஒயிலாட்டம், கரகம் ஆகிய கலைகளில் தேர்ந்த 150 கலைஞர்கள் மற்றும் 1,500 துணை நடிகர்–நடிகைகள் கலந்துகொண்டனர்.

படப்பிடிப்பு அன்று மழை பெய்தது. 6 தீயணைப்பு வண்டிகளின் உதவியுடன், செயற்கை மழையையும் வரவழைத்து, அர்ஜுன் – மகாநதி சங்கர் மோதும் சண்டைக் கட்சியை படமாக்கினார்கள்.

இந்த சண்டைக்காட்சியில் 3 கமெராக்கள் பயன்படுத்தப்பட்டன.

அர்ஜுன்–லைலா சம்பந்தப்பட்ட 2 பாடல் காட்சிகளை போரூரில் அர்ஜுனுக்கு சொந்தமான தோட்டத்தில் செட் போட்டு படமாக்கினார்கள்.

''என்னை வச்சுக்கச்சொல்லி வச்சுக்கச்சொல்லி வச்சுக்க வச்ச... என்னை கட்டிக்கச்சொல்லி கட்டிக்கச்சொல்லி கட்டிக்க வச்ச... என்ற பாடல் காட்சியில் அர்ஜுன் – லைலாவுடன் 50க்கும் மேற்பட்ட நடனக் கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

''கட்டுனாஅவன கட்டணும்டா... இல்ல கட்டினவன் காலை தொட்டு கும்பிடணும்டா'' என்ற பாடல் காட்சியிலும் அர்ஜுன் – லைலா பங்கேற்றனர்.

இத்துடன் பெரும்பகுதி படப்பிடிப்பு முடிவடைந்தது. இப்படம்தமிழ்–தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் தயாராகின்றது.

# ஜக்குபாய்க்கு ஆப்பரேஷன்

''ஜக்குபாய்'' படத்தில் நடிப்பதற்காக ரஜினியின் உதடு ஆப்பரேஷன் மூலம் அழகுபடுத்தப்பட்டுள்ளது. இது மூன்றரை மணி நேரம் நடந்தது. இரண்டு ஆண்டுகளாக யோசித்து ''ஜக்குபாய்'' படத்தை எடுக்கும் பணியில் தற்போது அவர் ஈடுபட்டுள்ளார்.

இப்படத்தில் ரஜினியுடன் கதாநாயகியாக நடிக்க இந்திப்பட முன்னணி நடிகைகள் ஐஸ்வர்யாராய் ,ராணி முகர்ஜி உள்பட பல நடிகைகளிடம் பேசப்பட்டு வருகின்றது.

கடந்த 8ஆம் தேதி இரவு 945 மணிக்கு சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அப்பலோ அருத்துவமனைக்கு ரஜினி திடீரென வந்தார். தனது உதட்டில் உள்ள வெள்ளை மற்றும் கறுப்புத் தழும்புகளை அகற்ற ''காஸ்மெடிக்சேர்ஜரி '' செய்து கொள்ள விரும்புவதாக ரஜினி டாக்டர்களிடம் தெரிவித்தார். அறுவைச் சிகிச்சையை செய்தால் உதட்டில் உள்ள தழும்புகள் மறைந்து விடுமா ? என்று டாக்டர்களிடம் ஆலோசனை நடத்தினார்.

நீங்கள் நினைத்த மாதிரி ரிசல்ட் இருக்கும் என்று டாக்டர்கள் கூற அறுவை சிகிச்சைக்கு ரஜினி சம்மதம் சொன்னார். உடனடியாக 4005 என்ற அறையில் ரஜினி தங்கவைக்கப்பட்டார் அங்கிருந்து மனைவி லதாவுடன் போனில் பேசினார் . அடுத்த அரை மணி நேரத்தில் லதா அங்கு வந்தார். பத்திரிகை அலுவலகங்களில் இருந்து மருத்துவமனைக்கு போன் மூலம் தொடர்பு கொண்டு ரஜினி குறித்து கேட்கப்பட்டது. முதலில் ''ரஜினி வரவில்லை '' என்றனர். அதன்பிறகு ரஜினி வந்தார் உடனே சென்று விட்டார்'' என்று பட்டும் படாமல் தகவல் வந்தது.

ஆனால் மருத்துவமனையின் நான்காவது மாடியில் உள்ள அறுவை சிகிச்சையில் உள்ள பிரத்தியேக தனி அறையில் ரஜினி தங்கியிருந்தார். ரஜினிக்கு அறுவைச் சிகிச்சை செய்ய அமெரிக்காவில் இருந்து டாக்டர் வரவழைக்கப்பட்டுள்ளார். அவர் மாலை மூன்று மணிக்கு வருவார், அதன் பிறகு அறுவை சிகிச்சை நடத்தப்பட உள்ளது என்று மருத்துவமனை வட்டாரத்தில் பேசப்பட்டது. அதன் பின்பு அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.


-சங்கவி-

# கவிதைப் பூங்கா

## நம்பிக்கை

ஆழியின்கரை
தழுவியிருக்கிறதென்வீடு.
ஊழியின்
பெரும் கூத்தென
என்முற்றத்தின்முகத்தில்
அறைகின்றன.
சினங்கொண்ட அலைகள்.
வீட்டின்கூரையை
தூக்கியெறிந்தோடுகிறது
குடிகாரக் காற்று.
என்றாலும்-நான்
உண்பேன்
உறங்குவேன்.
கட்டுமரத்தை
கடலிலேற்றி
தொழிலுக்குப்போவேன்.
வருவேன்.
கொண்டு சென்ற
வலையையும்
கொன்று வந்த
மீனையும்
கரைசேர்ப்பேன்.
வீட்டு முற்றத்தில்
படுத்து புரள்வேன்.
என்மனையாளை
அழைத்து
சரசம் புரிவேன்.
மீண்டும் மீண்டும்
அலை வந்தென்
முற்றத்தை
அசிங்கப்படுத்தும்.
என்றாலும்-நான்
இதுவெல்லாம்
செய்வேன்.
விதியெனச் சொல்லி
விழி மூடித் துயிலேன்.
பழி செய்தான்
பாவியென
படைத்தவனை பழியேன்.
ஏனெனில்
என் மனதில்
நம்பிக்கை எனும் பயிரை
நட்டு வைத்துள்ளேன்.
அதனால்
சினங்கொண்டெழுத்துடிக்கும்
அலையும்
கூரை பிரித்து
குதித்தோடும் காற்றும்
எனக்கு சிறு துரும்பாகவே
தெரிகின்றன.

மு. யாழவன்,
திருகோணமலை.

## என் பிரியமானவளே

மனதில் எரியும்
தீயை —என்
கண்ணீர் துளியால்
அணைக்கத்துடிக்கிறேன்
ஆனால்
கண்ணீரே இல்லாமல்
வரண்டு விட்ட
என் கண்கள்
இமைக்கவும் முடியாமல்
இமைக்க மறுக்கவும்
முடியாமல்
புழுவாய் துடித்து
புழுதியாய் பறக்கின்றேன்.

செ.நாதன்,
வெள்ளவத்தை.

## நிறுத்திவிடு

ஏய் பெண்ணே,
உன் கடிகார
ஓட்டத்தை நிறுத்திவிடு.
ஏனெனில்...
அதன் முள் கூட
எனைக் குத்திக்கொண்டே
சுழலுதடி.

கே.ஆர்.சுதர்சன்,
மல்லாகம்.

## கண்ணீருக்குள்

உன் அழுகையில்
அன்புக்கு அர்த்தம்
சொன்னாய்.
எனக்குத் தெரியாது
உன் மனம் பூவென்று!
அதை
புண்ணாக்கிவிட்டேன்.
நினைக்கும்போதெல்லாம்
நெஞ்சம் வலிக்கிறது.
உன் கண்களில்
வழிந்த கண்ணீருக்குள்
நானிருக்கிறேன்
என்பதை நினைக்க!

நந்தபாரதி,
லண்டன்.

## மறக்கவில்லை

உன்னதமான உறவாக
என் வாழ்க்கையில்
வந்தவனே,
என் நெஞ்சம்
அறியும்
உன் வல்லமையை.
மறக்கவில்லை
என்னைப்
புரிந்துகொண்ட
உயிர் நட்பு
என்பதை
மறக்கவில்லை.
நான் என்றும்
உன் இதய
பூங்காவில்
இடம் பிடித்த
மலர் என்பதை
மறக்கவில்லை.
நீ என்மீது வைத்த
ஆழமான நட்பு
நிஜமானது
என்பதையும்
மறக்கவில்லை.

சி.சாளினி,
புதுக்குடியிருப்பு.

## தேடல்

தாயைத் தேடினேன்
அன்பை வளர்க்க
தந்தையைத் தேடினேன்
பாசம் வளர்க்க
அகராதியைத்தேடினேன்
அறிவை வளர்க்க
குருவைத் தேடினேன்
என் கல்வியை வளர்க்க
இறைவனைத் தேடினேன்
என் இனத்தைக்காக்க

செல்வகுமாரி,
உடையார்கட்டு.

## கனவு

பகலின் அஸ்தமனங்கள்
இரவில் ஒன்றுகூடி
நித்திரை எனும்
இமைகளின்
மூடலின் பின்
நிசப்தமாய்
விழித்திரையில்
தோன்றி மறையும் காட்சி.

க.நகுலேஸ்வரன்,
முல்லைத்தீவு.

## உயிரோடு கலந்த உறவு

எண்ணச்சிறகுகளால்
எழுதிவிட்டேன் உன்னை
நான்.
வார்த்தைகளில்
உன்மௌனம்
வதைக்குதடி என் மனதை.
நிஜத்தில் என் இதயம்
கலங்குதடி. உன்னாலே.
காத்திருந்த பொழுது
காலமாகிப்போனாலும்
கடைசி வரை நீ தான்
என் உயிரோடு கலந்த
இறுதி உறவு.

எஸ்.பிரகாஷ்,
அல்வாய்.

## நான் என் செய்தேன்.. என் செய்தேன்..

இரக்கமின்றி என்னை அடைத்துவைக்கும்
அளவுக்கு
என் செய்தேன்..
உன் கண்கள் என் கண்ணாடி.
அதைப் பறித்து மறைக்க முயற்சிக்காதே
வேதனைப்படுவது என் மனம் மட்டுமல்ல
உன் கண்களும் தான்...
புரியவில்லையா...
என்றும் நீ எனைப் பிரிந்து படும் பாட்டை விட
உன் கண்களை பிரிந்து என் மனம் படும்
பாடுதான் பெரிது...

மஞ்சு,
நாரஹேன்பிட்டி.

## கண்ணீரில் கரையும் காலங்கள்

அன்பே...
கனவுகள் கண்களைக்கசக்க
காலங்களும் கடக்க
கண்ணீரோடு கண்டேனோ உன் முகம்
என்னை நீ
பிரியும் நாளும் வந்ததடா
கடல் கடந்து சென்றும்— நீ
ஒரு கடிதம் கூட வரையிலேயே...
எனி என் நாள் உன்முகம் காண்பேன்.
தலையணைத் துணையோடு
ஆயுள் முழுக்க வாழ்வேனோ
இல்லை
உயிர்விட்டே மீழ்வேனா?

மதுரா,
[illegible]

## மறுக்கிறது

என் மூடிய விழிகள் இரண்டும்
விரிய மறுக்கின்றன
காரணம்
விரித்தால் நீ தொலைந்து
விடுவாய் என்ற பயம்.
என் வண்ண ஆடைகள்
என்னில் சேர மறுக்கின்றன.
காரணம்
இனி உன்னைக்காணும்போது தான்
வெளிவருவேன் என்று!
என் நெற்றிப்பொட்டு
விலக மறுக்கின்றது.
காரணம் நீ தான் அதனை
ரசித்துவிட்டாயே
ஏன் தானோ இத்தனை மறுப்பு?

ரீ.தேவிகா,
மட்டக்களப்பு.

## உன்னால் முடியுமா?

மறந்துவிடு என்கிறாய்
ஆனால்
உனக்காக நானும்
எனக்காக நீயுமாய்
நாம் வாழ்ந்த
அந்த இனிய நாட்களை
உன்னால்
மறக்க முடியுமா?
முடியுமென்றால்
மறந்துவிடு!
ஆனால்
என்றும் என்னோடு
போட்டி
போட்டுக்கொண்டிருக்கும்
உன் நினைவலைகளை
என்னால்
என்றும்
மறக்கமுடியாது.

நிலா,
கொழும்பு.

## நியூட்டனின் விதி

பிரிவுகள்
நிரந்தரமானவை அல்ல.
மாண்டவர் மீள்வதும்
மீண்டவர் மாள்வதும்
பிறப்புத் தத்துவங்களாய்...
காதலில் வெல்வதும்
காதலில் தோற்பதும்
காவிய தத்துவங்களாய்!
கல்லூரியிற் பிரிவதும்
இல்லத்தில் சேர்வதும்
வாழ்க்கைத் தத்துவங்களாய்!
மொத்தத்தில்
நியூட்டனின் விதியொன்று
வாய்ப்புப் பார்க்கப்பட்டதாய்...

பொ.துஜிவ்,
ஹாட்லிக் கல்லூரி.

## ஏழைக்குதவு

பெற்றோரை
இழந்துவிட்டோம்.
உற்றாரை
இழந்துவிட்டோம்.
கற்றோரே ஓடிவந்து
பேருதவி செய்வீரே.
உண்ணவோ
உணவுமில்லை.
உறங்கவோ
இடமுமில்லை.
கற்கவோ
வசதியில்லை.
யாருதவ வருவாரோ?
உள்ளத்து
கருத்துகளை
உற்றாருக்கு
சொல்லிடவே
கள்ளமில்லா
எங்களுக்கு நல்லவழி
காட்டுங்களேன்.
வளர்ந்திடும் உலகினோடு
வாழ உள்ளம்
துடிக்குதம்மா
கற்றவரே வந்து நின்று
கல்வியொன்று
தாருமய்யா.
அடிப்படைக்கல்விதனை
நாமெல்லாம் கற்றிடவே
ஆன வழி
செய்வதெல்லாம்
ஆசிரியர் கைகளிலே!

ச.சுப்பிரமணியம்.

## உன் மௌனம்

சித்திரை நிலவே-என்
நித்திரை ஏன் பிரித்தாய்
சத்தியம் செய்கிறேன்
என்னைத் தந்துவிடு.
ஒழிந்து கிடக்கும்
ஒற்றை மலரே
ஓர் நிமிடம் நில்.
மாசிப்பனியே
பசி பிடித்த-உன்
நினைவுகளை
மறக்க முடியவில்லை.
சிறகுள்ள மலராய்
திசை எங்கு போனாலும்
நீ வாழ்க .
தீயிலிட்ட உன்
மௌனம் சிதைத்தது
என் இதயத்தை!
நீ சிரித்தால் மீண்டும்
துளிர்க்குமோ அது?

பீ.கே.மதிஸ்.

## பதில் சொல்லு

செடியின் நடுவில்
நின்று தவிக்கின்ற
பூக்கள் எல்லாம்
உந்தன்
கூந்தலிடையில்
சிக்கித் தவிக்கின்ற
வேளையிலே
எந்தன் இதயத்தில்
மாற்றங்கள்
ஏராளம் ஏனடி?
உன்னைக் கண்டவுடன்
நான் கதைக்க
நினைக்கையிலே
கதைகள் எல்லாம்
கவிதைகளாய்
மாற்றம் கண்டனவே
ஏனடி?
ஆனால் மனம் விட்டு
உன்னுடன்
பேச நினைத்தபோது
எந்தன்
மனம் மட்டும்
மௌனித்து நின்றதே
ஏனடி?
மௌனித்து
நின்ற போதும்
மொழிகளால் பேச
நினைக்கையில்
நீ விழிகளை
மோதியதும்
ஏனடி?

யோ.தர்ஷன்,
சென்.லீகோரியார் கோவிலடி.

# பி.ஜே.பி. மீண்டும் மதவாதத்துக்கு செல்லுமா?

வாஜ்பாய் பிரதமர் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டபின்பு முதன்முறையாக தனது கட்சியின் தோல்விக்கான காரணம் ஒன்றை வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

சுதந்திர இந்தியாவில் நேரு, இந்திராவுக்கு அடுத்து அதிக காலம் பிரதமராக இருந்தவர் வாஜ்பாய். கூட்டணி அரசு என்ற பரிசோதனையை வெற்றிகரமாக நடத்திக் காட்டிய ஒரே பெருமைக்குரிய பிரதமர் வாஜ்பாய். இந்து வெறிக்கட்சியான பாரதீய ஜனதாவின் மென்மையான முகம் வாஜ்பாய் என்பது உண்மையே.

1996 இல் முதன்முறையாக 160 எம். பிக்களுடன் வாஜ்பாய் ஆட்சி அமைக்க முயன்றும் அப்பொழுது எவரும் ஆதரிக்க முன்வரவில்லை. 13 நாட்களின்பின்பு லோக்சபாவில் நம்பிக்கைகோரும் தீர்மானத்தின்போது அவர் தோல்வியை உணர்ந்து வெளியேறினார்.

## மிதவாதியான வாஜ்பேய்

அப்போது லோக்சபாவில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொன்னது என்னவெனில், பிரதமர் பதவிக்கு வாஜ்பாய் சரியானவரே, ஆனால், அவர் பிழையான கட்சியில் உள்ளார் என்பதே. இப்படிச் சொன்னவர்களில் பலர் வாஜ்பாயுடன் 1998 இல் கூட்டணி சேர்ந்து ஆட்சி அமைத்தனர். 24 கட்சிகள், பல்வேறு பிராந்திய அணிகளை இணைத்து அவர்கள் எவரும் முகம் கோணாமல் 6 ஆண்டு காலம் அரசு நடத்தியவரும் வாஜ்பாயே.

மிதவாதியான வாஜ்பாய் எப்படி பி.ஜே.பி.கட்சிக்குள் வந்தார் என்பதே பலரின் ஆச்சரியம். ஆரம்பத்தில் இராமர் கோயில் விவகாரத்தை முன்னிறுத்தியே எண்பதுகளின் பிற்பகுதியில் பி.ஜே.பி.முன்னிலைக்கு வந்தது. 1984 இல் இரண்டே இரண்டு லோக்சபா ஆசனங்களுடன் கடைசி வரிசையில் இருந்த பி.ஜே.பி.1987 இல் 86 ஆசனங்கள், 1991 இல் 110 ஆசனங்கள் என படிப்படியாக தனது பலத்தை அதிகரித்து வந்து ஆட்சி அமைக்கும் நிலையை அண்மித்ததும் தனது மென்மையான முகமான வாஜ்பாயை வெளிக்காட்டியது. அதற்கேற்றாற் போல வாஜ்பாயின் பழுத்த அரசியல் அனுபவம் அமைந்தது. அசைக்கமுடியாத ஒரு பிரதமராக அவர் கட்சிக்குள்ளும் வெளியிலும் உயர்ந்தார்.

வாஜ்பாய் செல்வாக்குப் பெறப்பெற பி.ஜே.பியின் தீவிரவாத முகமான அத்வானி பின்தள்ளப்பட்டார். 1980 களின் பிற்பகுதியில், அயோத்திக்கு ரத யாத்திரைகள் நடத்தியவர் அத்வானி. கட்சியின் தலைவராக இருந்தவரும் அவரே. எனினும் அவர் கூட்டணிக்கட்சிகளை கவரமுடியாத ஒருவராக கருதப்பட்டார். ஜெயலலிதாவுடனும் ஜோர்ஜ் பெர்னாண்டஸுடனும் மட்டும் அவருக்கு நெருங்கிய நட்பு இருந்தது. சிறுபான்மை முஸ்லிம்கள் கூட அத்வானி மீது கொண்டிருந்தது போன்று வாஜ்பாய் மீது ஆத்திரம் கொண்டிருக்கவில்லை. ஆனால், வாஜ்பாய் பிரதமராக இருந்த காலத்தில் குஜராத்தில் பி.ஜே.பி. ஆட்சியின் கீழ் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டது, அத்வானியிலும் பார்க்க வாஜ்பாய் மீது வெறுப்பை ஏற்படுத்தி விட்டது. குஜராத்தில் மாதக்கணக்கில் முஸ்லிம்கள் வேட்டையாடப்பட்டனர்.

காங்கிரஸ் கட்சி 1984 இல் இந்திரா காந்தி கொலையின் பின்பு சீக்கியர் மீது வன்முறையை கட்டவீழ்த்துவிட்டது. ஆனால், குஜராத் கலவரங்களை இவற்றுடன் ஒப்பிட முடியாது. ஒரு சில நாட்களே இந்த சீக்கியர் மீதான வன்முறை நடந்தது. இந்திராவைக் கொன்ற சீக்கிய மெய்ப்பாதுகாவலரை முன்னிட்டே உணர்ச்சிமயமான நிலையில் கொலைகள் நடந்தன.

எனினும், கொலையின்பின் ஒருமாதத்தில் நடந்த லோக்சபாத் தேர்தல்களில் சீக்கியர் வாக்களிக்க ஒரு தடையும் இருக்கவில்லை. ஆனால், குஜராத்திலோ கலவரம் நடந்து 9 மாதங்களின் பின்பு நடந்த தேர்தலில் கூட முஸ்லிம்கள் வாக்களிக்க முடியாமல் தடுக்கப்பட்டனர்.

உண்மையில்தேர்தல்நெருங்கும் சமயத்தில், குஜராத்தில் பதவியிலிருந்த பி.ஜே.பி. அரசு தோற்கும் என்ற பயத்தாலேயே திட்டமிட்டு வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. அரசு மாநிலத்தை முன்னேற்றவில்லை என வெறுப்புற்ற மக்களை திசை திருப்ப முஸ்லிம் விரோத உணர்வு பயன்படுத்தப்பட்டது.

கலவரத்துக்கு சிலமாதங்களுக்கு முன்னர்தான் நரேந்திரமோடி அங்கு முதல்வராக புதிதாக நியமிக்கப்பட்டிருந்தார். எல்லாம் திட்டமிட்டு நடத்தப்பட்டதோ என நினைக்க வைத்தது இதுவாகும்.


வாஜ்பாய்

2002 மாநில தேர்தலில் நரேந்திரமோடி அரசு குஜராத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அமோக வெற்றிகண்டது. முழுஇந்தியதேசமும் இதைக்கண்டு திகைத்து நடுங்கியது. நாடு முழுவதும் இதே பயப்பீதியை கிளப்பி வெல்வதற்கு ஒரு பரிசோதனையாகவே குஜராத்தில் முதலில் செய்து பார்க்கப்பட்டதோ என கலக்கம் ஏற்பட்டது. காங்கிரஸை பலகாலமாக விமர்சித்துவந்த ஹிந்து போன்ற பத்திரிகைகள் கூட நிலைமையை விளக்கி தமது கடமையை உணர்ந்து பி.ஜே.பியை எதிர்த்து எழுதித்தள்ளின. முஸ்லிம்கள், கம்யூனிஸ்ட்டுகள், பத்திரிகைகள், காந்தியவாதிகள் திராவிடர்கழகம் போன்ற கொள்கைவாதிகள் சகலரும் காங்கிரஸின் பின்னால் அணிதிரண்டனர். மோடியை பதவிநீக்க பி.ஜே.பியின் கூட்டாளியான ஆந்திர முதல்வர் நாயுடுவும் கோரினார்தான். எனினும் அதை முன்னிட்டு ஆளும் கூட்டணியிலிருந்து அவர் வெளியேறத்துணியவில்லை. மற்றக்கூட்டணிக் கட்சிகளோ அதுகூட செய்யவில்லை, வாழாவிருந்தன. அதற்கான விலையை தேர்தலில் கொடுத்தன. திடீரென்று நரேந்திரமோடி கதாநாயகரானார். வாஜ்பாயை கூட அவர் பிரபலத்தில் மிஞ்சினார். ஆனால், வாஜ்பாய் இப்போது ஒப்புக்கொள்வது போல இந்தக்கலவரங்களோ பி.ஜே.பிக்கு வினையானது.

1999 தேர்தலில் குஜராத்தின் 26 தொகுதிகளில் ஆறில் மட்டும் வென்ற காங்கிரஸ், 2004இல் 12 தொகுதிகளை வென்றதிலிருந்து மதவாதத்தால் மற்ற அடிப்படை பிரச்சினைகளை மறைக்கமுடியாது என்பது தெளிவானது. மக்களுக்கு வேண்டியது நல்லாட்சியே. பி.ஜே.பி இப்போது தோல்வியுற்றதற்கு கடும் போக்கு மதவெறியை கைவிட்டதே காரணமென ஆர்.எஸ்.எஸ். போன்ற இந்து அமைப்புக்கள் பி.ஜே.பியை சாடினாலும் பழுத்த அரசியல் பழமான வாஜ்பாய் உண்மையை கூறியுள்ளார். அதாவது சகல சக்திகளும் காங்கிரஸ் பின்னால் அணிதிரளக் காரணமான குஜராத் வன்முறைகளே பி.ஜே.பியின் அழிவுக்கு காரணம். அந்த உண்மையை அரசியல் சாணக்கியமிக்க வாஜ்பாய் சரியாகவே உணர்ந்துள்ளார்.

சர்வமத, சகல மக்களின் ஆதரவு ஆட்சியில் அமரமுக்கியம். இந்துவெறி என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் ஆதரவை மட்டுமே திரட்ட உதவும். மறுபுறம், கடந்த காலத்தில் பாபர்மசூதி இடிப்பதை தடுக்காத குற்றத்திற்காக முஸ்லிம்களின் வெறுப்புக்குள்ளான காங்கிரஸ் கட்சிக்கு முஸ்லிம்களை மீண்டும் வாக்களிக்கத் தூண்டியதும் குஜராத் வன்முறைகளே. ஏனெனில், பி.ஜே.பியை அழிப்பதற்கு காங்கிரஸ் ஒன்றே மார்க்கம் என முஸ்லிம்களை சிந்திக்க வைத்தது குஜராத் வன்முறைகள்.

கலவரம் பற்றிய வழக்குகளை கூட அதிவிரைவில் நடத்தி கொலையாளிகளை விடுவித்து சாட்சிகளை மிரட்டி நீதிதுறையையே கேலிக் கூத்தாக்கியது நரேந்திர மோடி அரசு.

இவை எல்லாம் தேர்தல் தோல்வியாக தன்னை வந்து சேர்ந்தது என வாஜ்பாய் சொல்வது நூறு வீதம் சரியே. கடும்போக்கு பி.ஜே.பி தலைவர்கள், தீவிர இந்து மதவாதத்துக்கு மீண்டும் போவதே பி.ஜே.பி செய்ய வேண்டியது எனச் சொல்லத் தொடங்கியுள்ள இந்நிலையில் வாஜ்பாய் அதற்கு எதிரான நிலைப்பாட்டை பகிரங்கமாக எடுத்துள்ளார்.

– எஸ்.சுரேந்திரஜித் –

---

# சிதறல்கள்

வெளவால்களுக்கு அடைக்கலம் கொடுக்கின்ற அந்தப் பிரமாண்டமான ஆலமரம் இன்னும் கம்பீரமாய் நிற்கின்றது. பாடசாலை முடிந்த கையோடு மாலை மூன்று மணியானால் மத்தியகல்லூரிக்குக் கிழக்கே கிளைபிரிகின்ற அந்த குக் கிராமத்து சிறார்கள் ஆலமரத்தடியில் ஒன்று கூடுவது வழக்கம்.

சுள்ளிகள் பொறுக்கி கல் வைத்து அடுப்பு மூட்டி, செங்கல் அரைத்து தூள் எடுத்து குளம்புக் கறி சமைப்பார்கள், இலை, தளிர் எடுத்து மரக்கறி சமைத்து மணல் வீடு கட்டி விளையாடும் அந்த பிஞ்சுகளின் மாலை நேர விளையாட்டு அக்கிராமத்தின் பண்பாட்டு வெளிப்பாடாகவே காணப்பட்டது.

இந்த மணல் வீடு கட்டி மண்சோறு, கறி சமைப்பதற்கெல்லாம் மாலதியும் புருசோத்தும் தான் மூத்த வழிகாட்டிகள் . பாடசாலை காலம் வரை ஒரே கலவன் பாடசாலையில் ஒன்றாகப் படித்தவர்கள். இருவரும் அயல் வீட்டுக்காரர்களும் கூட.

உயரம் பாய்வதிலே ஈடுபாடுடைய மாலதியும், புருசோத்தும் வருடாவருடம் நடைபெறுகின்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் எப்போதும் முதலாம் இடத்தையே பிடித்து விடுவார்கள். இத்தனைக்கும் அவர்களுக்கென பயிற்றுவிப்பாளர் எவரும் இருந்ததில்லை. புருசோத்தான் மாலதிக்குப் பயிற்றுவிப்பாளன்.

உயரம் பாய்தலுக்கென அவர்கள் விளையாட்டுப் பொறுப்பாசிரியரிடம் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்ட அன்றே பயிற்சியையும் தொடங்கிவிடுவர்.

ஒரளவு வளர்ந்து குலை குலையாய் காய் காய்த்து நிற்கும் இளம் தென்னை மரங்களில் ஒரு ஓலையை அப்படியே வெட்டி எடுத்து விடுவான் புருசோத்.

''டேய் இளம் மரத்தில ஓலைய வெட்டாத காய்க்கிற மரம்; ஒரு ஓலையை வெட்டினால் ஆறு மாதத்துக்கு மரத்துக்கு காய்ச்சல் காயும்'' என்று புருசோத்தின் அம்மா கட்டளை போட்டாலும்; அதை அவன் காதிலே வாங்காமல் செழிப்பான ஒரு ஓலையை வெட்டி வீழ்த்தி விடுவான். நடுத்தண்டிலே இருந்து இருபக்கமும் செல்லும் ஓலைகளை நான்கு அங்குலம் அளவில் மட்டையோடு அப்படியே இருக்க மிகுதியை வெட்டிவிடுவான்.

எஞ்சியிருக்கின்ற தண்டுடன் உள்ள நான்கு அங்குல ஓலையை அப்படியே வைத்துத் தண்டை நடுவாக இரண்டாகப் பிளந்து விட, அவை ஒரு எளிய உயரம் பாயும் கம்பங்களாக மாறிவிடும்.

அதற்குக் குறுக்குத் தடியாக; வேலியில் நிற்கின்ற கிளைசரியா ஒன்றை நேரிய தடியாகப் பார்த்துவெட்டி எடுத்தால் அது குறுக்குத் தடியாக மாறிவிடும்.

இவைகளை ஆலமரத்தடிக்கு எடுத்துச் சென்று சிரட்டையினால் மடு தோண்டி, கம்பங்களை ஒரே திசை நோக்கி நடுவர். குறுக்காக தடி வைத்து மாலதியும் புருசோத்தும் பயிற்சி செய்வர்.

மாலதி தவறி விழுகின்ற வேளைகளிலே புருசோத் அதற்கு விளக்கம் கொடுத்து பாய்ந்து காட்டுகின்ற முறையின்படி அப்படியே மாலதியும் கடைப்பிடிக்கும் போது அவள் தாண்டி விடுவாள்.

அப்போதெல்லாம் மாலதிக்கு புருசோத் மீது ஒரு நம்பிக்கைவருவதுண்டு; புருசோத்திற்கும் மாலதி தாண்டிவிடுவதில் ஒரு திருப்தி ஏற்படுவதுண்டு.

கிராமத்தின் அற்புதமான அந்த வாழ்க்கை முறையில் சனி, ஞாயிறு தினங்களென்றால் இன்னும் ஒருபடி மகிழ்ச்சி சேர்ந்துவிடும்.

கிராமத்திலே கேட்கின்ற சத்தங்கள் காற்றிலே கலக்கின்ற போது வேலிக்கட்டைகளிலே நிற்கின்ற ஓணான்கள் அந்த இரைச்சலைக் கேட்டு தலைகளை ஆட்டும். அந்த இரைச்சலுக்கு ஓணான்கள் போடுகின்ற தாளம் பார்ப்பதற்கு மிகவும் ரசனை அளிப்பதாக இருக்கும்.

இவைகளை காண்கின்ற மாலதியும் புருசோத்தும் பச்சை தென்னம் ஈக்குகளை எடுத்து நுனியிலே சுருக்கிட்டு அந்;5ச் சுருக்கை வேலிக்கட்டைகளிலே நின்று தலையாட்டும் சிவந்த கொழுத்த ஓணான்களின் தலையிலே லாவகமாய் இட்டு சுருக்கிழுத்துப் பிடித்து விடுவார்கள்.

அவற்றுக்கு புகையிலை கொடுத்து அது படுகின்ற பாட்டை பார்த்து; ''ஓணான் பேயாடுது'' என்று சொல்லி விளையாடிய விளையாட்டுக்கள் எல்லாம் இன்று மாலதிக்கும், புருசோத்திற்கும் கனவு போல் இருக்கின்றன.

அழகிய அவர்களுடைய கிராமத்து வாழ்கையிலே அன்று தான் விபரீதம் நடந்தது. அவர்களின் கிராமத்திலே முகாம் அமைத்திருந்த படையினர் மீது அன்று விடிகாலைப் பொழுதில் நடந்த விபரீதம் கிராமத்தவர்களை உடுத்த உடுப்புடன் உயிருக்




காய் தப்பி ஓட வைத்தது.

அவர்களின் கிராமத்து வரலாற்றிலே என்றுமே கண்டிராத விபரீதமான நாள் ஆகையால்; அவர்களுக்கு எப்படி நடந்து கொள்வதென்றே தெரியவில்லை. இது அவர்களுக்கு புதிய அனுபவம்.

யாரும் யாரைக் குறித்துமே சிந்திக்கவில்லை. ஐயோ; அம்மா! ஓடுங்க, ஓடுங்க என்ற அலறல் சத்தங்கள் மட்டுமே கிராமத்தை அதிர வைத்தன.

உயிருக்காய் தப்பி ஓடிய கிராமத்தவர்கள் இன்று தொடர்பறுந்த தொலைபேசிகளாக எங்கெங்கோ நாட்டின் நாலா திசைகளிலும் சிதறிச்சென்றுவிட்டார்கள். அயல் கிராமத்தில் இருந்த உறவுகளும், நண்பர்களும் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தனர்.

உடைமைகளை இழந்தவர்களாக அகதிகளாக ஆங்காங்கேவாழ்ந்து கொண்டிருந்தனர்.

ஆனாலும், அவர்கள் அடைக்கலம் புகுந்த இடங்களில் தமது பாடசாலைக்கல்வியை தொடர்வதை நிறுத்தவே இல்லை.

காலங்கள் வெகுவாகக் கரைந்துசென்று கொண்டிருந்தன. மாலதி ஒரு பத்திரிகை நிறுவனத்தில் பத்திரிகையாளராக பட்டப் படிப்பினை முடித்துக் கொண்டு இணைந்திருந்தாள்.

புருசோத்தும் கலைப்பட்டதாரியாகி ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தின் செய்திப் பிரிவில் இணைந்திருந்தான்.

அன்று தலைநகரிலே ஒரு பத்திரிகையாளர் மாநாடு நடைபெறுவதற்காக சகல ஊடகங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

பத்திரிகை நிறுவனத்திலிருந்து மாலதி அனுப்பப்பட்டிருந்தாள். தொலைக்காட்சி நிறுவனத்திலிருந்து அன்று புருசோத்தை அனுப்பியிருந்தனர்.

மாநாடு நடைபெற்றது. முடிந்தகையோடு படிக்கட்டு வழியாக இறங்கும் போது ஒருவரை ஒருவர் சந்தித்தனர்.

நீங்கள் புருசோத் தானே?

நீங்கள் மாலதிதானே?

இருவரின் கண்களும் குளமாகின. வெளவால்களுக்கு அடைக்கலம் கொடுக்கின்ற அந்தப் பிரமாண்டமான ஆலமரத்துக் கிராம நினைவுகள் மீண்டும் அவர்கள் உள்ளத்தில் வந்து அலை மோதிக்கொண்டிருந்தன.

# ஐரோப்பியக் கிண்ணத் தொடரை வெல்லப் போவது யார்!

கால்பந்து ரசிகர்களுக்கான ஓர் அற்புதமான திருவிழா தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஐரோப்பிய கண்டத்தில் உள்ள நாடுகள் பங்கேற்கும் ஐரோப்பிய கிண்ணக் கால்பந்துத் தொடர் போர்த்துக்கலில் தற்போது நடைபெற்று வருகின்றது.

உலகின் மிகப்பெரிய கால்பந்து



தொடராக ஐரோப்பியக் கிண்ணக்கால்பந்து தொடர் கருதப்படுகிறது. உலகக் கிண்ணக் கால்பந்து தொடர் போன்று 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுவதால் இதை 'மினி உலக கிண்ணக் கால்பந்து, தொடர் என்று கூட அழைப்பது உண்டு. இதில் ஐரோப்பாக் கண்டத்தை சேர்ந்த நாடுகள் மட்டுமே பங்கேற்கும் ஐரோப்பிய கால்பந்து தொடரை இம்முறை ஏற்று நடத்தும் பொறுப்பை போர்த்துக்கல் பெற்றுள்ளது.

இந்தத் தொடரில் மொத்தம் 16 அணிகள் பங்கேற்கின்றன . இந்த அணிகள் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு, 'சி' பிரிவு, 'டி' பிரிவு என நான்கு பிரிவுகளாகப்பிரிக்கப்பட்டுள்ளன.

*'ஏ' பிரிவில் – போர்த்துக்கல், ஸ்பெயின், கிரீஸ், ரஷ்யா அணிகளும்

*'பி' பிரிவில் – பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, குரோஷியா அணிகளும்

*'சி' பிரிவில் – ஸ்வீடன், டென்மார்க், பல்கேரியா, இத்தாலி அணிகளும்

*'டி' பிரிவில் – செக் குடியரசு, ஜெர்மனி, லத்வியா, ஹாலந்து அணிகளும் பங்கேற்கின்றன.

'ஏ' பிரிவு :–

இந்த பிரிவை பொறுத்தவரை வல்லமை மிக்க அணிகளாக ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகியவை விளங்குகின்றன. தொடரை நடத்தும் நாடு என்ற பெருமையோடு பங்கேற்கும் போர்த்துக்கல் தனது வெற்றிக்கு 'மிட் மத்தியகள வீரரான' லூயிஸ் பிகோவையே பெரிதும் நம்பி உள்ளது. இவரோடு பாலோட்டா, டியாகோ, டெக்கா, பாலோ பெரரா ஆகியோரையும் அணியின் நம்பிக்கைக்குரிய வீரர்களாக குறிப்பிடலாம். பிகோ கடந்த சில வாரங்களாக காயங்களால் பெரிதும் அவதிப்பட்டு வருகிறார். இதனால் முதல் கட்ட பயிற்சி முகாமில் இவரால் பங்கேற்க முடியவில்லை. 'மத்திய கள வீரரில்' வலுவான இவர் முக்கிய ஆட்டங்களில் விளையாட முடியாமல் போய்விட்டால் என்ன செய்வது என்ற கவலையில் போர்த்துக்கல் அணி இருந்து வருகிறது. முழு உடல் தகுதியோடு இருக்கும் பட்சத்தில் அணியில் இவரை தேர்ந்தெடுப்பதே போர்த்துக்கல்லுக்குச் சிறந்தது. மேலும் இந்தப் பிரிவில் காலிறுதிக்கு முன்னேற வாய்ப்புள்ள ஒரே அணி போர்த்துக்கல் என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுச் செய்திகள்!

'பி' பிரிவு :–

இந்த பிரிவில் அதிகபட்ச ரசிகர்களை கவர்ந்த ஆட்டமாக அமைந்தது இங்கிலாந்து – பிரான்ஸ் மோதலாகும். இந்தப் போட்டியில் பிரான்ஸ் அணி 2 – 1 என்ற ரீதியில் இங்கிலாந்தை வென்றது. 'கால்பந்து எதிரி'களான இவர்களின் மோதலை காண்பதற்காக இரு நாட்டையும் சேர்ந்த ரசிகர்கள் பலர் போர்த்துக்கல் வந்திருந்தனர். இந்த பிரிவில் காலிறுதிக்கு தகுதி பெறும் அணிகளாக இவை கருதப்படுகின்றன.

நடப்பு சாம்பியன் என்ற பெருமையோடு களமிறங்குவதால் தங்களால் ஜொலிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் பிரான்ஸ் இத்தொடரில் களமிறங்கியுள்ளது. இந்த அணிக்கு மிகப்பெரிய பலமே. அந்த அணியில் கோல் காப்பாளர்தான். எதிரிகளின் அசுரவேக தாக்குதலை எளிதாக சமாளித்து தடுக்கும் திறன் பெற்றவர். மேலும், 'அர்சனேஸ் கிளப்' அணிக்காக அற்புதமாக விளையாடி பல விருதுகளை பெற்றுள்ள தியரி ஹென்றியும் பிரான்ஸ் வசம் இருக்கிறார். இந்த தொடரில் வலுவான அணியாக இதைக் குறிப்பிடலாம்

'சி' பிரிவு :–

ஸ்வீடன், டென்மார்க், இத்தாலி என 3 வலுவான அணிகள் இந்தப்பிரிவில் உள்ளன. இதில் ஐரோப்பியக் கிண்ணக் தொடரின் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும் அணியாக இத்தாலியைத்தான் இந்த தொடரில் குறிப்பிடுகிறார்கள். கிறிஸ்டியன் வியரி, டெல் பியரோ, டோட்டி என்ற மூவர் கூட்டணி இத்தாலியின் இனிய வளர்ச்சிக்கு இமயமாக திகழ்கின்றனர். இவர்களில் பிரான்செஸ்கோ டோட்டி இந்த தொடரின் முடி சூடா மன்னன் எனவும் அழைக்கப்படுகின்றார்.

மேலும் இந்த பிரிவு நான்காவது நாடான பல்கேரியா ஒரு போட்டியை 'டிரா' செய்தாலே பெரிய விடயம்தான்.

'டி' பிரிவு :–

ஜெர்மனி, ஹேலாந்து ஆகிய இரு அணிகளும் இந்த பிரிவில் காலிறுதிக்கு தகுதி பெறுவதில் பெரிய அளவு சிரமம் இருக்கப் போவதில்லை. ஜெர்மனி அணிக்கு தூணாக அணித்தலைவரும் கோல் காபாளருமான ஒலிவர் கானை குறிப்பிடலாம். இவரை தாண்டி பந்துகோல் வளையத்துக்குள் சென்றால் அது பெரிய விடயம்தான். இவரோடு மைக்கேல் பொல்லக் பிரட்ரிக், ஹேமன், 'டைவ் மன்னன்' மிராஸ்லோவ் குளோஸ் ஆகியோரை ஜெர்மனியின் நம்பிக்கைக்குரிய வீரர்களாக குறிப்பிடலாம்.

அரையிறுதி சுற்றுக்குள் நுழைவதற்கு இந்த அணிக்கு எந்த பிரச்சினையும் இருக்கப்போவதில்லை. ஹோலந்து அணியில் நட்சத்திர வீரர்களாக யாரையும் குறிப்பிட முடியாது என்றாலும். அணியாக விளையாடுவதில் கை தேர்ந்தவர்கள். இந்த தொடரில் இவர்கள் தம் பங்குக்கு சிறப்பாக நிகழ்த்திக் காட்டலாம் மற்ற அணிகளான செக் குடியரசு, லாத்வியா ஆகிய அணிகள் சாதாரணமான அணிகளே.

இந்த ஐரோப்பியக் கிண்ணத் தொடருக்காக ஒவ்வொருபிரிவிலும் 'லீக்' சுற்று ஆட்டங்கள் நடைபெறுகின்றன தற்போது நடைபெறும் 'லீக்' சுற்று ஆட்டங்களின் படி ஒவ்வொரு பிரிவிலும் உள்ள 4 அணிகளும் தங்கள் பிரிவிலுள்ள ஒவ்வொரு அணியுடன் தலா ஒரு ஆட்டத்தில் மோதவேண்டும்.

ஒவ்வொரு பிரிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெறும். பின் காலிறுதியில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெறும்.

## ஐரோப்பியக் கிண்ணக் கால்பந்து அட்டவணை

### லீக் சுற்றுப் போட்டிகள்

| தேதி | போட்டி | இடம் | நேரம் |
|---|---|---|---|
| ஜூன்-12 | கிரீஸ்- போர்த்துக்கல் | போர்டோ | 9.25(இரவு) |
| | ஸ்பெயின்-ரஷ்யா | பரோ | 12.10(இரவு) |
| ஜூன்-13 | சுவிட்சர்லாந்து-குரோஷியா | லிரியா | 9.25(இரவு) |
| | பிரான்ஸ்-இங்கிலாந்து | லிஸ்பன் | 12.10(இரவு) |
| ஜூன்-14 | டென்மார்க்-இத்தாலி | கிமரெஸ் | 9.25(இரவு) |
| | சுவீடன்-பல்கேரியா | லிஸ்பென் | 12.10(இரவு) |
| ஜூன்-15 | செக்.. குடியரசு- லத்வியா | போர்டோ | 9.25(இரவு) |
| | ஜெர்மனி-ஹோலந்து | அவிரோ | 12.10(இரவு) |
| ஜூன்-16 | கிரீஸ்-ஸ்பெயின் | போர்டோ | 9.25(இரவு) |
| | ரஷ்யா- போர்த்துக்கல் | லிஸ்பன் | 12.10(இரவு) |
| ஜூன்-17 | இங்கிலாந்து-சுவிட்சர்லாந்து | காய்ம்பரா | 9.25(இரவு) |
| | குரோஷியா-பிரான்ஸ் | லிரியா | 12.10(இரவு) |
| ஜூன்-18 | பல்கேரியா-டென்மார்க் | பிராகா | 9.25(இரவு) |
| | இத்தாலி-சுவீடன் | போர்டோ | 12.10(இரவு) |
| ஜூன்-19 | லத்வியா -ஜெர்மனி | போர்டோ | 9.25(இரவு) |
| | ஹோலந்து-செக்.. குடியரசு | அவிரோ | 12.10(இரவு) |
| ஜூன்-20 | ரஷ்யா-கிரீஸ் | பரோ | 12.10(இரவு) |
| | ஸ்பெயின்- போர்த்துக்கல் | லிஸ்பன் | 12.10(இரவு) |
| ஜூன்-21 | சுவிட்சர்லாந்து-பிரான்ஸ் | காய்ம்பரா | 12.10(இரவு) |
| | குரோஷியா-இங்கிலாந்து | லிஸ்பன் | 12.10(இரவு) |
| ஜூன்-22 | டென்மார்க்-சுவீடன் | போர்டோ | 12.10(இரவு) |
| | இத்தாலி-பல்கேரியா | கிமரெஸ் | 12.10(இரவு) |
| ஜூன்-23 | ஹோலந்து-லத்வியா | பிராகா | 12.10(இரவு) |
| | ஜெர்மனி-செக்.. குடியரசு | லிஸ்பன் | 12.10(இரவு) |

### காலிறுதிச் சுற்று

| தேதி | போட்டி | இடம் | நேரம் |
|---|---|---|---|
| ஜூன்-24 | ஏ பிரிவு முதல் அணி- பி பிரிவு 2வது அணி | லிஸ்பன் | 12.10(இரவு) |
| ஜூன்-25 | பி பிரிவு முதல் அணி- ஏ பிரிவு 2வது அணி | லிஸ்பன் | 12.10(இரவு) |
| ஜூன்-26 | சி பிரிவு முதல் அணி- டி பிரிவு 2வது அணி | பரோ | 12.10(இரவு) |
| ஜூன்-27 | டி பிரிவு முதல் அணி- சி பிரிவு 2வது அணி | போர்டோ | 12.10(இரவு) |

முதல் அரையிறுதிப் போட்டியில், முதல் காலிறுதிச் சுற்றில் வெற்றி பெறும் அணி, நான்காவது காலிறுதிச் சுற்றில் வெற்றி பெறும் அணியுடன் மோதும். மற்றொரு அரையிறுதியில், இரண்டாவது காலிறுதியில் வெற்றி பெறும் அணி, மூன்றாவது காலிறுதியில் வெற்றி பெறும் அணியுடன் மோதும். முதல் அரையிறுதிப் போட்டி ஜூன் 30ம் தேதியிலும், அடுத்த அரையிறுதிப் போட்டி ஜூலை 1ம் தேதியிலும நடை பெறும். அரையிறுதியில் வெற்றி பெறும் அணிகள், ஜூலை 4ம் தேதி நடை பெறும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுகின்றன. அரையிறுதி, இறுதிப்போட்டிகள் அனைத்தும் இரவு 12.40 மணிக்கு நடை பெறுகின்றன.


## கட்டாரில் வேலைவாய்ப்பு

கட்டாரிலுள்ள மிகப்பெரியதொரு முன்னணி கம்பனிக்கு கீழ்க்காணபவர்கள் வேலைக்குத் தேவை

| Category | Quantity | Salary |
|---|---|---|
| Multi Skilled Operator | 3 | QR. 1400/= |
| Heavy Equipment Mechanic | 3 | QR. 1200/= |
| Aluminum Fabrication Helper | 15 | QR. 750/= |
| Welders | 5 | QR. 750/= |
| Carpenter/Bench Fitter | 10 | QR. 750/= |

ஒப்பந்த காலம்: 2 வருடங்கள்
வைத்திய வசதி: கட்டார் தொழிற்சட்டப்படி இலவச வைத்திய அட்டை வழங்கப்படும்
உணவு: சம்பளத்தில் உள்ளடக்கப்படும்.
விமான டிக்கட்: 2(இரண்டு) ஆண்டு ஒப்பந்த காலம் முடிவுற்றதும் வழங்கப்படும்
விடுமுறை: ஒப்பந்தம் முடிவுற்றதும்
தகுதிகாண் காலம்: 90 நாட்கள்
வேலை நேரம்: 8 மணித்தியாலம் (வாரம் 6நாள்)
தங்குமிட வசதி: அல் வாஹ் டிரான்ஸ்போர்ட்
பாஸ்போர்ட், புகைப்படம் சகிதம் நேரில் வரவும்.

Rocky's Management (Pvt) Ltd.
1444/B, 1/1, Kotte Road, Rajagiriya.
Contact for Details on : (011) 2863386, 2871669

பொதுசன நூலகம்



## மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

# மலையகத்தில் ஏன் இந்த டென்ஷன்?

மாகாணசபைகளுக்கான தேர்தல் இப்போது மலையகத்தில் பெரும் சூடு பிடித்திருக்கிறது. இந்தச்சூட்டில் குளிர்காய்பவர்களும்இருக்கின்றனர். சூடு போட்டுக்கொள்ளப் போகின்றவர்களும் இருக்கின்றனர்.

மலையகத் தொழிலாளர்கள் என்ன அவ்வளவு ஞாபக மறதிக்காரர்களா? இல்லவே இல்லை. ஒவ்வொரு வேட்பாளரின் கடந்த கால வாக்குறுதிகளை கையில் வைத்துக் கொண்டு கேள்வி கேட்கத் தலைப்பட்டுவிட்டனர்.

முன்பு வாரிவழங்கிய வாக்குறுதிகளையும், செய்துகொடுப்பதாகக் கூறிய செயல் திட்டங்களையும் வாக்காளர்கள் வெகு கவனமாகப் பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றனர்.

புதிய கொள்கைத்திட்டங்களுடனும், வாக்குறுதிகளுடனும், அழகான படங்களுடனும் வரும் வேட்பாளர்களிடம், ''ஐயா புதுசு எல்லாம் இருக்கட்டும். ஐந்து வருடங்களுக்கு முன்பு நீங்கள் அச்சடித்துக்கொடுத்தவை இவை. இவற்றில் எதை எதைச் செய்துள்ளீர்கள்? ஏதாவது ஒன்றையாவது செய்து வைத்திருக்கிறீர்களா? இப்போது மீண்டும் வாக்குக் கேட்க வந்துள்ளீர்களே? வெட்கம் இல்லையா?

சிறு சிறு உதவிகளுக்கும் கமிஷன் அடித்தீர்கள். கேவலம் பாடசாலைக் கட்டடங்களுக்குக்கூட கொந்தராத்துக்காரர்களிடம் கமிஷன் கேட்டீர்கள்.

கோயில்களுக்கு பூஜைப்பொருட்களை வழங்குகிறேன் என்று கூறிக்கொண்டு அந்தப் பொருட்களை விநியோகிக்கும் கடைக்காரரிடமும் கமிஷன் அடித்தீர்கள். நீங்கள் அடித்த கமிஷன்களையெல்லாம் சேர்த்தால் கூட இந்தத் தோட்டத்துக்கே நல்ல குடிநீர் வசதியை ஏற்படுத்திக்கொடுத்திருக்க முடியும். உங்களுக்கு சோடா வைக்கவும், மாலை போடவும் தயாராக நாங்கள் இல்லை'' என்று கேட்க மலையக இளைஞர் சமூகம் தயாராகிவிட்டது.

என்ன, இதை வாசிக்கும்போது வேட்பாளர்களுடைய முகங்கள் ஏன் இப்படிச் சிவப்பேறுகின்றன. உடம்பு வியர்க்கிறது. சாடையாக நடுக்கமும் ஏற்படுகிறது.

ஏன் இந்த டென்சன்? அது தேவை இல்லையே! மக்களுக்கு சேவை செய்வதாகக் கூறிக்கொண்டு வந்த நீங்கள் மக்களுக்கு சேவை செய்திருந்தால் உங்களுக்கு இந்த டென்சன் வரவேண்டிய அவசியமே இல்லை.

இன்னும் 5 வருடங்களுக்குப்பின்பு தானே மீண்டும் வரப்போகிறோம். நாம் சொல்வதை எல்லாம் நினைவில் வைத்துக்கொண்டா இவர்கள் இருக்கப்போகின்றார்கள். அப்போது சமாளித்துக்கொள்வோம் என்ற அசட்டுத் தைரியம் இருந்தால் நீங்களும் டென்சன் அடையத் தேவை இல்லை. ஏன் என்றால் உங்களுக்குத்தான் சூடு சொரணையே இல்லையே! தாராளமாகச் சொல்லலாம். சன்மானங்களையும்சொத்துக்களையும் தாராளமாக வாங்கிக் கட்டிக்கொள்ளத் தயாராகவே செல்லுங்கள்.

மலையக மக்கள் நன்றி உடையவர்கள். நன்றி மறக்காதவர்கள். நன்றிக்கடன் தீர்க்கப் பின்நிற்கமாட்டார்கள்.

மக்கள் சேவை செய்த [illegible] தொண்டர்களுக்கு மாலை மரியாதைகள் உண்டு. அவர்களின் வாக்குகளும் உண்டு. எனவே, வழமைபோல் நீங்கள் தாராளமாகச் சொல்லலாம். நீங்கள் அவர்களை மறக்கவில்லை. அவர்களும் உங்களை மறக்கவில்லை.

இப்படிப் பல்வேறு வகைப்பட்ட வேட்பாளர்கள் இப்பொழுது மலையக மக்களுக்கு இல்லை,இல்லை அவர்களுடைய வாக்குகளுக்கு வலை விரித்துக்கொண்டு அலைகின்றனர். என்ன செய்வது? அது அவர்களுடைய தலைவிதி. அதை மாற்ற வென்றாலும் முடியாது.

ஆனால், இன்றைய மலையக இளம் சமுதாயம் இந்த பம்மாத்துப் பேர்வழிகளின் தலைவிதிகளை மாற்றி அமைக்கத் தயாராகிவிட்டது. ஆகவே, அதற்கு முகம் கொடுக்கத் தயாராகவே வாக்குக்கேட்கச் செல்லுங்கள்.

வேட்பாளர்களே! இம்முறை உங்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இது ஜூன் மாதம் என்பதையாவது நினைவில் வைத்திருக்கின்றீர்களா? இல்லை என்றால் ஒன்றை ஞாபகப்படுத்துகின்றேன்.

தேர்தல் முடிவுகள் உங்களை முக்காடு போடவைத்த பின்பு வழமையாக நீங்கள் வைக்கும் ஒப்பாரிதான் அது.

வாக்காளர் இடாப்பில் பெயர்கள் வெட்டப்பட்டுள்ளன. வாக்குகளும், தகுதி உடையவர்களின் பெயர்களும் பதியப்படவில்லை. அதுதான் எனக்குகிடைக்க வேண்டிய வாக்குகள் இல்லாமல் போய்விட்டன. இல்லை என்றால் எனக்குத்தான் வெற்றி என்று இல்லாத மீசையை முறுக்குவீர்களே! அதைக் கூடவா மறந்துவிட்டீர்கள்.

வழமை போல் வாக்காளர் இடாப்புகளை திருத்தும் பணிகள் இப்பொழுது ஆரம்பித்துவிட்டன. கிராமசேவகர்கள் வாக்காளர்களைப் பதியும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பொழுது மலையகத்தில் நாடற்றவர்கள் என்றோ, அல்லது பிரஜா உரிமை இல்லாதவர்கள் என்றோ எவருமே இல்லை. எல்லோரும் இலங்கையர்கள் என சட்டபூர்வமான அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. அதாவது உங்களுக்குத் தெரியுமா? இல்லை என்றால் இப்போதாவது தெரிந்துகொள்ளுங்கள்.

வாக்கு வேட்டையாட தோட்டம் தோட்டமாக, வீடு வீடாகச் செல்கின்றீர்கள் அல்லவா? இது உங்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம்.

வீடு வீடாகச் செல்லும்போது உங்களுடைய பெயர்களைப் பதிந்துவிட்டீர்களா? எனக் கேளுங்கள். வயது வந்த பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், அடையாள அட்டைகள் என்பனவற்றை எடுத்துப் பாருங்கள்.

சம்பந்தப்பட்ட குடும்பத் தலைவர்களை கிராமசேவக அதிகாரிகளிடம் அழைத்துச் செல்லுங்கள். அவர்களுடன் உடன் இருந்தே அவர்களின் பெயர்களை வாக்காளர் இடாப்பில் கட்டாயமாகப் பதியச் செய்யுங்கள். அந்தக் குடும்பம் உங்களுக்கு நன்றி உடையதாய் இருக்கும். உங்களுடைய அரசியல் வாழ்க்கையில் ஏதாவது ஒரு நன்மையை செய்த புண்ணியமாவது கிடைக்கும். இதையாவது செய்வார்களா இந்த வேட்பாளர்கள்.

ஆனாலும் கூட இந்த வேட்பாளர்கள் நாளை கிடைக்கப்போகும் நன்மைகளைப் பற்றி சிந்திக்க மாட்டார்கள். இம்முறை வாக்காளர் இடாப்பில் வாக்கு வேட்டையாடுவார்கள்.

நம்மைப்பற்றி நாம்தான் சிந்திக்க வேண்டும். உங்களிடம் எவரும் பிரஜா உரிமை சான்றிதழ்களை கேட்கமுடியாது. அவர்களுக்குத் தேவை உங்களுடைய பிறப்பு அத்தாட்சிப்பத்திரமும், தேசிய அடையாள அட்டையும்தான்.

எனவே, உங்கள் குடும்பத்தவர்களின் பெயர்களைக் கட்டாயமாக வாக்காளர் இடாப்பில் பதிந்துகொள்ளுங்கள். வருடா வருடம் ஜூன் மாதத்தில் மட்டுமே வாக்காளர்களைப் பதியும் நடவடிக்கைகள் நடைபெறும். இல்லையேல் அடுத்த வருடம் வரை காத்திருக்க வேண்டும். உடனடியாக தாமதமின்றி உங்கள் கிராமசேவக அதிகாரிகளைச் சந்தித்தே ஆக வேண்டியதைச் செய்து கொள்ளத் தவறிவிடாதீர்கள்.

---



# டேஸ்ட்கடை தணிகாசலம்

தணிகாசலம் அண்ணன் நீண்ட காலத்துக்குப்பின்பு கலஹாவுக்கு வந்திருக்கின்றார். அதுவும் கூட அன்று கண்டியில் பஸ் ஸ்ரைக் என்பதால் திரும்ப வழி இல்லை. அதனால் பழைய நண்பர்களின் ஞாபகம் வரவே கலஹாவுக்கு கிளம்பிவிட்டார்.

அடே அப்பா, எவ்வளவு மாற்றங்கள்! எத்தனை சீரழிவுகள்!! இலங்கையிலேயே தரமான தேயிலையை உற்பத்தி செய்யும் ஒரு பிரதேசமாக விளங்கிய கலஹா ஒரு சிறிய வனம் போலவே காட்சி அளிக்கிறது.

அழகான தேயிலை மலைகளைக் காணோம். தலை நிமிர்ந்து நின்ற தேயிலைத் தொழிற்சாலைகளைக் காணவில்லை. செடிகளும், புல்லுகளும் மண்டிய பற்றைக் காடாகவே காணப்பட்டது.

பஸ்ஸைவிட்டு இறங்கிய தணி அண்ணன் கலஹா தோட்டத்தை அடையாளம் காண முடியாமல் சற்று யோசனையுடன் நின்றார். அப்போது தூரத்தே இரண்டு பெண்கள் வேலை முடிந்து வருவதைக் கண்டார். தணி அண்ணனுக்கு ஆச்சரியம். தன்னந்தனியாக இரண்டு இளம்பெண்கள் வருகின்றார்களே என்று வியந்தார். அவர்களும் கிட்ட வந்துவிட்டனர்.

இரண்டு பிள்ளைகளும் கூட தைரியமானவர்கள் தான். தணிகாசலம் அண்ணனைக் கண்டதும் அவர்களே பேச்சை ஆரம்பித்துவிட்டனர்.

''என்னங்க ஐயா, ஊருக்கு புதுசா இருக்க மாதிரி தெரியுது. தனியா நின்று கொண்டு யோசிக்கிறீங்க'' என்றனர்.

''ஆமாம், தங்கச்சி இப்ப நான் ஊருக்குப் புதுசு தான். ஆனால் நான் பிறந்து வளர்ந்ததே இந்த கலஹா தோட்டத்தில தான். இப்ப அந்தத் தோட்டத்தையே கண்டுபிடிக்க முடியாம யோசிக்கிறேன்'' என்றார் தணி அண்ணன்.

''ரொம்பச் சந்தோசங்க ஐயா, பழைய மனிதர் ஒருவரைப் பார்த்தது. இப்ப நீங்க சரியான இடத்தில தான் இறங்கி இருக்கீங்க. இது தான் கலஹா தோட்டம்'' என்றனர் அவ்விருவரும்.

''என்னம்மா இது. எவ்வளவு சீரும் சிறப்புமா இருந்த தோட்டம் இப்படிச்சீரழிஞ்சுபோச்சி. தேயிலையையும் காணோம். ஸ்டோரையும் காணோம். ஒரே காடா இருக்கு'' என்று வியப்புடன் கேட்டார் தணி அண்ணன்.

''ஆமாங்க ஐயா, நீங்க சொல்லுறதும் சரிதான். எங்க பரம்பரையே இந்தத் தோட்டத்தில தான் கொட்டை போட்டு இருக்காங்க. ஆனால் இப்ப மாடு கிடந்த இடத்தில முடியைக்கூடக் காணோம்னு சொல்ற கதையாப் போச்சு!'' என்றனர் இரு பெண்களும்.



''என்னம்மா இது பெரிய அநியாயமா இருக்கு. இந்தத் தோட்டத்துக்கு என்னம்மா நடந்தது? வேலைசெய்த ஆட்கள் எல்லாம் என்ன ஆனாங்க.'' என்று கேட்டார் தணி அண்ணன்.

''அந்த வயிற்றெரிச்சலை ஏங்க ஐயா கேட்கிறீங்க? தோட்டம் நல்லாத் தான் இருந்திச்சு. மொதல்ல இந்தத் தோட்டத்தை குத்தகைக்குக் கொடுக்கப்போகிறோம் எண்டாங்கள். யூனியன் காரவுங்களும் அப்படியே சொன்னாங்க. பொறவு பார்த்தா ஒரு தனியார் மொதலாளிக்கு வித்துப்புட்டாங்க'' என்று நிறுத்தினர் அப் பெண்கள்.

''என்னம்மா இது கொடுமையா இருக்கு. குத்தகைக்குக் கொடுக்கிறோம் என்று சொல்லி வித்துப்புட்டாங்களா? அப்படீன்னா அங்க வேலை செய்த ஆளுங்களோட பிராவிடன் பண்டு பணம் மத்த சேவைக்காலப் பணம் எல்லாம் என்ன ஆச்சி.''

''சரியாக் கேட்டீங்க ஐயா. யூனியன்காரவுங்க வந்தாங்க. ஸ்ட்ரைக் அடிக்கச் சொன்னாங்க. கடைசியில பசியும் பட்டினியும் தான். அரசனை நம்பி புருஷனை கைவிட்ட கதையாய்ப் போச்சி'' என்று அலுத்துக் கொண்டனர் அப் பெண்கள்.

''அப்படீன்னா யூனியன் காரவுங்களை நம்பியதைவிட மொதலாளிமாரை நம்பி இருக்கலாம் போல இருக்கு என்று சொல்றீங்களா?'' என்று கேள்வியைத் தொடுத்தார் தணி அண்ணன்.

''அது கூட ஒருவழியில சரியாத்தான் படுது. மொதல்ல தோட்டந்தை அரசாங்கம் எடுத்திச்சி. அரசாங்கம் எடுத்த பின்பு நிலைமை இன்னும் மோசமாப் போச்சி. வந்த துரைமாரும் அதிகாரிகளும் உள்ளதை எல்லாம் சுரண்டிக்கிட்டு தோட்டத்தையும் உட்டுப்புட்டு ஓடிட்டாங்க'' என்றனர்.

''என்னடா இது, அப்ப ஆளுங்களுக்கும் அவுங்களுக்கு சேர வேண்டிய பணம், மற்றக் கொடுப்பனவுகளுக்கு யார் பொறுப்பு'' என்று கேட்டார் தணி அண்ணன்.

''என்னங்க ஐயா எல்லாத்துக்கும் அந்த ஆண்டவன் தான் பொறுப்பு. இப்ப பாருங்க. இங்கே துரைமாரும் இல்லை. நிர்வாகமும் இல்லை, நாங்களே கொழுந்தை எடுத்து அதுக்கு காசு வாங்கி பிழைப்பை ஓட்டுகிறோம்'' என்றாள் ஒருபெண்.

அப்போது இடைமறித்தாள் மற்றவள். நாங்க கஷ்டப்பட்டு கொழுந்தைப் பறித்துக் கொண்டுவந்து கொடுத்தா, அதை முன்னுக்கு நின்று சேர்த்துக்கொடுப்பவர்களும் எங்கள் வயித்துல அடிச்சுப்புடுறாங்க'' என்றாள்.

''என்னம்மா இது. வெளக்குக்குப் பயந்து எண்ணெய்க் கொப்பறையில் விழுந்த கதையா இருக்கே'' என வியந்தார் தணி அண்ணன்.

''அது உண்மை தாங்க அண்ணே! இப்ப நாங்கஎல்லோரும் இந்தத் தோட்டத்தை ஆளுக்கு இரண்டு ஏக்கர் வீதம் பிரித்துக்கொடுக்கும்படி போராட்டம் நடத்துகிறோம். அது மட்டும் சரி வந்துட்டா எங்க கஷ்டம் எல்லாம் தீர்ந்து போகும்'' என்றனர் அப் பெண்கள்.

''நீங்க சொல்றதும் சரிதான். தேயிலை நட்டு உரம்போட்டு பாதுகாக்க நமக்கு வசதிபோதாது. ஆனால் காய்கறி, பழவகை, ஏலம், கிராம்பு, கொக்கோ போன்ற பயிர்களை வளர்க்க முடியும். அதன் மூலம் நல்ல வருமானம் பெறவும் முடியும் இல்லையா'' என்றார் தணி அண்ணன்.

''ஆமாங்க அண்ணே அப்படித்தான். நாங்களும் நினைத்திருக்கோம்'' என்றனர் அந்த இரண்டு பெண்களும்.

''ரொம்ப சந்தோஷம் அம்மா. ஆனால் ஒங்கள மாதிரி விவரம் தெரிஞ்ச பொண்ணுக ஒங்க அப்பா , அம்மாமாருக்கு புத்தி சொல்லணும். இப்பவே சில தோட்டங்கள்ள வீடு கட்டக்கொடுத்த ஏழு பேர்சஸ் காணியைக் கூட விற்று தின்னுப்புட்டு நடுத் தெருவில நிக்கிறாங்க. அப்படி ஒரு நிலைமை உங்களுக்கு வரக்கூடாது'' என்றார் தணி அண்ணன்.

''ரொம்ப நல்ல ஐடியாவைக் கொடுத்து இருக்கீங்க. அது சரி. இப்ப எங்க போகனும். யார் வீட்டுக்குப்போகனும்'' என்றாள் ஒருத்தி.

தணி அண்ணனும் ஏதோ ஒரு பெயரைச் சொல்லி அந்தக்கங்காணியார் வீட்டுக்குத் தான் போகனும் என்றார்.

''அடி ஆத்தே அது தான் எங்க அப்பா. நல்லதாப்போச்சு. எல்லாரும் சொந்தக்காரவுங்களாயிட்டம். வாங்க போவோம்'' என்று அந்தப் பெண்கள் வழிகாட்ட தணி அண்ணன் பயணத்தை ஆரம்பித்தார்.

# தமிழ் மன்றத்தின் ஊசி இலை துளிர் அறிமுக விழா


தயா லோகதாசன் முதல்சிறப்புப் பிரதியை வழங்குகிறார்

சுவிற்சர்லாந்தில் லூட்சேர்ன் மாநிலத்தில் 14 வருடங்கள் தமிழ் மக்களுக்காக சேவையாற்றிவரும் தமிழ் மன்றத்தின் விழா மண்டபம் கடந்த 29 ஆம் திகதி மாலை 4.00 மணி முதல் ஆரவாரப்பட்டுக் கொண்டிருந்தது. கலை, இலக்கியத்துறை ஆர்வலர்கள் வருகை தந்த வண்ணம் இருந்தார்கள். வணக்கம் வாருங்கள் என்ற அழைப் பொலிகளும் வருகைதந்திருந்தவர்களின் உரையாடல் ஒலிகளும், அங்கங்கே சிரிப் பொலிகளும் கேட்டுக் கொண்டிருந்தன.

பெற்றோர், ஆசிரியர், இளந்தலைமுறை உறவுகளின் உணர்வுகளைத் தாங்கி வெளிவரும் ''ஊசி இலை'' அரையாண்டு சஞ்சிகையின் துளிர் அறிமுகவிழாவுக்கு அழைக்கப்பட்டிருந்த அனைவரையும் உள்வாங்கி, ஊசிஇலை ஆசிரியர் குழுவைச் சேர்ந்த லா. சண்முகராஜா நிகழ்வுகளை தொகுத்துவழங்கினார். 4.30 மணிக்கு சாயி ரேடேஸ் ரவி அவர்களும், ரெமி கிறடிற் நந்தன் அவர்களும் மங்கள விளக்கினை ஏற்றி விழாவினை ஆரம்பித்து வைத்தனர். இரு நிமிட அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து ஊசிஇலை ஆசிரியர் குழுவைச் சேர்ந்த கு.சுரேஸ்குமார் அவர்களின் வரவேற்புரை இடம்பெற்றது.

வளர்ந்த இளந் தலைமுறை இசைக் கலைஞர்கள் ரூபன், ருக்சன், சுதன் ஆகியோரின் 15 நிமிட வயலின் சோலோக் கச்சேரி தூய்மையான மன உணர்வை உண்டாக்கியது. ஆசியுரையை தமிழ் மன்றத்தின் தலைவர் சு.சண்முகதாசன் வழங்கியதைத் தொடர்ந்து ஊசி இலை துளிர் வெளியீடு இடம்பெற்றது. ஊசி இலை கணினி வடிவமைப்புக் குழுவைச் சேர்ந்த தயா லோகதாசன் முதல் சிறப்புப் பிரதியை வழங்க, தமிழ் மன்றத்தின் தலைவர் சு.சண்முகதாசன் அதனை பெற்றுக் கொண்டார்.



இவ்விழாவில் கலந்து சிறப்பித்த இந்திய விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் செயலாளர் திருமாவளவன் ''ஆவணப்படுத்தலில் ஈழத்தமிழர்களை எவரும் விஞ்சிவிட முடியாது. விடுதலைப் புலிகள் போரை ஆவணப்படுத்தியதே இதற்கு சிறந்த உதாரணம். அதே போல் உங்கள் புலம்பெயர் வாழ்வினை ஆவணப்படுத்தும்நோக்கோடு ஆரம்பித்திருக்கும் ஊசி இலை அரையாண்டு சஞ்சிகையின் துளிர் அறிமுக விழாவில் கலந்து கொள்வதை பெருமையாகக் கருதுகிறேன். வெறுமனே வர்த்தக நோக்கோடு இயங்கும் சஞ்சிகைகளைத் தவிர உயர் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்டு வெளிவரும் சஞ்சிகைகள் இடையில் நின்றுவிடுவது உண்டு. அவ்வாறு அல்லாது ஊசிஇலை தொடர்ந்து வெளிவரவேண்டும் என்று வாழ்த்துகிறேன்'' என்றார்.

'வணக்கம்' ஜேர்மன் மொழிப் பத்திரிகை நிர்வாக ஆசிரியர் அன்ரன் பொன்ராசா தமிழ் மன்றச் கல்விப் பொறுப்பாளர் நா.ரஞ்சன், விமர்சகர் புண்ணியமூர்த்தி, கவிஞர் அருளானந்தம், எழுத்தாளர் கல்லாறு சதீஸ் ஆகியோரது வாழ்த்துரைகளும், ஆசிரியர் நிர்மலா, ஆசிரியர் முருகவேள், மாணவர்கள் சுரேந்தினி, ருக்சன், நிதர்சனா ஆகியோரின் சஞ்சிகையின் தேவைபற்றிய சிற்றுரைகளும் இடம்பெற்றன.

தொடர்ந்து இந்திய விமர்சகர், எழுத்தாளர் சி.அண்ணாமலை அவர்களின் வாழ்த்துச்செய்தியை ஊசிஇலை ஓவியர் வாவி பாஸ்கர் வழங்க, ஊசி இலை ஆசிரியர் குழுவைச் சேர்ந்த ஏ.ஜி. யோகராஜா தொகுப்புரையில் சஞ்சிகையின் நோக்கை விரிவாக விபரித்தார்.

சிறப்புப் பிரதிகளை ஊசி இலை நிர்வாக ஆசிரியர் ச.கலைச்செல்வன் அவர்களும் ஊசி இலை சஞ்சிகைக் குழுவினரும் வழங்கி சிறப்பித்தனர். நன்றியுரையை ஊசி இலை ஓவியர் கே.எம்.ரி.பாலகுமார் வழங்க துளிர் அறிமுகவிழா இரவு 7.30 மணியளவில் நிறைவடைந்தது.

கனதியான, தேவையான ஒரு சஞ்சிகையாக ஊசிஇலை அமைந்திருப்பதாக சிறப்புப் பிரதிகளை பெற்றுக்கொண்ட ஆர்வலர்கள் தெரிவித்ததுடன், புத்தக வெளியீட்டு விழாவில் இனியமையான இசையை ரசித்த முதல் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டதையும் மகிழ்வுடன் குறிப்பிட்டார்கள்.

புலம்பெயர் வாழ்வியலின் சிக்கல்களை, உணர்வுப் பதிவுகளைத் தன்னகத்தே உள்ளடக்கி, மூன்று தலைமுறை உறவுகளின் ஒரு தளமாக பிரசவிக்கும் ஊசிஇலை சஞ்சிகையின் பிரதான இலக்கு குழந்தைகளின் திறமைகளை வெளிக்கொணர்வதாகவே அமையும் என்பது தெளிவாகத் தெரிகிறது. தனியே சுவிஸ் தமிழர்களிற்கான சஞ்சிகையாக அல்லாது உலகெங்கும் பரந்திருக்கும் தமிழருக்கான ஒரு சஞ்சிகையாகவே இது காணப்படுகிறது.

சுவிஸிலிருந்து
நல்லைக்கணபதி


தமிழகம், திருக்கோயிலாய பாரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தில் அண்மையில் இலங்கைப் பண்ணிசைவாணர் கலைபூஷணம் தேவார இசைமணி - தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தனுக்கு கௌரவிப்பு நிகழ்வு இடம் பெற்றது. திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம், சீவசார் சீ. சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், கலைபூஷணம் திருஞானசம்பந்தனுக்கு பட்டாடை போர்த்திப் பாராட்டிதழ் வழங்கிப் பொன்னாடை அணிவித்துப் பொற்கிளி வழங்கி அருளாசி வழங்கிய போது எடுத்தபடம். திருவாவடு துறை ஆதீனம் கௌரவித்த இலங்கையின் முதலாவது பண்ணிசைவாணர் இவர்.

பதுளை டஸ்கொட் நிலையத்தினரின் அனுசரணையில் நடைபெற்றசுவதேசமணிர் தின கொண்டாட்டத்தில் காக்கொல்லை திருமணமுக. கலா மன்றசிறுவர்களின் ''பாரையும் நரியும்'' என்றசிறுவர்நாடகத் தில்ஒருகாட்சி.

(க--182)









கலை இலக்கிய வட்டம் மாத முற்பகுதியில் யாழ். நாவலர் மணி மண்டபத்தில் பரிசளிப்பு விழா நடத்தியது. விழாவில் ஆறுதிருமுருகன் உரை நிகழ்த்துவதையும், கண்டி தமிழ்ச்சங்க செயலாளர் அந்தனி ஜீவா மலையக எழுத்தாளர்களின் ஒரு தொகை நூல்களை யாழ். பொது நூலகத்துக்கு வழங்குவதையும் படங்களில் காணலாம். (க)

# உங்களாலும் முடியும்!




மேலே உள்ள அட்டவணையின் கடைவெளியில் வரவேண்டிய எழுத்துக்களைக் கண்டு பிடித்து எழுத முடியும்? (உதாரணம்: TREE) உங்களால் கண்டுபிடிக்கப்படும் சொற்களை நீங்கள் ஓர் தபால் அட்டையில் எழுதி எமக்கு அனுப்பலாம். அதிகூடிய சொற்களை எழுதும் மூவருடைய பெயர் விபரங்கள் இச் சிறுவர் பகுதியில் பிரசுரிக்கப்படும். கடந்த வாரம் வெற்றி பெற்றோரது பெயர்: 1) சுகந்தன், நிம்புட்டுவ. 2) க.தனுராஜ், தரம் 09, கோப்பாய் கந்துக் கல்லூரி. 3) த.மீரா, புதுமடம், உடுவில். 4) தி.அமலன், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். 5) க.முகுந்தன், தரம் 8, வ/ வவுனியா மத்திய மகா வித்தியாலயம்.

அனுப்ப வேண்டிய முகவரி:

"சிறுவர் பகுதி"
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# சிறார்களின் சிந்தனைக்கு

திலகன் என்பவர் ஒரு கூடையில் முட்டைகள் கொண்டு போகிறார். ஆனால், அவருக்கு எத்தனை முட்டைகள் இருக்கின்றன என்று தெரியாது. எதிரே ஜெயக்குமார் என்பவர் வந்து தவறுதலாக முட்டைகளைத் தட்டி விழுத்திவிட்டார். இதனால், திலகனின் கையில் இருந்த முட்டைகள் விழுந்து உடைந்து விட்டன. கோபமடைந்த திலகன் நீதிமன்றம் சென்று நடந்ததை சொன்னார். நீதிவான் கேட்டார் எத்தனை முட்டைகள் வைத்திருந்தாய் என்று.

அதற்கு திலகன் சொன்னான்.

1. இரண்டால் பிரிக்கும் போது ஒரு முட்டை மிஞ்சும்.
2. மூன்றால் பிரிக்கும் போது ஒரு முட்டை மிஞ்சும்.
3. நான்கால் பிரிக்கும் போது ஒரு முட்டை மிஞ்சும்.
4. ஐந்தால் பிரிக்கும் போது ஒரு முட்டை மிஞ்சும்.
5. ஆறால் பிரிக்கும் போது ஒரு முட்டை மிஞ்சும்.
6. ஆனால் ஏழால் பிரிக்கும் போது மட்டும் முட்டைகள் சமனாக இருக்கும்.

முட்டையிகளின் தொகை எத்தனை என்பதை நீதிவான் கணக்கிட்டு திலகனிடம் சொன்னார்.

திலகன் கொண்டு வந்த முட்டைகளின் எண்ணிக்கை எத்தனை? சிந்தித்து கண்டு பிடியுங்கள். முடியாவிட்டால் மட்டும் கீழே உள்ள விடையைப் பாருங்கள்.

திலகன் கொண்டு வந்த முட்டைகளின் எண்ணிக்கை 301

1. 301 + 2 = 150 + 150 = 300 = 1 மீதி.
2. 301 + 3 = 100 + 100 + 100 = 300 = 1 மீதி.
3. 301 + 4 = 75 + 75 + 75 + 75 = 300 = 1 மீதி.
4. 301 + 5 = 60 + 60 + 60 + 60 + 60 = 300 = 1 மீதி.
5. 301 + 6 = 50 + 50 + 50 + 50 + 50 + 50 = 300 = 1 மீதி.
6. 301 + 7 = 43 + 43 + 43 + 43 + 43 + 43 + 43 = 301.

# கணினி அறிமுகம்

கணினியின் தந்தை பேராசிரியர் பாவேஜ் என்பவர். கணினி கற்கும் ஒருவர் கணினியின் பாகங்கள் பற்றி ஓரளவு ஆரம்ப அறிவை பெற்றிருத்தல் வேண்டும்.

கணினி பிரதானமாக மூன்று செயற்பாடுகளை உள்ளடக்கியது.

தரவுகளை உள்வாங்குதல் (InPut) தரவுகளை நிரற்படுத்துதல் (C.P.U)
தரவுகளை வெளிப்படுத்துதல் (Out Put)

கணினியில் தரவுகளை உள்வாங்கும் பகுதிகள் (உட்படுத்தும் பகுதி)

விசைப்பலகை (Key Board) சுட்டி (Mouse)
ஸ்கானர் (Scaner) புகைப்படக் கருவி (Camera)
போன்றன காணப்படுகின்றன.

தரவுகளை நிரற்படுத்தும் கருவியாக மத்திய செயற்படுத்தும் நிலை (Central Prossing System) தொழிற்படுகிறது.

தரவுகளை வெளிப்படுத்தும் அலகுகளாக

கணனித் திரை (Moniter) அச்சடிக்கும் கருவி (Printer)

இணையத்தளம் போன்றன காணப்படுகின்றன.

*த.கயல்விழி,*
*மு/மல்லாவி மத்திய கல்லூரி.*

# பழமொழிகள்

1. சிறுதுரும்பும் பல்லுக்குத்த உதவும் (சிறிதென்று ஒன்றையும் இகழக் கூடாது)
2. தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு (உறவு வேறு, தேவை வேறு)
3. உண்மை சொல்லிக் கெட்டவரில்லை (உண்மையின் உயர்வு)
4. சந்திரனைப் பார்த்து நாய் குரைத்ததாம் (உயர் நிலையில் உள்ளவர்களைப் பார்த்து கீழ் நிலையில் உள்ளவர் தூற்றும் வீண் பிரயத்தனம்)
5. தூரத்துத் தண்ணீர் ஆபத்துக்குதவாது
(உரிய காலத்தில் கிடைக்காத உதவி பயனற்றது)
6. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போய்விடும்
(அனுபவிக்காத செல்வம் பயனற்றுப் போய்விடும்)
7. பாடின்றிப் பட்டம் இல்லை (கஷ்டப்பட்டால் நல்ல பலனைப் பெறலாம்)
8. துள்ளின மாடு பொதி சுமக்கும்
(அடங்காமல் இருந்தால் கஷ்டப்பட வேண்டி வரும்)
9. கையில் வெண்ணெயிருக்க நெய்க்கலையாதே
(பொருளை வைத்துக் கொண்டு அப்பொருளைத் தேடி அலையாதே)
10. எலி வளையானாலும் தனி வளை வேண்டும் (தனிக் குடித்தனம்)

*சாருஜா குகதாஸ், தரம் 9,*
*இரத்மலானை இந்துக் கல்லூரி.*

# அறிந்து கொள்ளுங்கள்

1. எவரெஸ்ட் சிகரமுள்ள இடமும் அதன் உயரமும்? நேபாளம் 8848 மீற்றர்
2. காட்வின் சிகரமுள்ள இடமும் அதன் உயரமும்? இந்தியா 8611 மீற்றர்
3. கஞ்சன் ஜங்கா சிகரமுள்ள இடமும் அதன் உயரமும்? நேபாளம் 8126 மீற்றர்
4. அன்ன பூர்ணா சிகரமுள்ள இடமும் அதன் உயரமும்? நேபாளம் 8078 மீற்றர்
5. நந்தா தேவி சிகரமுள்ள இடமும் அதன் உயரமும்? இந்தியா 7817 மீற்றர்
6. திரிச்மிர் சிகரமுள்ள இடமும் அதன் உயிரமும்? பாகிஸ்தான் 7700 மீற்றர்
7. மின்யா கொங்கா சிகரமுள்ள இடமும் அதன் உயரமும்? சீனா 7590 மீற்றர்
8. முஸ்தாக் சிகரமுள்ள இடமும் அதன் உயரமும்? சீனா 7434 மீற்றர்

*பா. தேனுஜா, தரம் 10,*
*கிளி/வன்னேரிக்குளம் ம. வித்.*

# சிறார்களின் கைவண்ணம்



கார்த்திகாஜினி, புத்தளம்.

எஸ். விவேக்ஷன் தரம் 5 தல/புனித பத்திரிசியார் கல்லூரி.

தயாபரன் இளங்கீரன், தரம் 3.

எஸ்.பகீர், மே/ப. எஸ். சஸ்ன, 4 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு மகா. வித்தி.

# கல்லாமை பற்றி வள்ளுவர்

கற்றவர்கள் எதையும் உணர்ந்து புரிந்து கொள்வார்கள். ஆனால், கல்லாதவர்கள் அதற்கு மாறானவர்கள். அதனால்தான் வள்ளுவர் பெருமான் கல்வி என்ற அதிகாரத்தில்

"கண்ணுடையவர் என்பர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையவர் கல்லாதவர்" என்றார்

அடுத்து வரும் கல்லாமை என்ற அதிகாரத்தில் கல்லாமையின் கீழ் நிலை பற்றி தெளிவாக கூறுகின்றார்.



உயிரோடு இருக்கின்றார்கள் என்னும் அளவினரே அல்லாமல் எந்தபயனும் இல்லாத உவர் நிலத்தை பேன்றவர்கள் கல்லாதவர்கள். நுட்பமாகவும் சிறப்பாகவும் நல்ல கற்ற அறிவில்லாதவரின் உடலழகு மன்னாற் செய்யப்பட்ட அழகான பாவையைப் போன்றது. கல்வி அறிவுடைய நல்லவரிடம் உள்ளதான வறுமையை விடக் கல்லாதவரிடம் சேர்ந்த அளவற்ற செல்வமானது மிகுந்த துன்பம் பயக்குவது ஆகும்.

நிரம்பிய நூலறிவில்லாமற் கற்றவரின் சபையிலே சென்று பேசுதல் அரங்கில்லாமல் சூதாடுதல் போன்ற அறியாமையான செயல் ஆகும். கல்லாதவனுடைய ஆலோசனைகள் சிலவேளைகளில் மிக நன்றாக இருந்தாலும் கற்றவர்கள் அதனை அப்படிக் கொள்ளமாட்டார்கள். கல்லாத ஒருவன் தன்னையும் கற்றவர்போல் கற்றவர் முன்னின்று சொல்லாடினால் அவனின் இயல்பான மதிப்பும் கெட்டு விடும்.

மேலான குடியிற் பிறந்தவராயினும் கல்லாத மடைமையாளர் தாழ்ந்த குடியிலே பிறந்தும் கற்றறிந்தவரைப் போல்பெருமை இல்லாதவர். எனவே எண் என்று சொல்லப்படுவதும் எழுத்தென்று சொல்லப்படுவதும் ஆகிய இவ்விரண்டும், இவ்வுலகில் வாழ்வோரின் கண்கள் என்றே வள்ளுவப் பெருந்தகை கூறியதற்கேற்ப கல்வியை கண்களாக போற்றிக் கற்க வேண்டும்.

"கேடுஇல் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றையவை"

*பிரியங்கா, தரம் 7,*
*கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை,*
*கொழும்பு 15.*

# பதினாறு வயதினிலே...

பருவங்களில் சிறந்த பருவம் இளமைப்பருவம். இந்தப் பருவம் எதையும் துடிப்போடு செய்யத் தூண்டும். அதேபோல் இந்தப் பருவத்தில் பெண்களுக்கு ஏற்படும் கவலைகளும் ஏராளமே!

குட்டையான பெண்களுக்கு தாம் உயரமாக இல்லையே என்ற ஏக்கம் உறுத்திக்கொண்டே இருக்கும். அதே போல் முகப் பரு...! இவ்வாறு நாளடைவில் அவர்கள் கவலைகள் அதிகமாகிக்கொண்டே வந்து தம்மைப்பற்றிய தாழ்ந்த ஒரு சுய மதிப்பீட்டுக்கு அவர்கள் ஆளாகின்றனர். இதுவே பின்னர் அவர்களுக்கு மனச்சோர்வை ஏற்படுத்துகிறது. விளைவு படிப்பில் நாட்டம் குறைந்து, தனிமையை விரும்பி மற்றவர்களிடமிருந்து விலகியிருக்கத் தொடங்குகிறார்கள். இதுவே பெண்களின் பெரிய பிரச்சினையாகும்.

வளரும் பருவம், வாழ்க்கையில் மகிழ்ச்சியும் பரவசமும் ஏற்படும் காலமும் கூட. இதனால் அவர்கள் பார்க்கும், பார்வை, அனுபவிக்கும் உணர்வுகள், எண்ணங்கள் எல்லாவற்றிலுமே ஒருவித மாற்றம் காணப்படும். குறிப்பாக இந்த வயதில் தங்கள் உடலில் ஏற்படும் மாற்றங்களைக்கண்டு பெரும்பாலும் கூச்சப்படுகிறார்கள். சிறிது தயக்கமும் அடைகிறார்கள். முகப்பரு, மாதவிடாய்ப் பிரச்சினைகள், களைப்பு, பூப்படைதல், உடல் பருமன், நடத்தை, உளவியல் ரீதியான மாற்றங்கள் போன்ற பல விடயங்களில் அவர்களுக்கு சந்தேகங்கள் தோன்றுகின்றன. இப்பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு தேடும் வயது இது. இதற்குத் தகுந்த விசேட வழிகாட்டி இல்லாதபோதுதான் அவர்களுக்கான குழப்பங்கள் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் சிக்கல்களைக் கொண்டுவந்து சேர்க்கின்றன.

இவ்வாறான இளமைப் பருவத்தில் ஏற்படும் மாற்றங்களைத் தெரிந்துகொண்டு, தங்களது உடல் நலப் பராமரிப்புக்குத் தேவையான பொறுப்பையும், வழிமுறைகளையும் சுயமாக வளர்த்துக்கொள்ளும் போது பிரச்சினையை சுலபமாகத் தவிர்த்து விட முடியும்.

குறைவாகச் சாப்பிடுவதால் உடலுக்குத் தேவையான சக்தி கிடைக்காமல் இரத்தச் சோகை, தாழ்வு மனப்பான்மை, படிப்பில் பின்னடைவு, அதிகப்படியான சோர்வு, மன அழுத்தம், தனிமையை விரும்புதல், உணவில் சமச்சீரின்மை ஆகியவற்றுக்கு அவர்கள் ஆளாகிறார்கள். அதனால் உடல் மட்டும் மனிதனுக்கு முக்கியமானதல்ல. அறிவு, கடும் உழைப்பு, விடாமுயற்சி போன்றவையும் முக்கியம் என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

அழகு என்பது எம்மிடம் இல்லை. பார்ப்பவர் கண்களில் தான் இருக்கிறது. ஒருவருக்கு அழகற்றவராகத் தெரியும் ஒருவர் இன்னொருவருக்கு அழகானவராகத் தெரிவதற்கான காரணத்தை விளக்க வேண்டும்.

பருவ வயதில் உடலில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி அவர்களுக்குத் தெளிவு ஏற்படும் வண்ணம் பெற்றோர் பேச வேண்டும். பேசக் கூச்சமுள்ள பெற்றோர் அது சம்பந்தமான புத்தகங்களை அவர்களுக்குப் படிக்கக்கொடுக்கலாம். சுற்றுப்புறச் சூழல் பழக்க வழக்கங்கள், சமூக, கலாசார மாறுதல்கள், உடல் மாற்றங்கள் போன்ற விடயங்கள் பற்றி பெற்றோர்கள் குழந்தைகளுடன் சுதந்திரமாகப் பேச வேண்டும். இதற்குப் பெரும்பாலான பெற்றோர்கள் கூச்சம் அடைகிறார்கள் அல்லது தயங்குகிறார்கள். நாமும் எமது பருவத்தில் பாதி நேரம் கண்ணாடி முன் நின்று, எம்மை ரசிப்பதிலேயே செலவிட்டவர்கள் தானே என்ற உண்மையை நினைத்துக்கொண்டாலே போதும். தயக்கம் விலகிவிடும்.

எனவே பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் உங்கள் கையிலே தங்கியிருப்பதால் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய என்றும் பின்நிற்காதீர்கள். உங்கள் மகளை உங்கள் நண்பி போல் எண்ணி அவள் சந்தேகங்களைப் போக்கி அவள் வாழ்க்கை சிறப்புற வழி செய்யுங்கள்!

****



# சமையல் குறிப்பு

## காளான் கட்லெட்

தேவையான பொருட்கள்

காளான் 10,12 வேக வைத்து, தோலுரித்த
பொரித்த உருளைக்கிழங்கு 2கப்
ஸ்லைஸ் பிரெட் 1
சவ்வரிசி 1/2 கப்
உப்பு தேவையான அளவு
எலுமிச்சைச்சாறு 1 தேக்கரண்டி
தனியா பவுடர் 1/2 தேக்கரண்டி
மிளகாய்த் தூள் 1 சிட்டிகை
எண்ணெய் தேவையான அளவு

### செய்முறை

காளானில் உப்பு, எலுமிச்சைச் சாறு போட்டு, 15–20 நிமிடங்கள் சவ்வரிசியை நீரில் நனைத்து வைக்க வேண்டும். பின்பு ஒரு சுத்தமான துணியில் பரப்பி வைக்க வேண்டும். பிரெட், உருளைக்கிழங்கு, உப்பு, மிளகாய்த் தூள், தனியா பவுடர் எல்லாவற்றையும் நன்கு கலக்கவும்.

உருளைக்கிழங்குப் பொடியை ஒரு பந்து போல் உருட்டிக்கொள்ளவும். நடுவில் காளான் வைக்கவும். இலேசாகத் தட்டவும். சவ்வரிசி மேல் ஒருதரம் ஒற்றி எடுக்கவும். எண்ணெயில் பொன்னிறமாக பொரித்தெடுக்கவும். சோஸ் உடன் பரிமாறவும்.

# பெண்

சசி

# பட்டால்தான் புத்தி வருமா?

வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும். வாசல் தோறும் வேதனை இருக்கும். எதையும் தாங்கும் இதயம் இருந்தால் இறுதி வரைக்கும் அமைதி இருக்கும்... ஆம்! இது எல்லோராலும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் கேட்டு ரசிக்கப்பட்ட வரிகளாக இருக்கலாம்.

வாழ்க்கையின் இன்ப துன்பங்கள் எமக்குப் பல பாடங்களைக் கற்றுத் தருகின்றன. பட்டால் தான் புத்தி வரவேண்டும் என்றில்லை. பல நபர்கள் அனுபவத்தால் கற்றதைக்கூட நாம் பாடமாக எடுத்துக்கொள்ளலாம். எனவே எம்மை நாம் வளப்படுத்தி வாழ்க்கையில் முன்னேற சில அறிவுரைகளை இப்போது பார்ப்போம்.

*மற்றவரின் எதிர்பார்ப்புகளை உற்சாகத்துடன் மிஞ்சுங்கள்.

*கேட்பதை எல்லாம் நம்பாதீர்கள். இருப்பதை எல்லாம் செலவழிக்காதீர்கள். விரும்பும் அளவுக்குத் தூங்காதீர்கள்.

*நிதானமாகப்பேசுங்கள். விரைவாகச் சிந்தியுங்கள்.

*உங்களுக்குப் பதில் சொல்லப்பிடிக்கவில்லை என்றால், கேள்வி கேட்டவரைப் பார்த்து எதற்காகக் கேட்கிறீர்கள் என்று புன்னகையுடன் கேளுங்கள்.

*தோற்றாலும் அதில் கற்ற பாடத்தைக் கோட்டை விடாதீர்கள்.

*உறவினர்களை வைத்து ஒருவரை மதிப்பிடாதீர்கள்.

*மற்றவர்களின் இலட்சியங்களை ஊக்குவியுங்கள்.

*சண்டைபோடும் நேரத்தில் பிரச்சினை பற்றிப் பேசுங்கள். நபர்களைப் பற்றி அல்ல.

*வருடத்துக்கு ஒருமுறையாவது இது வரை நீங்கள் செல்லாத இடத்துக்குச் செல்லுங்கள்.



*கடவுளை நம்புங்கள். அதே நேரத்தில் வீட்டுக்கதவைப் பூட்டுங்கள்.

*சிறிய பிரச்சினையால் ஆழமான நட்பு பாதிக்கப்பட்டுவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

*தவறை உணர்ந்தால் உடனடியாக அதைச் சரி செய்யுங்கள்.

# கண்ணாடியால் கவலையா?


மூக்குக் கண்ணாடி அணிவதால் பெண்கள் அழகு குறைந்து காணப்படுகிறார்கள் என்ற ஒரு தவறான கருத்து பரவலாகக் காணப்படுகிறது. ஆனால் அது தவறான கருத்தாகும். பொருத்தமான வடிவில் கண்ணாடி அணிந்தால் அதுவும் உங்கள் அழகை அதிகரித்துக்காட்டும் என்பதில் சந்தேகமே இல்லை.



உங்கள் கண்ணாடியின் அளவு உங்கள் முக அளவைக்காட்டிலும் அதிகமாக இருக்கக் கூடாது.

உங்கள் முக வடிவம் அகலமாக இருந்தால் சதுர வடிவ கண்ணாடி உங்கள் முகத்துக்கு பொருந்துகிறதா என சரி பார்த்துக்கொள்ளுங்கள்.

# இவ்வாரக் கோலம்



21 புள்ளி 11முடிய (ஊடு புள்ளி)

*சிறிய வெங்காயத்தை அரைத்து வேக வைத்து தயிருடன் சேர்த்து முகத்தில் தேய்த்தால், முகப்பரு மறையும். முகப்பரு இருக்கும் இடத்தில் எலுமிச்சை சாறு பூசுவது நல்லது.

*தக்காளியை நறுக்கி சிறிதளவு சீனியில் கலந்து முகத்தில் தேய்த்தால், சருமம் பளிச்சென ஆகும்.

*நெல்லிக்காய், எலுமிச்சை, கேரட் போன்றவைகளை தினமும் சாப்பிட்டால், அழகும் கிடைக்கும். ஆரோக்கியமும் கிடைக்கும்.

*அதிக மன அழுத்தம், அதிக கோபம்– வருத்தத்தை மனதில் சுமந்துகொண்டிருந்தால் அழகும் மேம்படாது. ஆரோக்கியமும் மேம்படாது.

# ஹெல உறுமயவின் தலைவருக்கு ஒரு பகிரங்க மடல்

ஒரு நாட்டின் ஆட்சிக்கும், வளர்ச்சிக்குமான உங்களின் ஆரோக்கியமான செயற்பாட்டுக்காகவும் முதலில் எனது வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடந்து முடிந்த நாடாளுமன்ற ஒன்றுகூடல்; எனது பார்வையில் ஒரு அங்காடி விற்பனை நிலையத்தில் நடந்து முடிந்த அடிதடி நிகழ்வு என்பதில் எனக்கு மாற்றுக்கருத்து இல்லை. உங்களுக்கும் அப்படி என்றே நினைக்கிறேன்.

எது எப்படி ஆனாலும் தர்மராஜ்யம் என்று நெஞ்சுயர்த்தி தட்டிக்காட்டுகிற உங்களுக்கு இந்தச்சம்பவம் அனுதாபத்தின் ஊடான ஆதரவைக் கொடுத்திருக்கும் என்பது வெளிப்படை.

ஒருவர் தன்னை வீட்டிலும், ஊரிலும், நாட்டிலும், தேசத்திலும் பிரபல்யப்படுத்த விரும்புவது சராசரி மனித இயல்பு. அதன் அடிப்படையில் நாடாளுமன்ற அங்காடி அடிதடி மூலம் நீங்கள் இன்று நாடளாவிய ரீதியில் பிரபல்யம் பெற்றுவிட்டீர்கள்.

எம் நாட்டிலே ஒரு பிக்கு பௌத்தர்களினாலேயே நாடாளுமன்றத்தில் பந்தாடப்பட்ட சம்பவம் இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றிலே ஒரு மைல்கல் என்றால் அதனை யாரும் மறுக்க முடியாது.

புத்தரின் புனித போதனைகளை போதிக்கப் புறப்பட்ட நீங்கள், நாடாளுமன்ற நாற்காலிகளைத் தேடி வந்து மானபங்கப்படுத்தப்பட்ட சம்பவத்தை நான் தமிழ் தரப்பின் நோக்கில் இருந்து பார்க்கும்போது, சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்த ஆண்டிகளாக வே உங்களை நான் கருதுகிறேன். மனிதநேயம் உள்ள என் உள்ளம் வருந்துகிறது உங்களுக்காய்.

நீங்கள் அறிவித்த தர்ம ராஜ்யம் எனும் விடயம் சிகரம்தான். ஆனால் புலிகளை எதிர்க்க வேண்டும் என்று ஏகோபித்த சிந்தனை உங்கள் தரப்பிலும் அரச தரப்பிலும் காணப்படுகிறது. ஆனால் சிந்தனையால் ஒன்றுபட்ட உங்கள் சக நண்பர்கள் உங்களை ஏற்றுக் கொள்ளும் பக்குவமின்றி உங்களுக்கு உயிர் ஆபத்து ஏற்படுத்த முயல்வதும் இந்தச்சங்கதியின் உள் இரகசியம் தான் புரியாத புதிராக, எனக்குக் குழப்பமாக இருக்கிறது.

புலிகளை எதிர்க்கும் விடயத்தில் ஒரே சிந்தனை உடைய உங்களையே ஒழித்துக் கட்ட முயலும் செய்கையானது, வேலியே பயிரை மேய்ந்தால் எப்படியாய் இருக்குமோ அப்படியாகவே உள்ளது என்று சொல்லிக் கொள்வதில் வெட்கமடைகிறேன்.

இந்த நிலை தொடருமேயானால் சிங்கள தேசத்தை கட்டிக்காக்க வேண்டிய நீங்களே அதனை அழித்துவிடும் நிலை உங்களாலேயே ஏற்பட்டு விடுமோ என்று சிந்திக்கும்போது பரிதாபம் ஏற்படுகிறது.

சிங்கள சமூகத்தின் விடிவுக்காய் தர்மராஜ்யம் அமைக்கப் புறப்பட்ட நீங்களே சொற்ப ஆயுள் காலம் கொண்ட நாடாளுமன்ற நாற்காலிக்காய் உங்கள் நண்பர்களுடன் அற்பத்தனமாக மோதிக்கொள்ளும்போது எப்படி நீங்கள் தர்மராஜ்யம் அமைத்து தேசத்தை காக்கப்போகிறீர்கள்?

மணலில் வீழ்ந்தாலும் மீசையிலே மண் ஒட்டவில்லை என்று சொல்வது தானே தன்மானம் காக்கும் நடைமுறை. ஆனால் காவி உடைக்காரரான நீங்களே அடிபட்டதை உங்கள் பௌத்த அமைப்புக்களே நியாயப்படுத்தி படம் பிடித்துக்காட்டிய சலனப் படங்கள் தான் நாடாளுமன்ற வரலாற்றில் சுவடுகளாய்ப் பதிந்துவிட்டன.

நீதி போதிக்கின்ற நீங்களே நீதிமன்றம் விதித்த தடை உத்தரவை மீறி சத்தியப்பிரமாணம் செய்ய முற்பட்டதனால் வந்த விளைவு தான் இது என்று உங்களை ஏற்றிப்போற்றி மதிக்கின்ற பௌத்த அமைப்புக்களே உங்கள் மேல் குற்றம் கண்டு விட்டன. நீதிமன்ற விடயத்தில் நீதி தேவதை கூட உங்களுக்கு சாதகமாக இல்லை என்பது எனக்கும் சங்கடமாகத் தான் இருக்கின்றது.

நாடாளுமன்றில் மாவை சேனாதி அவர்கள், இடைக்கால நிர்வாக ஏற்பாடுகள் பற்றிப் பேசிய போது அதைக்கேட்டுக் கொண்டும் நீங்கள் மௌனமாக இருந்து விட்டதாக உங்களது மதிப்பிற்குரிய பௌத்த அமைப்புக்களே உங்களில் குற்றம் கண்டு விட்டார்கள்.

நீங்கள் அரசுப்பக்கத்துக்கு ஆதரவாக நடந்துகொள்ளவில்லை என்பதற்காக அரசுத்தரப்பினால் உங்கள் உறுப்பினர் கடத்தப்பட்டதை, ஏதோ உங்களில் ஒரு பிரிவினர்தான் சேர்ந்து அந்த உறுப்பினரை கடத்திக்கொண்டு போய் மறைத்து வைத்திருப்பதாகவும் வரலாற்றில் இந்த நிகழ்வு இப்போது தான் நடந்திருப்பதாகவும் பௌத்த அமைப்புக்கள் உங்களைச்சாடி இருக்கின்றன. செய்யாத குற்றத்துக்கு நீங்கள் தண்டனை அநுபவிக்கவேண்டிய நிலைக்கு நீங்களே தள்ளப்பட்டிருக்கிறீர்கள்.

உங்கள் ஆரம்ப முன்னெடுப்புகளுக்கே



இந்த நிலை என்றால் அடுத்த அத்தியாயமும், அடுத்து வருகின்ற அத்தியாயங்களும், இறுதி அத்தியாயமும் எப்படி அமையும் என்று சிந்திக்கும்போதே எனக்குத் தர்ம சங்கடமாக இருக்கின்றது.

நாடாளுமன்றத்தின் சபாநாயகர் தெரிவில் ஏற்பட்ட கெடுபிடிகள், பிரதிசபாநாயகர் தெரிவிலும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக ஜனாதிபதியும் ரணில் விக்கிரமசிங்க அவர்களும் திரைமறைவில் பேசிக்கொண்ட நிலைமைகள் எதிர்காலத்தில் தங்கள் அரசியலுக்கு நீங்கள் தேவையற்றவர்கள் என இந்த இரு தரப்பும் இணைந்து கோடி காட்டுவதாகவே எனக்குப் படுகிறது.

உங்களுக்குள் ஒன்றுபட்டு ஒற்றுமையாய் இருந்தாலே அது உங்கள் தரப்புக்குப் பலப்பு என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதை விடுத்து நீங்கள் உங்களுக்குள் கைகலப்புக்குள்ளாகி சுயகௌரவத்தை நீங்களாகவே இழந்துவிட்ட நிலையில், நடாளுமன்றில் உங்களுக்குப் பாதுகாப்பு வழங்க முன்வந்தது சிங்கள உறுப்பினரல்ல என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் பேசும் ஒரு தமிழனுக்கும் தன்னைப் போன்று தன் அயலவனையும் நேசிக்கும் தாராள குணம் இருக்கின்றது என்பதை அன்றைய நாடாளுமன்ற அடிதடி உங்களுக்கு வெளிப்படுத்திக்காட்டியதை வரலாற்றிலே நீங்கள் மறந்துவிடமுடியாத சம்பவம் என்று தான் நான் சொல்வேன்.

உங்களை உங்கள் உடன்பிறப்புகள் துகில் உரிந்தபோது தன்மானப்பிச்சை கொடுத்து உங்களைப்பாதுகாப்பாக சபா பீடத்துக்கு அழைத்து வந்தது தமிழ் மகன் ஒருவரே என்பதை வாழ்வில் ஒருபோதும் மறக்கமாட்டீர்கள் என எண்ணுகிறேன்.

உங்களுக்கேற்பட்டிருக்கின்ற இப்போதைய நெருக்கடிகளை பார்க்கும்போது, உங்களது கட்சியை உங்கள் பௌத்த மகாசங்கத்தினர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றே எனக்குப்படுகிறது.

நீங்கள் காவியுடையுடன் நாடாளுமன்றம் சென்றிருப்பது அரசியல் பதவி மோகத்துக்கும் அதனுடனான உல்லாச வாழ்க்கைக்கும் நீங்கள் அவாவிக்கொண்டு அலைவதாகவே தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல முழு மொத்த சிங்கள தேசமுமே அவ்வாறு சிந்திப்பதாகவே நான் உணர்கிறேன்.

நாடாளுமன்ற ஆசனங்கள் கிடைத்த மாத்திரத்திலேயே உங்களுக்குள் அதுபற்றி ஏற்பட்ட உள் முரண்பாடுகளால் பகிரங்கமாகவே உங்களுக்குள் மோதிக்கொண்ட நிலமைகள், உங்கள் அரசியலில் உள்ள கட்டுக்கோப்புக்கள், திட்டங்கள் நிலை குலைந்திருப்பதையே தேசத்துக்கு வெளிப்படுத்துகின்றன.

எனவே இதுவரை காலமும் நடத்திய உங்கள் மோசமான அரசியலைக் கைவிட்டு நேர்மையாக உங்கள் சிங்கள தேசத்தை எவ்வாறு சீரழிவான அரசியலிலிருந்து காப்பாற்றலாம் என யோசியுங்கள். அதன் மூலம் தேசத்தை நிர்மூலமாக்கப்போகும் போரில் இருந்து எவ்வாறு நாட்டைக்காப்பாற்றலாம்? அதற்காக என்ன செய்யலாம் என்று யோசியுங்கள். உண்மையில், அவ்வாறு சிந்திப்பீர்களாயின், நீங்கள் இப்பூமியில் பிறந்ததுக்கு கொஞ்சமாவது அர்த்தமிருக்கும்.

இப்படிக்கு,
விசித்திரன்

---

## சொற்சிலம்பம் போட்டி இல.113

சொற்சிலம்பம் 113 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் ஜூன்28ஆம் திகதி ஆகும். விடைகள் ஜூலை05ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூலை12ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.111க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத படசத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடுதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.113

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | 9 | | |
| ■ | 10 | 11 | | ■ | 12 | | |
| 13 | | | ■ | 14 | | ■ | |
| 15 | | | 16 | | ■ | 17 | |
| | ■ | 18 | | ■ | 19 | | ■ |
| ■ | 20 | ■ | 21 | | | | 22 |
| 23 | | | | ■ | 24 | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.111

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | 2 க | 3 வா | 4 ச | ம் | ■ | 5 பா | 6 பா |
| 7 ம | ட் | டு | ம் | ■ | 8 ப | ட | கு |
| 9 ப | டை | ■ | 10 பூ | 11 த | ல | ம் | ■ |
| ந் | ■ | 12 ச | ர | ள | ம் | ■ | 13 து |
| 14 தி | 15 ரு | ம | ண | ம் | ■ | 16 த | ரு |
| ■ | 17 சி | த | ம் | ப | ர | ம் | ■ |
| 18 மா | ■ | ள | ■ | ல் | ■ | 19 பு | 20 சி |
| 21 து | ரு | ம் | பு | ■ | 22 த | ரா | சு |

## சொற்சிலம்பம் போட்டி இல.113

**இடமிருந்து வலம்**

1. கற்பில் சிறந்தவள். நட்சத்திரம். வசிட்டன் மனைவி.
5. பிரி.
7. படி.
8. வரும்படி.
10. கத்தி அழு.
12. இளைய சகோதரன்.
13. நீர்த்தன்மை .
14. தும்பில் இருப்பது. கயிறு தயாரிக்க உதவுவது.
15. நிகழ்வு.
17. படி/கட்டடம் கட்டவும் தேவை.
18. உள்ளே தள்ளு.
19. நீரில் வேக வை.
21. அதிக வடிவு.
23. மேடு அல்ல.
24. குளிசை/ மாத்திரை.

**மேலிருந்து கீழ்**

1. எல்லையற்ற ஆசை.
2. சுவை நிரம்பியது.
3. தப்பு/பிழை.
4. செல்வம்/ ஆணின் பெயரின் முன்னால் போடுவது.
5. காடு.
6. வணங்கல்/கரம் குவித்தல்.
9. பெண்கள்.
11. கணவன்—மனைவி.
13. மழைக்காலத்தில் வருவது.
14. தன்மைப் பன்மை.
16. வர்த்தகம்/வியாபாரம்.
17. அகம்புறமாதல்/தலைகீழாதல்.
19. இதுவும் காடுதான்.
20. போதை தருவது/ பன்மைக்கு வரும்.
22. காய்கள் / பழங்களின் கொத்து.

## சொற்சிலம்பம்-110 பரிசு பெறுவோர்.

1. கு.திலீபன்,
   31, ஸ்ரீ சுமங்கள மாவத்தை,
   அஸ்கிரிய,
   கண்டி.
2. கு.சர்மிலா,
   வட்டு மேற்கு,
   வட்டுக்கோட்டை.
3. செல்வி.க.சஷீலா,
   மூளாய் றோட்,
   வட்டுக்கோட்டை.

### பாராட்டுப் பெறுவோர்

1. செல்வி.சி.ராதை,
   கிங்ஸ்படன் சர்வதேச பாடசாலை,
   வெள்ளவத்தை.
2. நகுலன் ஜெயசேகர,
   594/6,நாச்சிமார் கோவிலடி,
   யாழ்ப்பாணம்.
3. இ.ஆறுமுகம்,
   தொட்டிலடி,
   சங்கானை.
4. ஆ.தங்கவேலாயுதம்,
   மல்லாவி,
   யோகபுரம்.
5. ஆ.அதிரூபசிங்கம்,
   அம்மன்கோவிலடி,
   வல்வெட்டித்துறை.
6. ந.புவனகாந்தி,
   கறுவாக்கேணி,
   வாழைச்சேனை.
7. செல்வி.பீ.குமார்,
   64/22,கொட்டாஞ்சேனை வீதி,
   கொச்சிக்கடை.
8. ஏ.பாலசிங்கம்,
   ஆலடி வீதி,
   கோண்டாவில் கிழக்கு.
9. தே.ஆரணி,
   மல்லாவி மத்திய கல்லூரி,
   மல்லாவி.
10. ச.சந்திரா,
    மருதடி,
    வல்வெட்டித்துறை.

# யாழ்ப்பாணத்தில் பழமை வாதம் மறுபிறப்பெடுத்து விட்டதா?

யாழ்ப்பாணக் குடாநாடு எங்கும் கோவில்களில் கொடியேறி திருவிழாக்கள் கோலாகலமாக நடைபெறுகின்றன. புதுமனைப் புகுவிழாக்கள், பூப்புனித நீராட்டுவிழாக்கள், திருமணவை பவங்கள் என எல்லாவகையான மங்கள நிகழ்வுகளும் நன்றாகவே நடைபெறு கின்றன.

திரையரங்குகளில் புதுப்புதுப் படங்கள் ஓடுகின்றன. யாழ். இளைஞர், யுவதிகள் திரையரங்குகளில் நிரம்பி வழிகின்றனர். புதிதாய் ஆரம்பிக்கப்பட்ட உணவு விடுதிகளில் சுவை சுவையான உணவு வகைகள் பரிமாறப்படுகின்றன.

சுற்றுலா விடுதிகளில், சுற்றுலாக் காரர்கள் நிரம்பி வழிகின்றனர். யாழ் – கண்டி வீதியிலோ, பருத்தித்துறை வீதியிலோ பலாலி வீதியிலோ, காங்கேசன் துறை வீதியிலோ, யாழ் – மானிப்பாய் வீதியிலோ விரையும் மோட்டார் சைக்கிள்கள், சிறியரக வாகனங்கள், கார்கள், பஸ்கள் என்பனவற்றின் அதிகரித்த பயன்பாட்டை புதிதாக அவதானிக்கும் ஒருவர் யாழ்.குடாநாடு பாரிய வர்த்தக விருத்தி, விரிவாக்கம், கொண்டுள்ள தாகவும் அங்கு அபிவிருத்தி முயற்சிகள் வேகமாக மேற்கொள்ளப்படுவதாகவும் கருதிவிடலாம். அவ்வாறே தொலைப் பேசிப்பாவனை தொடர்பாகவும் கருத்து ஏற்படலாம்?

ஆனால், யதார்த்த நிலை அதுவல்ல. பாதைகளும் சந்தர்ப்பங்களும் தடுக்கப் பட்டு மூடப்பட்டுக் கிடந்த நீண்ட காலச் சூழ்நிலையின் பின் திடீரெனத் திறக்கப் பட்டதால் விளைந்த ஒருவிதமான பரபரப்புடன் கூடிய புளகாங்கித மனோபாவமே இந்த நிலைக்குக்காரணம்.

எவ்வித பொருளாதார அபிவிருத்தி நோக்கங்களுமற்ற, உளவியல் மகிழ்ச்சிக்கான, திருப்திக்கான பயணங்களிலும் பயன்பாடுகளிலும் வாகனங்களும் தொலைபேசிகளும் யாழ்ப்பாணத்தில் மிக அதிகளவில் பயன்படுகின்றன.

## ஆன்மீகத் திருப்தி அல்லது உளவியல் திருப்தி

சைவமும் தமிழும் ஓங்கி வளர்ந்த புண்ணிய பூமி யாழ்ப்பாணம் என்று சொல்வதிலும் யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம் என்று சொல்வதிலும் பேரானந்த மடைந்தவர்கள் யாழ்ப்பாண மக்கள்.

பின்னர் போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், அமெரிக்க மிஷனரிமார் ஆகியோரின் வருகையால் கிறிஸ்தவமதமும் ஆங்கில மூலக் கல்வியும், வட்டுக்கோட்டை, உடுவில், யாழ்ப்பாணம் போன்ற இடங்களை மையப்படுத்தி வளர்ந்த போது கல்விப் பாரம்பரியமொன்றின் சொந்தக் காரர்களாக யாழ்ப்பாணத்தவர் விபரிக் கப்பட்டனர். போட்டா போட்டியாக சைவசமயிகளும் கிறிஸ்தவர்களும் யாழ்ப்பாணத்தின் எழுத்தறிவு வீதத்தை அதிகரிக்கச் செய்தனர் என்பது உண்மையே.

யாழ்ப்பாணத்து உயர்குழாத்தினரின் வாரிசுகள் ஆங்காங்கு அகிலமெங்கும் மருத்துவர்களாகவும் பொறியியலாளர்க ளாகவும் சட்டநிபுணர்களாகவும் ஆராய்ச்சியாளர்களாகவும் வாழ்கின்றனர் என்பதும் உண்மையே.

சைவமும் தமிழும் வளர்த்த கதை, கந்த புராண கலாசாரம் இருந்தகதை, யாழ்ப்பாணக் கல்விப்பாரம்பரியம் 'பற்றிய பெருமைகள் என்று வெறும் அண்டப்புளுகு ஆகாசப் புளுகுகளாக யாழ்ப்பாணத்தவர் தம்மைத்தாமே புளுகிக்கொண்டனர். எத்தனை சமூக விஞ்ஞானிகளை, ஆராய்ச்சியாளர்களை யாழ்.சமூகம் இப்பொழுது வைத்திருக்கிறது?

இலங்கை இராணுவத்தின் உயர்பாது காப்பு வலயங்களுள் (வலிகாமம் வடக்கு – வடமராட்சி கிழக்கு, தென் மராட்சியில் ஒரு பகுதி, தீவகத்தின் சில பகுதிகள்) அகப்பட்ட பல பெரிய சைவக்கோயில்களைப் பெருப்பிப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் ஆண்டாண்டுகளாக பல்லாயிரம் கோடி ரூபாய்களை செலவழித்தவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள்.

அவர்களுக்கு அதன் மூலம் கிடைக் கின்ற உளவியல் திருப்தியே மகா உத்தமமானது என்று கற்றவர்களால் கூறப்படுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியியல் துறை ஆசான் ஒருவரின் முன்னெடுப்பில் 'யாழ்ப்பாணத்தின் முதலீட்டுக் கொள்கையை வடிவமைத்தல்' எனும் விடயத்தில் துறைசார் மாநாடு ஒன்று அதே பல்கலைக்கழகத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

அங்க சமுகமளித்திருந்த சமூகவியல் மாணவனொருவன், மாநாட்டின் பேச்சாளர்களில் ஒருவராகவிருந்த மூத்த பொறியியலாளரிடம் 'யாழ்ப்பாணத்துமக்கள் புதிய ஆலயங்கள் கட்டுவதிலும் அவற்றைப் புதுப்பிப்பதிலும் அதிகளவில் தமது உறவினர்கள் வெளிநாடுகளிலிருந்து உழைத்து அனுப்பும் அந்நியச் செலாவணியைச் செலவழிக்கின்றனர். இந்த முதலீட்டுப் பண்பு எவ்வகையான சமூக – பொருளாதார அபிவிருத்தியை யாழ் சமூகத்துக்கு உருவாக்கப்போகிறது?'' என்று கேட்டார்.

அதற்குப் பதிலளித்த அந்த 'முன்னோடியான' பொறியியலாளர் ஒரு ஆலயத்தை கட்டியமைப்பதிலோ புனர்நிர்மாணம் செய்வதிலோ பல கட்டடத்தொழிலாளிகளும் கட்டட, சிற்பக்கலைஞர்களும் ஈடுபடப் போவதனால் அவர்களுக்கு கிடைக்கும் வேலைவாய்ப்பு முதலியவற்றைச் சுட்டிக்காட்டியதுடன் ஆலயத்தைச் சூழ உருவாகும் ஆன்மீக பண்பாட்டுச் சூழலும் ஒரு சமூக அபிவிருத்திதானே' என்ற சாரப்பட பதிலளித்தார். அங்கு மற்றொரு பேச்சாளராகவிருந்த யாழ்ப்பாண செயலகத்தைச் சேர்ந்த (தற்பொழுது ஓய்வு பெற்றுவிட்டார்) இலங்கை திட்டமிடலாளர் சேவை அதிகாரியொருவர் ஆன்மீகத் திருப்தி அல்லது உளவியல் திருப்தி என்பது பொருளாதாரப் பெறுமானம் அற்றது என்று கூறிவிட முடியாது என்றார்.

அந்த பொறியிலாளர், குறிப்பிட்ட திட்டமிடல் அதிகாரி ஆகியோர் கூறிய விடயங்களை அவதானித்த மற்றுமொருவர் "கோயில்களில் Bill clerk வேலைக்கும் வேலைவாய்ப்பு விளம்பரம் யாழ்ப்பாணப் பத்திரி கைகளில் வருகிறதுதானே அதுவும் ஒரு பொருளாதார பெறுமானமுள்ள விடய மல்லவா? என்று கிண்டலடித்தார்.

மேற்சொன்ன பொறியியலாளரும் திட்டமிடலாளரும் சுட்டிக்காட்டிய வேலைவாய்ப்புக்களும், பொருளாதார பெறுமானமும் ஒரு சமூகத்தின் நீடித்த அபிவிருத்திக்கான உற்பத்தி அல்லது சேவைத்துறைசார்ந்த பொருளாதாரம் பாங்காகக்கொள்ளத்தக்கனவா என்ற கேள்வி எழுகிறது! கட்டடத் தொழிலாளர்களுக்கும் சிற்பக்கலை ஞர்களுக்கும் பூசகர்களுக்கும் ஒரு சில எழுதுவினைஞர்களுக்கும் வேலைவாய்ப்புக்கள் வழங்குதலும் தற்காலிகத் தன்மை கொண்டதாகவே இருக்கும்.

## கோயிற் கடவை

யாழ்.சமூகத்தின் சமூகப்போக்கை விளங்கிக்கொள்வதற்கு ஒரு உதாரணத் தைப் பார்ப்போம். கீரிமலை, காங்கேசன் துறை, மாவிட்டபுரம் ஆகிய மூன்று இடங்களையும் உள்ளடக்கிய பகுதி கோவிற்கடவை என்று வழங்கப்பட்டு வந்தது.

இந்த மூன்று இடங்களின் புவிசார் இயல்புகள், வரலாற்று பொருளாதார அம்சங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டவை. புராணக் கதைகளும் மூன்று இடங்களையும் பின்னிப் பிணைத்தே உலாவருகின்றன (இன்று அதி உயர் பாதுகாப்பு வலயமாக கோவிற்கடவை உள்ளது.)

இக் கோவிற்கடவையின் குடிப்பரம்பல் மிகவும் சுவாரஸ்யமானதும் சமூகவியல் மாணவர்கள் கவனிக்கத்தக்கதுமாகும். ஆலயங்களுடனான கடமைக்கு, 'திருத்தொண்டுக்கு' உரியவர்களான மக்கட் பரம்பையும் இந்தக் கோவிற்கடவைப் பிரதேசத்திலே காணக்கூடிய நிலைமை முன்பு இருந் தது. கோவிற்கடவையின் வடக்கெல்லை கடலாக அமைந்துவிட்டது. கிழக்கு காங்கேசன்துறை - யாழ்நகர் வீதியைக் கொள்ளலாம். முருகனாலயத்திற்கு வடக்கில் கிழக்கு நோக்கி இருநூறு மீற்றர்வரை சென்று, குமார கோயிலையும் உள்ளடக்கி இன்னும் கிழக்கு நோக்கி மாலை முருகன் ஆலயத் தினை கிழக்கெல்லையாக்கி தெற்கு நோக்கி விணியவரை அம்மன் கோயில் வரைசெல்லும்.

பின்பு தென்புறம் திரும்பி மாப்பாண தெரு, பட்டிக்கடவை, விரகத்தி விநாயகர் ஆலயப்பகுதி என்பவற்றை உள்ளடக்கி விழிசிட்சி, இளவாலையின் வடக்குப்புறம், மயிலங்கூடல், நாத அலை, கருகம்பனை என்பவற்றையும் உள்ளடக்கி கோவிற்கடவை அமையும். மோயிட்டி, மாஸ்கொல்லை வல்லி கிணற்றடி, தச்சன் தோப்பு, கூவில் என்றும் பகுதிகள் எல்லாம் உள்ளடக்கம். இந்தச் சுற்றுவட்டத்துள் அந்தணர், வீரசைவர்கள், இசைவேளாளர், ஓதுவார்கள் முதலிய தொழில்சார் பாகுபாட்டு அம்சங்கள் உள்ளடங்கும். யாழ் சமூகத்தின் பழமைவாதப் பண்புகள் செழிந்த சாதிய முறைமையின் ஓங்கல்களுடன் கூடிய ஒரு கலாசார பொருண்மியப் பண்புசார் தோற்றப்பாடு இருந்தமை உண்மை தான்.

சைவ ஆலயங்களை மையப்படுத் திய கலாசார பொருண்மிய தோற்றப் பாடுகள் யாழ்குடாநாட்டில் பரவலாகக் காணக்கூடிய அம்சமாகும்.

இது யாழ் சமூகத்துக்கு ஒருவகை வெளியலங்காரத்தனமான விழாக்கோலப் பரபரப்புக்கள் நிறைந்த ஒருவித உளவியல் திருப்தியை கொடுத்ததே தவிர ஒரு தூர நோக்குக்கொண்ட அரசியல் பாரம்பரி யத்தை நிறுத்திக்கொள்வதற்கான தளங்கள் எதனையும் தரவில்லை.

போரியல் அரசியல் பரிமாணம் இத்தகைய பாரம்பரிய கலாசாரத்தை உடைத்தது. எனினும் இடைக்காலத்தீர்வோ நிரந்தர அரசியல் தீர்வோ ஏற்படாத நிலையில் யாழ்.சமூகம் பழைய சம்பிரதாயங்களுக்கே திரும்புகிறது!

## சுரண்டலுக்குள்ளாகும் உளவியல் பலவீனம்

அரசியல், இராணுவச் சிக்கல்களுடன் தொடர்புள்ளதாக உள்ள யாழ்.குடாநாட்டின் உயர்பாதுகாப்பு வலயமும் அதற்குள் அகப்பட்டுள்ள பாடசாலைகள், கோவில்கள், தேவாலயங்கள், மருத்துவநிலையங்கள், மக்களின் வீடுகள் என்பன அழிந்தும் சிதைந்தும் கவனிப்பாரற்றும் போய்விட்டன.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், கீரிமலை நகுலேஸ்வரம் போன்ற அதியுயர் பாதுகாப்பு வலயங்களுள் உள்ள ஆலயங்களுக்கு வருடத்தில் ஒரு சில விசேட தினத்திலாவது சென்று யாழ்ப்பாண மக்கள் வழிபாடியற்ற இராணுவ அதிகாரிகள் அனுமதிகொடுக்கின்றனர்.

கீரிமலைக்கு அந்தியேட்டிக் கிரியைகள் செய்வதற்கும் இராணுவம் அனுமதியளித்துவருகிறது. இவையெல்லாம் கூட ஆன்மீகத் திருப்தி என்ற பெயரில் யாழ்ப்பாணம் தனது உளவியலைக் காப்பாற்ற மேற் கொள்ளும் பிரயத்தனங்கள் என்றுதான் கூறமுடியும்.

## தங்க நகைகள் தரும் திருப்தி

யாழ்ப்பாண சமூகத்தின் மிகப்பெரும் பொருளாதாரப் பலவீனமான மற்றுமொரு விடயம் தங்க நகைகள் இன்றும் இன்னும் அதிகமாகச் சேர்த்துச் சேர்த்து தத்தமது மேனிகளை அலங்கரித்துக்கொள்வது ஆகும்.

தங்க நகைகளைச் சேகரித்துக் கொள்வதில் யாழ் மேட்டுக்குடி, மத்தியதர குடும்பங்கள் மட்டுமல்ல பொருளாதார ரீதியில் மிகவும் தாழ்வகுப்பினராக உள்ளோரும் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர். யாழ்ப்பாணத்தின் ஏழை வர்க்கத்தினரை பொறுத்த வரையில் பெரும்பாலானோர் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழ்கின்றனர். இவர்கள் அரசாங்க நிவாரணங்களையும் உதவிகளையும் முழுமையாக நம்பியிருக்கின்றனர். இவர்களைத்தவிர ஏனைய ஏழைவர்க்கத்தினர் அன்றாட கூலித்தொழிலாளர்களாகக் கடமைசெய்தே உழைக்கின்றனர்.

இவ்வாறான ஆண்தொழிலாளர்கள் தமது உழைப்பின் ஒரு பகுதியை கசிப்பு, சாராயம் போன்ற மதுபானங்கள் அருந்துவதில் செலவுசெய்கின்றனர்.

ஆனால், இவர்களின் குடும்பங்களில் மனைவிமாரும், பெண்பிள்ளைகளும் ஏதும் ஒரு சிறுதங்க நகைதானும் தமது மேனியில் நிலைக்கவேண்டும் என்பதற் காக ஏங்குகின்றனர். பிரயத்தனம் செய்கின் றனர்.

கஞ்சி குடித்தோ பச்சடியும் பாணும் சாப்பிட்டுத்தானும் கூலிவருமான சீட்டுக்கட்டியோ சேமித்தோ நகைபோடவேண்டும். என்பது யாழ்ப்பாண ஏழைகளின் அபிலா ஷையாகவுள்ளது.

யாழ்.சமூகத்தின் பிரயோக அரசியலில் போரியல் ஏற்படுத்திய அனுபவங்களும் வடுக்களும் குறிப்பிடும்படியான முற்போக்கான மாற்றங்களை இன்னமும் ஏற்படுத்த வில்லை என்ற முடிவுக்கு வருவது சரியா?

இப்பழமைவாதப் பண்புகளின் மீள்திரும்பல் ஒருபுறமும் சமூகச் சீர்கேடுகள் மறுபுறமும் என யாழ்.சமூகம் அல்லாடுகிறது!

– யாழ்.ஆத்மா –


## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ. 23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250-300 Col. Cms) | | |

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# குதிக்காலில் ஏற்படும் வலியும் சூடாக்கிய செங்கட்டி வைத்தியமும்

**கேள்வி:** வயது 48. எனது பாதத்தின் குதிக்கால்கள் இரண்டும் காலையில் எழுந்ததும் சரியாக வலிக்கின்றன. எழுந்து நடமாட முடியாது. நேரம் செல்லச் செல்ல வலி குறைந்து நடக்க முடிக்கின்றது. சிநேகிதிகள் இதனை குதிவாதம் என்கின்றார்கள். சூடாக்கிய செங்கல் மேல் குதியை வைத்து சூடுபிடித்தால் மாறிவிடும் என்கிறார்கள். அந்த நேரத்துக்கு கொஞ்சம் சுகம் தெரிகின்றது. ஆங்கில டாக்டர்கள் தரும் மாத்திரைக்கு அந்தவேளைக்கு வலி குறைகின்றது. எனக்கு சுகம் காண வழி கூறுங்கள்?

பதில்: குதிக்காலில் வலி ஏற்படுவதற்கு குதிக்கால் எலும்பான கல்கேனியத்தில் (CALCANEUM) ஏற்படும் அழற்சியே காரணமாகும். பிழையான பாதணிகளை அணிவது, குதிக்கால், பாத தசைகளை அளவுக்கதிகமாக – AEROBIC மற்றும், குதித்து விளையாடும் விளையாட்டுகளில் உபயோகிப்பது என்பன இந்த எலும்பைப் பாதிக்கின்றன. தசைகளின் இழப்பினால் இந்த எலும்பில் முள் போன்ற வளர்ச்சி ஏற்படுகின்றது. இதனை CALCANEAL SPUR என்று கூறுவர். எக்ஸ்ரே எடுத்தால் இது தெரியவரும். எனவே நீங்கள் இது வரை செய்த சிகிச்சைகளில் குணம் காணப்படாவிடின் – ஒரு ORTHOPAEDIC நிபுணரை சந்தியுங்கள். அவர் இரத்தம், எக்ஸ்ரே பரிசோதனைகள் மூலம் உங்கள் நோயின் காரணத்தை கண்டறிவார். சிலவேளைகளில் குதிக்காலில் – DEPO-MEDROL என்ற ஊசி மருந்தை செலுத்துவதன் மூலம் விரைவில் குணம் காணலாம்.

**கேள்வி:** ஆண் வயது 50. எனக்கு கடந்த பத்து வருடங்களாக நீரிழிவு வியாதி உள்ளது. சமீபகாலமாக எனது பாதத்தில் உணர்ச்சி தெரியாது. பாதத்தில் கல் குத்தினாலோ, தட்டுப்பட்டாலோ – எனக்குத் தெரிவதில்லை. சில வேளைகளில் கைவிரல்கள் கூட விறைத்துப் போகின்றன. டாக்டர் இது நீரிழிவு வியாதியால் ஏற்படுகிறது, பரிகாரம் ஏதும் இல்லை, என்று கூறி, விட்டமின் B மாத்திரைகள் மாத்திரம் தருகின்றார். இதனால் எதுவித பலனும் இல்லை. பரிகாரம் கூறவும்.



பதில்: நீரிழிவு நோயாளர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளில் ஒன்று கால், கைகளுக்குச் செல்லும் நரம்புகளின் (ENDS) அந்தங்கள் பழுதுபடுவது. இதனை PERIPHERAL NEURITIS என்பார்கள். நரம்புகளில் வெளியுறையாக உள்ள MYELIN உறைகள் மூலமாகவே உணர்வுகள் கடத்தப்படுகின்றன. நீரிழிவு நோயாளர்களின் இரத்தத்தில் உள்ள அதிகளவு சக்கரைச் சத்தினால் இந்த வெளியுறைகள் பழுதடைந்து போகின்றன. இதனால் உணர்வுகள் கடத்தும் செயல் நடைபெறாமல், கால், கை – பாதம் விரல்களில் விறைப்பு ஏற்படுகின்றது. GLOVES & STOCKING SYNDROME என்பார்கள். கையுறை, காலுறை அணிவதால் – மூடப்படும் பகுதிகளில் விறைப்புத் தன்மை, உணர்வு குறைதல் ஏற்படுவதையே இவ்வாறு அழைக்கின்றார்கள். இதற்கு நிவாரணம் தர மருந்துகள் எதுவுமில்லை. விட்டமின் B மாத்திரைகள் நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களுக்கு உதவும் என்பதால், வைத்தியர்கள் இந்த NEURITIS – நரம்பு அழற்சி நோய்க்கும் இதனை தருகின்றார்கள். ஆனால், பெரிய அளவில் பிரயோசனம் கிடைக்கும் என்பதில் நம்பிக்கையில்லை. நீரிழிவு நோயாளர்கள், ஆரம்பத்திலிருந்தே – நோயை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம், நரம்பு அழற்சி ஏற்படுவதை பெருமளவில் தவிர்க்கலாம். அது போல் நரம்பு அழற்சி ஏற்பட்டாலும், நீரிழிவு நோயை கட்டுப்பாட்டில் வைத்து, மேலும் நோயின் தாக்கத்தை குறைக்கலாம். நரம்பு அழற்சி உள்ள நீரிழிவு நோயாளர்கள் தமது பாதங்களின் சுகாதாரத்தையும், நலனையும் நன்கு பராமரிக்க வேண்டும். உணர்வுகள் அற்ற பாதங்களில் ஏற்படும் காயங்கள் புண்கள், அவர்களுக்கு தெரியாமலே புரையோடி, இரத்த ஓட்டம் இழந்து பாதங்கள் அழுகி – கால் விரல்களையோ, கால்களையோ அறுவைச்சிகிச்சை மூலம் அகற்றும் பரிதாப நிலை கூட ஏற்படலாம். இந்த நரம்பு அழற்சி உள்ளவர்கள், பாதங்களை – தங்கள் முகத்தைப்போல் நன்றாக – கவனமாக பராமரிப்பது அவசியம் என்று மருத்துவர்கள் கூறுவார்கள். ஒவ்வொரு இரவும் படுக்கைக்கு போகமுன்னர் – பாதங்களை கழுவி, அவற்றில் ஏதாவது காயங்கள், சிராய்ப்புகள் இருக்கின்றதா என்பதை கவனித்துக்கொள்ள வேண்டும்.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை
> 'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
> டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
> நீங்கள் கேள்விகளை
> அனுப்பவேண்டிய முகவரி
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
> கொழும்பு – 14

## இவ்வார 'ராசிபலன்' 21–06–2004, 27–06–2004

**பொ. சந்திரன்**

# ராசி பலன்

### இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | சுக் | புதன் சூரியன் சனி |
| | செவ்வாய் பூசம் சனி<br>சுக்கிரன் மிருகசீரிடம் செவ்<br>புதன் புனர்பூசம் குரு | | செவ் |
| | சூரியன் திருவாதிரை ராகு<br>குரு பூசம் சுக்கிரன்<br>சனி திருவாதிரை ராகு | | குரு |
| | | கேது | |

ஆனி 07 முதல் ஆனி 16 வரை

சந்திரன் கடகம் முதல் கன்னி வரை

**மேடம்:** அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

ராசிநாதன் செவ்வாய் நாலில் நீசமாக இருப்பது நல்லதல்ல. மேலும் சனியின் சாரத்தில் இருப்பதும் கூடாது. ராசியை குரு பார்ப்பது நல்லது. ராசியில் ராகு இருப்பது நல்லதல்ல. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல்ஆரோக்கியம் பாதிக்கலாம். பிரயாண வாய்ப்புண்டு. (2, 7) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. 7 இல் உள்ள கேது சிறு தடங்கலைக் கொடுக்கக் கூடும். 4 இல் செவ்வாய் பலம் குறைந்து இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். தாய்க்கும் நல்லதல்ல. தொழிலுக்குரிய சனி மூன்றில் சூரியன், புதனோடு இருப்பது நல்லது. தொழிற்துறை முன்னேறும். குருவின் இருப்பு பார்வையும் நல்லபலனை எதிர்பார்க்கலாம்.

**இடபம்:** கார்த்திகை 2,3,4. ராசிநாதன் சுக்கிரன் ஆட்சியாக இருப்பது விசேஷம் மேலும், செவ்வாயின் சாரத்தில் இருப்பது பரவாயில்லை. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய புதன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம்இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நாலுக்குரிய சூரியன் இரண்டில் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். (7, 12) உரிய செவ்வாய் 3 இல் நீசமாக இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகமும் குறையலாம். தர்ம கர்மாதிபனான சனி இரண்டில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். குரு நாலில் இருப்பது பெரிதாக நன்மை இல்லை. தீமையும் இல்லை. குருவின் பார்வை தொழில் ஸ்தானம் பெறுவது நல்லது.

**மிதுனம்:** மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

(1, 4) உரிய புதன் ஆட்சியாக இருப்பது சிறப்புடையது. மேலும் குருவின் நட்சத்திரசாரத்தில் இருப்பது விசேஷம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல்ஆரோக்கியம் உண்டு. பக்க உதவிகள் கிடைக்கும். வீடு, வாகனம் லாபம் தரும். தாய்க்கும் நல்ல பலன் உண்டு. இரண்டில் செவ்வாய் பலம் குறைந்து இருப்பதால் கையில் பணம் இருக்காது. (7, 10) உரிய குரு மூன்றில் இருப்பது கூடாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழில் துறையில் சரிவு ஏற்பட இடமுண்டு. மேலும் ராசியில் சனி இருந்து குருவை, 7 ஆம் வீட்டை, 10 ஆம் வீட்டைப் பார்ப்பதால் அந்தந்த வீடுகளால்வரும் பலன்களைப் பாதிக்கக் கூடும். கடவுள் வழிபாடு நன்மை செய்யலாம்.

**கடகம்:** புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.

ராசிநாதன் சந்திரன் தன் ராசி முதல் கன்னி வரை அதாவது ஒன்று முதல் மூன்று வரையான ராசிகளைக் கடந்து செல்வதானது நல்ல பலனைக் கொடுக்கும். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். இருப்பினும் ராசியில் செவ்வாய் பலமற்று இருப்பது நல்லதல்ல. இரண்டுக்குரிய சூரியன் 12 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. நாலுக்குரிய சுக்கிரன் தனது இன்னுமொரு வீட்டில் ஆட்சியாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். (7, 8) உரிய சனி 12 இல் இருப்பினும் குரு இரண்டாம் வீடான குடும்ப ஸ்தானத்தில் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். பத்துக்குரிய செவ்வாய் ராசியில் பல வீனமாவதால் தொழிற்துறையில் பெரிதாக முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது.

**சிங்கம்:** மகம், பூரம், உத்தரம்1.

ராசிநாதன் சூரியன் 11 இல் இருப்பது சிறப்பானது. ஆனால், ராகுவின் நட்சத்திரசாரத்தில் இருப்பது நல்லதல்ல. ராசியில் குரு இருப்பதும் பிரச்சினைதான். எடுத்த முயற்சி தாமதமானாலும் நிறைவேறும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2, 11) உரிய புதன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். நண்பர்களால் உதவியுண்டு. (4, 9) உரிய செவ்வாய் 12 இல் பலவீனமாவதால் பெற்றோருக்கு நல்ல தல்ல, வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். 7 ஆம் அதிபர் சனி 11 இல் இருப்பதால் திருமண பலன் உண்டு. குரு ராசியில் இருப்பதால் தடை ஏற்பட இடமுண்டு. 10ஆம் வீட்டில் சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். ராசிநாதன் 11 இல் இருப்பதால் வெளிநாட்டுப் பலன் உண்டு.

**கன்னி:** உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.

(1, 10) உரிய புதன் தனது இன்னுமொரு வீடான மிதுனத்தில் ஆட்சியாக இருப்பது சிறப்பானது. மேலும் குருவின் நட்சத்திரசாரத்தில் இருப்பது விசேஷமானது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. தொழிற்துறை முன்னேறும். புதிய தொழில் வாய்ப்பு உதயமாகும். (2, 9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கும் நல்லது. அதிஷ்டம் உண்டு. ஆலய வழிபாடு அமையும். (4, 7) உரிய குரு 12 இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தாய்க்கும் நல்லதல்ல. குடும்பத்தில் அமைதி இருக்காது. 10 இல் உள்ள சனி 4 ஆம், 7 ஆம் வீடுகளைப் பார்ப்பது அவ்வவ் வீடுகளில் வரும் நல்ல பலனைப் பாதிக்கலாம்.

**துலாம்:** சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.

ராசிநாதன் சுக்கிரன் தனது இன்னுமொரு வீடான இடபத்தில் ஆட்சியாக இருப்பது சிறப்பானது. மேலும் செவ்வாயின் நட்சத்திர சாரத்தில் இருப்பது பரவாயில்லை. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2, 7) உரிய செவ்வாய் 10 ஆம் வீட்டில் பலவீனமாக இருப்பதால் கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். 7 இல் ராகு இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. (4, 5) உரிய சனி 9 இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். குழந்தைகளின் செயற்பாடு திருப்தி தரும். 10 இல் செவ்வாய் 11 இல் குரு இருப்பதால் தொழிற்துறையில் லாபம் இருக்கும். பக்க உதவிகள் இருக்காது. ராசியில் கேது இருப்பது குறைதான்.

**விருச்சிகம்:** விசாகம் 4,அனுசம், கேட்டை

(1, 6) உரிய செவ்வாய் 9 இல் நீசமாக இருப்பது நல்லதல்ல. மேலும் சனியின் சாரத்தில இருப்பதும் சிறப்பல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். உடுத்த முயற்சி தாமதமாகலாம். (2, 5) உரிய குரு 10 இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3, 4) உரிய சனி 8 இல இருப்பது நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். இளைய சகோதரத்துக்கும் நல்லதல்ல. (7, 12) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி இருக்கும். பத்துக்குரிய சூரியன் 8 இல் இருப்பினும் 10 இல் குரு இருப்பதால் தொழிற்துறையில் முன்னேற்றம் இருக்கும். ராசியை சுக்கிரன் பார்ப்பது நல்ல பலனை கொடுக்கும்.

**தனு:** மூலம், பூராடம், உத்தராடம் 1.

(1, 4) உரிய குரு 9 இல் இருப்பது சிறப்பானது. மேலும், சுக்கிரனின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லதே. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. தெய்வீக வழிபாட்டில் ஈடுபட மனம் விரும்பும். வீடு, வாகனம் லாபம் தரும். இனபந்துக்கள் விசுவாசமாக இருப்பர். தாய்க்கும் நல்ல பலன் உண்டு. (2, 3) உரிய சனி 7 இல் இருப்பதால் கையில் பணம்இருக்கும். இளைய சகோதரத்துக்கும் நல்லது (7, 10) உரிய புதன் ஆட்சியாக இருப்பதால் திருமண வாய்ப்புண்டு. குடும்பத்தில் அமைதி இருக்காது. 7 இல் சனி இருப்பதால் தொழிற்துறை முன்னேறும். ராசியை சனி பார்ப்பது நல்லதல்ல. எதிர்பாராத இடையூறுகள் வரக்கூடும்.

**மகரம்:** உத்தரடாம்2,3,4, திருவோணம், அவிட்டம்1,2

(1, 2) உரிய சனி 6 இல் இருப்பது நல்லது. ஆனால், ராகுவின் சாரத்தில் இருப்பது கூடாது. எடுத்த முயற்சி தாமதமானாலும் நிறைவேறும். கையில் பணம் இருக்கும். காரணம் இரண்டாம் வீட்டைக் குருபார்ப்பதால் (4, 11) உரிய செவ்வாய் 7 இல் பலவீனமாக இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். நண்பர்களால் தொல்லை வரலாம். மூத்த சகோதரத்துக்கும் நல்லதல்ல. குரு 8 இல் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. பத்துக்குரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் தொழிற்துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும். 7 இல் செவ்வாய் நீசமாவதும் 8 இல் குரு மறைவதும் பெரும் குறை.

**கும்பம்:** அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.

(1, 12) உரிய சனி ஐந்தில் (5) இருப்பதால் நன்மையான பலனுக்கு இடமில்லை. மேலும் ராகுவின் நட்சத்திரசாரத்தில் இருப்பதும் பின்னடைவே. ஆனால், குரு ராசியைப் பார்ப்பது நல்லது. எடுத்த முயற்சி தாமதமாகும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2, 11) உரிய குரு 7 இல் இருப்பதால் கையில் பணம்இருக்கும். நண்பர்களால் உதவியுண்டு. மூத்த சகோதரத்துக்கும் நல்ல பலன் உண்டு. (4, 9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் பெற்றோருக்கு நல்லது. வீடு, வாகனம் லாபம் தரும். தெய்வீக அருள் கிட்டும். பத்துக்குரிய செவ்வாய் 6 இல் இருப்பதால் அதுவும் நீசமாக தொழிலில் முன்னேற்றம் இருக்காது. குருவின் இருப்பும் பார்வையும் நல்லது.

**மீனம்:** பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.

(1, 10) உரிய குரு 6 இல் இருப்பது கூடாது. மேலும் சுக்கிரனின் சாரத்தில் இருப்பது நல்லது. அத்துடன் சனியின் பார்வை குருவுக்கும் ராசிக்கும் 10 ஆம் வீட்டுக்கும்கிடைப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். தொழில்துறையில் பின்னடைவு வர வாய்ப்பு உண்டு. (2, 9) உரிய செவ்வாய் 5 இல் (ஐந்து) இருப்பது அதுவும் நீசமாக கையில் பணம்இருக்காது. பிதாவுக்கும் நல்லதல்ல. (4, 7) உரிய புதன் ஆட்சியாக இருப்பதால் வீடு வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்பு உண்டு. இருப்பினும் குருமறைவதால் திருமண முயற்சி தாமதமாகலாம். கேந்திரத்தில் இருந்து சனியின் பார்வை சில தடைகளை ஏற்படுத்தலாம்.

# பரபரப்பான விற்பனையில்

மே 2004 இதழ்




## கம்ப்யூட்டர் டுடே

இது உங்கள் குடும்ப சஞ்சிகை

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!

சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

அச்சிட்டு வெளியிடுபவர்கள்:
உதயன் பப்ளிஷர்ஸ்
தொடர்புகளுக்கு: 011 4 734401

## EXPOAIR எக்ஸ்போ எயார்

your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...

யாழ் பயணத்தின் போது
றோல்ஸ் றொய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை
அனுபவியுங்கள்!

யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 011 4512666 (3 Lines) Fax: 011 4514700
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com

இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை

மாகாண சபைத் தேர்தல் 2004 - கொழும்பு மாவட்டம்

## உரிமைக்கு குரல் கொடுப்போம்!
## உயர்வுக்கு வழி சமைப்போம்!




நேர்மையான சேவைக்கு எங்கள் தெரிவு !

## திருகோணமலையில்...

சுடர் ஒளி · உதயன் விளம்பர பணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

திருகோணமலையில் தொடர்புகளுக்கான
தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670

விளம்பர முகாமையாளர்
'உதயன்' 'சுடர் ஒளி' விளம்பரப்பிரிவு
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு – 14.
011 4734401 – 3, 011 2399866 – 70

## வீட்டு யுத்தம் தீர்ந்தது!

வளரும் சிறுபிள்ளைகளின் பசியைத் தூண்டும் சுவைமிக்க விட்டமின் பானம்

Hungry Plus

வளரும் பருவத்திலுள்ள சிறுபிள்ளைகளுக்கு உணவு ஊட்டப்போனால் வீடே யுத்த களமாகும். அதட்டியும் மிரட்டியும் அடித்தும் அவர்களுக்கு உணவு ஊட்டுவதற்குள் தாய்மாருக்கு உயிரே போய்விடும்...ஆனால், இப்போது இப் பிரச்சினைக்குச் சிறந்த பரிகாரம் கிடைத்துள்ளது. அதுதான், ஹங்ரி பிளஸ் விட்டமின் பானம்!

சிறுவர்களின் பசியுணர்வை இயற்கையாகத் தூண்டும் லைசின் மற்றும் விட்டமின்கள் அடங்கிய சுவைமிக்க ஹங்ரி பிளஸ் பானம், பிள்ளைகளின் நலமான வாழ்வுக்கும் உற்ற துணையாகும்.




ஹங்ரி பிளஸ்
பசியைத் தூண்டும்...

இப்போது, முன்னணி மருந்தகங்களிலும் சுப்பர் மார்க்கட்டுகளிலும் வாங்கலாம்.

Marketed by: ARKEM PHARMACEUTICALS Tel: 011- 2470290


இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 ஜூன் 21 ஆம் திகதி வெளியிடப்பட்டது.